பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 19 சனிக்கிழமை (03.07.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 219

# புனர்வாழ்வு என்ற பெயரில் காடு அழிப்பில் ஈடுபடுத்தப்படும் முன்னாள் போராளிகள்!

## அனைவருக்கும் பொதுமன்னிப்பு வேண்டும் என்கிறார் சிவசக்தி ஆனந்தன்



கொழும்பு, ஜூலை 03

புனர்வாழ்வு என்ற பெயரில் முன்னாள் போராளிகள் பலர் படையினரால் காடுகளை அழிக்கும் வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இந்நாட்டில் மாறிமாறி வந்த அரசுகள் தமிழினத்தின் மீது ஏற்படுத்திய துவேசம்தான் இந்த நாட்டில் போராட்டம் ஒன்றுக்கான சூழ்நிலையை ஏற்படுத்தியது. எனவே அதற்கு இன்றைய அரசும் பொறுப்பேற்று அவர் கள் அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்க வேண்டும்.

-இவ்வாறு கூறினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்.

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யுத்தம் முடிந்து சுமார் 13 மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் இடைக்கால நிதி நிலை அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது. இதில் 2004ஆம் ஆண்டு ஆழிப்பேரலையினால் ஏற்பட்ட பாதிப்புகளை விடவும் அண்மைய போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்குப் பிரதேசத்துக்கான அபிவிருத்திக்கும், உட்கட்டுமானத்துக்கும் நன்கு செழிப்புற்றுள்ள தென்பகுதிக்கு ஒதுக்கியுள்ளதைவிடவும் குறைவான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்த அரசு வடக்கு, கிழக்கு மக்களின் மனங்களை வெல்லவேண்டிய தேவையில்லை என்பதை நன்கு வெளிப்படுத்தி உள்ளது.

(24ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவின் நிபுணர் குழுவுக்கு ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்பு

கொழும்பு,ஜூலை3

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் இறுதிக்கட்டப் போர்ச் சம்பவங்கள் தொடர்பாகத் தமக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ - மூன் நிபுணர் குழு ஒன்றை நியமித்ததை ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்றுள்ளது.

வன்னியில் இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் குறித்த விசாரணைகளை நடத்தவும் இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ - மூனுக்கு ஆலோசனை வழங்கவும் ஐ.நா. நிபுணர் குழு நியமிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது என ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி கெத்தரின் அன்டன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியும், பிரதமரும் அமைச்சுப் பதவி வகிக்கலாமா?

### விவாதிக்க சபாநாயகர் அனுமதித்தார்

கொழும்பு,ஜூலை3

ஜனாதிபதியும் பிரதமரும் அமைச்சுப் பதவிகளை வகிக்கக்கூடாது என்று ஐ.தே. கட்சி எம்.பி. ரவி கருணாநாயக்கவால் ஏற்கனவே நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப் பட்டு விவாதத்துக்கு எடுக்காமல் சபாநாயகரால் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனிநபர் பிரேரணையைத் திருத்தங்களுடன் விவாதத்துக்கு எடுக்க சபாநாயகர் நேற்று அனுமதி வழங்கினார்.

ஜனாதிபதியும் பிரதமரும் அமைச்சுப் பதவிகளை வகிக்கப் பொருத்தமற்றவர்கள் என்றும் அந்தப் பிரேரணை திருத்தப்பட வேண்டும் என்றும் சபாநாயகர் கூறினார். நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியும், பிரதமரும் அமைச்சுப் பதவிகளை வைத்திருக்கக் கூடாது என்றொரு தனி

(24ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. நிபுணர் குழு நியமனம்: இலங்கை நிலைப்பாடு சரியானதே

### சீனாவின் நிலைப்பாடு இதுவென அறிவிப்பு

கொழும்பு,ஜூலை,3

ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழு தொடர்பில் இலங்கை அரசு கொண்டுள்ள நிலைப்பாடு சரியானதென சீனா அறிவித்துள்ளது.

யுத்தக் குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உள்நாட்டு ரீதியான விசாரணைகளை நடத்த இடமளிக்கப்பட வேண்டும் எனவும், அதற்கான தகுதி இலங்கையிடம் காணப்படுகிறது எனவும் சீனா சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் உள்விவகார சூழ்நிலையை ஸ்திரப்படுத்த ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் சர்வதேச நாடுகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென சீனா குறிப்பிட்டுள்ளது.

இலங்கை அரச தரப்பினரும், அதன் மக்களும் உள்விவகாரப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணக் கூடிய இயலுமையைக் கொண்டிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தக் குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவொன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்கனவே நியமித்துள்ளார் எனச் சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் குன் காங் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தக் கூடிய புறச்சூழலை ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் உள்ளிட்ட சர்வதேச சமூகம் உருவாக்க வேண்டுமென சீனா வலியுறுத்தியுள்ளது. (அ-சி)

## ஆஸியில் தஞ்சம் கோரும் தமிழ் அகதிகள் விரக்தி அடைந்து தற்கொலை முயற்சி!

கொழும்பு,ஜூலை3

ஆஸ்திரேலியாவில் சட்டவிரோதக் குடியேற்றவாசிகளுக்கான தடுப்பு முகாம் மற்றும் கிறிஸ்மஸ் தீவில் உள்ள தடுப்பு முகாம் ஆகியவற்றில் இலங்கைத் தமிழ் அகதிகள் தற்கொலை செய்து கொள்ள முயற்சி மேற்கொள்வது அதிகரித்துள்ளது. இதனால் அங்கு அகதிகளுக்காகக் குரல் கொடுப்பவர்கள் அரசின் மீது ஆத்திரம் கொண்டுள்ளனர் எனச் செய்திகள் வெளிவந்துள்ளன.

ஆஸியிலுள்ள வில்லவூட் தடுப்பு முகாமில் நீண்டகாலமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள 20 வயது இளைஞர் ஒருவரே தற்கொலை செய்துகொள்ள முயற்சி செய்துள்ளார். அரசியல் தஞ்சம் கிடைப்பதில் ஏற்பட்டுள்ள தாமதமே இந்தத் தற்கொலை முயற்சிக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை 2 மணிக்கு இவர் தூக்கில் தொங்கி

(24ஆம் பக்கம் பார்க்க)

## பிரச்சினை மிக்க யுகம் முடிவுக்கு வந்த பின்னர் எதிர்காலம் நோக்கி நாடு காலடி வைத்துள்ளது

### உக்ரேய்னில் ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை3

பிரச்சினை மிக்க யுகம் ஒரு வருடத்துக்கு முன்னர் முடிவுக்கு வந்தபின்னர் இலங்கை நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் இப்போது எதிர்காலத்தை நோக்கிக் காலடி வைத்துள்ளது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உக்ரேய்ன் ஜனாதிபதி இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு வழங்கிய பகல் போசனத்தின்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். ஜனாதிபதி தொடர்ந்து அங்கு கூறியவை வருமாறு:-

முழு நாட்டினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டபின்னர் பரந்த புனரமைப்பு, பொருளாதார, சமூக மற்றும் அடித்தள வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் இனங்களுக்கிடையில் ஒற்றுமை, நட்புறவை மேம்படுத்தும் விடயங்களில் இலங்கை மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

நிலையான பொருளாதார அபிவிருத்திக்கான சமூக மேம்பாடும் மக்களுக்கு நேர்மையாக சேவையாற்றவேண்டும் என்ற உக்ரேன் ஜனாதிபதி யனுகோக்கி தெரிவித்த கருத்தும் எமது நாட்டுக்கும் பொருந்தும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இலங்கையும் உக்ரேனும் நாட்டின் மக்களது மேம்பாட்டுக்காக இணைந்து செயற்படும் நாடுகள் எனவும் தெரிவித்தார்.

பயங்கரவாதத்தால் பாதிக்கப்படும்

(24ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு கலந்துகொள்ளாத நிலையில் தமிழ்க் கட்சிகள் நேற்றுக் கூடிப் பேசின

### சந்திரகாந்தன், வரதராஜப்பெருமாளும் கலந்துகொண்டனர்

கொழும்பு,ஜூலை3

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மீள் குடியேற்றம், இராணுவக் குடியிருப்புகள், இராணுவ மயமாக்கல், உயர் பாதுகாப்பு வலயங்கள் மற்றும் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தனியார் காணிகள் போன்ற விடயங்களைக் கையாளுதல் ஆகியவற்றுக்குத் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி., தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். பத்மநாபா பிரிவு, சிறிரெலோ, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், ஜனநாயக மக்கள் முன்னணி ஆகிய தமிழ்க் கட்சிகள் நேற்று ஒன்றுகூடி பேச்சு நடத்தின.

இந்தக் கூட்டத்தில் தந்தை செல்வாவின் புதல்வர் சந்திரஹாசன், வடக்கு, கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர்

(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வெளிநாட்டுப் படைகளினால் உள்நாட்டு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது

## உக்ரேனில் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 03

நாட்டின் உள்ளகப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் நாட்டு மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானது. எனினும், வெளிநாட்டுப்படைகள் உள்நாட்டுப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக முடியாது - இப்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

உக்ரேன் சென்றிருக்கும் ஜனாதிபதி நேற்றுமுன்தினம் மாலை அந்நாட்டின் தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட அதிகாரிகள் மத்தியில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

பயங்கரவாதிகளை தோற்கடிப்பதில் இலங்கைக்கு கிடைத்துள்ள அனுபவமானது பயங்கரவாத செயற்பாடுகளின் சவால்களுக்கு முகம் கொடுத்து வரும் ஏனைய நாடுகளுக்கு சிறந்த முன்னுதாரணமாகும்.

எமது படையினரின் அர்ப்பணிப்பான செயற்பாட்டின் பயனாகவே நாட்டுக்கு இந்தப் பெரிய வெற்றி கிடைத்தது.

பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதில் எமக்குக் கிடைத்த அனுபவத்தை ஏனைய நாடுகளுடன் பகிர்ந்து கொள்வதற்கு நாம் தயார். இப்படி ஜனாதிபதி கூறினார்.

ஜனாதிபதியின் மனைவி சிராந்தி ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ், ஜனாதிபதியின் வெளிவிவகார இணைப்புச் செயலாளர் சச்சின் வாஸ் குணவர்தன, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க உள்ளிட்ட இலங்கையிலிருந்து உக்ரேன் சென்றிருக்கும் ஏனைய பிரதிநிதிகளும் இதில் கலந்துகொண்டனர்.



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உக்ரேன் தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகத்திலுள்ள பாதுகாப்பு அருங்காட்சியகத்தைப் பார்வையிடும்போது எடுக்கப்பட்ட படம். படத்தில், ஜனாதிபதியின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷவும், உக்ரேன் பாதுகாப்பு அமைச்சர் மைக் கைலோ ஜேஸையும் காணப்படுகின்றனர்.

## 2009ஆம் ஆண்டு நாட்டில்
# யானைகள் - மனிதர்கள் மோதலில் 50 மனிதர்கள், 228 யானைகள் பலி!

கொழும்பு, ஜூலை 03

2009 ஆம் ஆண்டு நாட்டில் இடம்பெற்ற யானைகளுக்கும், மனிதர்களுக்கும் இடையிலான மோதல்களின்போது 50 பேர் உயிரிழந்தனர் என்று பிரதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

அச்சல ஜாகொட எம்.பி. நேற்றுக் காலை நாடாளுமன்றில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தபோதே பிரதி அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

2009 ஆம் ஆண்டின் இறுதியில் நாட்டில் கணக்கெடுக்கப்பட்ட யானைகளின் எண்ணிக்கை 6 ஆயிரம் ஆகும். கடந்த வருடத்தில் யானைகளுக்கும், மனிதர்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களால் 50 பேர் கொல்லப்பட்டனர். அதேபோல், 228 யானைகளும் கொல்லப்பட்டன.

இந்த மோதலைக் குறைப்பதற்காக நாம் உத்தேச திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளோம். வேலி அமைத்தல், கெடுதி விளைவிக்கக்கூடிய யானைகளை விரட்டல், அநாதையான யானைக் குட்டிகளைப் பராமரித்தல், யானைகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் யானை - மனிதன் மோதல் இடம்பெறும் இடத்தில் நிறுவனம் ஒன்றை அமைத்தல் போன்ற வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும். - என்றார். (சி)

## பாலசுப்பிரமணிய வித்தியாசாலைக்கு சமையல் கூடம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலைக்கு உலக உணவு திட்டத்தினால் சமையலறையொன்று அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

இதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. சமையலறைகளின்றி சமையல்கள் சுவர் ஒதுக்குப் புறங்களிலே தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (50-100)

# விடுவிக்கப்பட்ட பகுதிகளில் தமது முகாம்களை நிர்வகிக்க முடியாத நிலையில் இராணுவத்தினர்!

## பலர்தப்பி ஓடுகின்றனர் என்கிறார் சரத் பொன்சேகா



கொழும்பு, ஜூலை 03

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பதால் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் அமைக்கப்படும் இராணுவ முகாம்களை நிர்வகிப்பதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது என்று ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எம்.பியுமான ஜெனரல் சரத் பொன்சேகா நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு - செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

படையினருக்கு 50 ஆயிரம் வீடுகளை அமைத்துக் கொடுப்பதாகக் கூறி அரசு, 'எமக்காக நாம்' என்ற நிதியத்தின் ஊடாக நிதியைச் சேகரித்து வெறும் 1,500 வீடுகளை மாத்திரமே நிர்மாணித்தது.

ஒரு வீட்டை நிர்மாணிப்பதற்கு 47 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தை செலவிட்டதாக அரசு கூறுகிறது. ஆனால், அந்த வீடுகள் 10 லட்சம் ரூபாவுக்குக் கூடப் பெறுமதியில்லை

காடுகளில் நிர்மாணிக்கப்பட்ட இந்த வீடுகளைப் பெற ஒருவர் 8 லட்சம் ரூபாவை செலுத்தவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த வீடுகள் இலவசமாக வழங்கப்படும் என்றே முதலில் கூறப்பட்டது. இதனால், இராணுவத்தினர் இதற்கு எதிராகக் குரல் கொடுத்தனர்.

உயிரிழந்த படையினரின் உறவினர்களுக்கு ஒன்றரை லட்சம் ரூபா வழங்கப்படுகிறது. இது மரணச் செலவுக்குக் கூடப் போதாது. இதை 4 லட்சமாக அதிகரித்துக் கொடுக்கவேண்டும் என்று நான் இராணுவத் தளபதியாக இருந்தபோது மூன்று தடவைகள் கூறினேன். அது வழங்கப்படவில்லை.

படையினரின் ஒய்வூதியத்தில் முரண்பாடுகள் நிலவுகின்றன. இந்த முரண்பாடுகள் நீக்கப்படவேண்டும்.

யுத்தத்தில் மிகவும் திறமையாகச் செயற்பட்ட படையினர் பலர் வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் சதித்திட்டத்தில் ஈடுபட்டனராம். எனக்குக் கீழே அவர்கள் பணிபுரிந்ததால்தான் அவர்களுக்கு இந்த நிலைமை.

தற்போது இராணுவத்திலிருந்து தப்பியோடுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால், விடுவிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களை நிர்வகிப்பதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

பயங்கரவாத செயற்பாடுகளுக்கு நிதி சேகரித்து வழங்கிய கே.பியின் நிலை என்ன? கே.பி. இப்போது சுதந்திரமாக நடமாடுகின்றார். அவர் முதலமைச்சராகும் வாய்ப்புக்கள் உள்ளன என்று கூறப்படுகின்றது. அரசு அவரிடம் உள்ள பணத்தைக் கையாடவா முயற்சிக்கிறது? அவர் அரச செலவில் தேனிலவைக் கொண்டாடுகிறார். கே.பி. கைதுசெய்யப்படும்போது சில விடயங்கள் கூறினார். அவை என்னவென்று நான் இப்போது கூறமாட்டேன்.

முதலில் இந்நாட்டில் சட்டத்தையும், நீதியையும் நிலைநாட்டுங்கள். அதன்பின்னர் நாட்டை அபிவிருத்தி செய்வதுபற்றி யோசியுங்கள். - என்றார்.

# எம்.பிக்களின் சொற்பிரயோகம் குறித்து சபாநாயகர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 03

நாடாளுமன்ற அமர்வுகளைப் பார்ப்பதற்காக பாடசாலை மாணவர்களும் நாடாளுமன்றத்துக்கு வருவதால் சபையில் உரையாற்றும் எம்.பிக்கள் சொற்களைக் கவனமாகவும் நாகரிகமாகவும் பயன்படுத்த வேண்டும் என்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நேற்று அனைத்து எம்.பிக்களுக்கும் உத்தரவிட்டார்.

நாடாளுமன்றில் நேற்று வரவு - செலவுத் திட்ட விவாதம் தொடங்குவதற்கு முன்னதாக சபாநாயகர் இந்த உத்தரவை விடுத்தார். அவர்இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிலையியல் கட்டளைகளுக்கு அமைவாகவே உரையாற்ற வேண்டும். சம்பந்தப்பட்ட விடயங்களை மாத்திரமே பேசவேண்டும்.

பாடசாலை மாணவர்கள் இங்கு வருவதற்கு நாம் அனுமதி வழங்கியிருக்கிறோம். அதனால் உறுப்பினர்கள் சொற்களை மிகக் கவனமாகப் பாவிக்கவேண்டும்.

நான் இந்த உத்தரவை எதிர்க்கட்சி மற்றும் ஆளும் கட்சி எம்.பிக்கள் அனைவருக்குமே விடுக்கின்றேன். - என்றார். (சி)

# உணவு விஷமாகியதால் 25 பேர் பாதிக்கப்பட்டனர்

## கட்டுநாயக்காவில் சம்பவம்

கொழும்பு, ஜூலை 03

கட்டுநாயக்க முதலீட்டு வலயப் பகுதியில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் 25 பேர் உணவு விஷம் அடைந்ததன் காரணமாக நீர் கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றது.

இந்த சம்பவத்துக்கான காரணத்தை கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளில் வைத்தியசாலை நிர்வாகம் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை கட்டுநாயக்கப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (சி)

SHAMROCK
A/L 2012
புவியியல்
வியா 5 pm., சனி 4 pm
A.ராஜா, B.A. (Geo.Spl)
★ Gr. 1 முதல் O/L வரை
★ ENG. Medium Gr 6 to 11
★ ENG. Lit. Gr 10, 11
★ புலமைப்பரிசில் (5) (பயிற்சிப் பரீட்சைகளுடன்)
O/L REPEAT

அதிரடி விலைக்கழிவு
புகைப்படங்கள் பிரதியாக்கம்
10 X 30 - 120/=
12 X 24 - 130/=
மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/568802)

வீடு விற்பனைக்கு
யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட அரியாலை சாஸ்திரியார் ஒழுங்கையில் 2 பரப்புக் காணியில் கிணற்றுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. (மாம்பழம் சந்திக்கு அண்மையில்).
தொடர்பு: 0776230569, 0213217817

காணி விற்பனைக்கு
உரும்பிராய், செல்வபுரம், சிவன் கோயிலடி அருகில் கிணற்றுடன் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 [illegible] 75

# மரண அறிவித்தல்

## திருமதி கலாதேவி நடராஜா

(ஆசிரியர், யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலாதேவி நடராஜா நேற்று (02.07.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அ.சரவணமுத்து (ஓய்வுபெற்ற ஆசிரியர்)-திருமதி ச.செல்வராணி (கண்ணம்மா) தம்பதியரின் அன்பு மகளும் பேராசிரியர் விக்னேஸ்வரன் (அவுஸ்ரேலியா), காலஞ்சென்ற பேராசிரியர் மகேஸ்வரன், குமரேசன் (லண்டன்) ஆகியோரின் சகோதரியும் நடராஜாவின் ( ஓய்வுபெற்ற ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி) அன்பு மனைவியும் பிரபுவின் (3ஆம் வருட மருத்துவ மாணவன், யாழ். மருத்துவ பீடம்) அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

'சாந்தி நிலையம்',
பொற்பதி வீதி,
கொக்குவில்,
தொ.இ. 021 222 6436

தகவல்:
சு.நடராஜா
(கணவர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# உடனிருந்தே கொல்லும் வியாதி...?

அரசாங்கத்தின் அடுத்த நிகழ்ச்சித் திட்டம் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதே என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அதிலும் பிரதானமாக, ஜனாதிபதியின் பதவிக்காலம் எத்தனை தடவைகளாகவும் இருக்கலாம் என்ற ஏற்பாட்டைச் செய்வதிலேயே கூடுதல் கவனம் செலுத்தப்படுவதாக உள்வீட்டுத் தகவல்கள் தெரியப்படுத்துகின்றன. வரவு-செலவுத்திட்ட விவாதம் முடிவுற்ற பின்னர் இது விடயம் அரசியல் வளாகத்தில் பிரதான பேசு பொருள் ஆகிவிடும் என்று சொல்லப்படுகிறது.

நிறைவேற்று ஜனாதிபதியின் பதவிக்காலத்தை இப்போது உள்ளதைவிட அதிகரிப்பதை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி வன்மையாக எதிர்க்கிறது. அது வெளிப்படையானது.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்கி, நாடாளுமன்றத்துக்கு, அதாவது மக்களுக்குப் பதில் சொல்லக்கூடிய பிரதமர் பதவியை உருவாக்குவதே சிறந்தது என்பது ஐ.தே.கட்சியினதும் மற்றும் பல தரப்புகளினதும் நிலைப்பாடு.

நிறைவேற்று ஜனாதிபதியின் பதவிக்காலத்துக்கு வரையறை இல்லாமல், அதனை நீடிக்க வகை செய்வது குடும்ப ஆட்சிக்கும் சர்வாதிகாரத்துக்கும் (Totalitarianism) வழிவிடும் என்பது இன்னொரு சாராரின் கருத்து.

இதன் காரணமாக, அரசாங்கத்தரப்பில் உள்ள சில பிரிவுகள் தமக்குள், தமது உண்மையான விருப்புகளை அல்லது தெரிவுகளை மனதுக்குள் வைத்துப் புளுங்கிக் கொண்டிருக்கின்றன- என்ற தகவல்களும் வெளிவராமல் இல்லை!

அரசாங்கத்துடன் சேர்ந்தியங்கும் இடதுசாரிக் கட்சிகள்- வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண, டியு குணசேகர ஆகியோர் இதனை வெளிப்படையாகவே சொல்ல ஆரம்பித்துவிட்டனர்.

இன்னும் சில வாரங்களில் அரசாங்கத்தின் தாய்க் கட்சி என்று வர்ணிக்கக்கூடிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பிரமுகர்கள் பலரும் ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தை இரண்டிலிருந்து அதிகரிப்பதை எதிர்த்துக் கருத்துக் கூறலாம் அல்லது வேறு விதமாக முன்வைக்கலாம் என்று அரசியல் ஆரூடங்கள் கசியத் தொடங்கி உள்ளன. இந்தக் குழுமத்தில் மூத்த அமைச்சர்கள் சிலரும் அடங்குவதாகக் கூறப்படுகிறது.

**தக்க தருணத்துக்கு அதனை ஒத்திப்போடாமல், தமது ஆட்சேபத்தை உடனே தெரிவிப்பதனால் தமக்கு உண்டாகக்கூடிய பாதகமான பலன்களை நினைத்து அவர்கள் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தாமல் இருப்பதாகவும் பேசப்படுகிறது.**

**இவற்றுக்கிடையே -**

**ஜனாதிபதி ஆட்சிக்காலத்தை அதிகரிக்கும் உத்தேச அரசமைப்புத் திருத்தத்திற்கான எதிர்ப்பு ஜாதிக ஹெல உறுமைய கட்சியில் வேகமடைந்து வருவதாக சிங்கள ஊடகங்களில் தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.**

ஜனாதிபதியின் பதவிக்காலத்தை இரண்டு தடவைகள் என்று வரையறை செய்யாமல் பல தடவைகள் ஆக்குவதற்கு இப்போது அந்தப் பதவியை வகிப்பவருக்கு அதீத ஆதரவு நல்கியவர் ஜாதிக ஹெல உறுமயவின் வண.மேத்தானந்த எல்லாவல தேரர்.

அவ்வாறு ஓர் அரசமைப்பு ஏற்பாடு உருவாக்கப்பட்ட பின்னர், இலங்கையைப் பரிபூரண சிங்கள பௌத்த சாம்ராஜ்யம் ஆக்கலாம் என்ற பெருநம்பிக்கை அவரிடம் குடிகொண்டிருந்ததாகவும்-

அதனைச் சாதகமாக்கித் தமது ஆட்சி அதிகாரத்தைப் பல வருடங்களுக்குக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளலாம் என்று ஜனாதிபதி மஹிந்தா திட்டம் வகுத்தார் என்றும், இப்போது அரசல் புரசலாக சமாச்சாரங்கள் வெளிவருகின்றன.

ஆனால் வண. மேத்தானந்த எல்லாவல தேரர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்படாததால் ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கை மாறிவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

ஜனாதிபதியின் பதவிக்காலத்தை வரையறை செய்யாதிருப்பது என்ற மஹிந்த அரசின் இலக்கை அடைவதற்கு அரசாங்கத்துக்குள்ளேயே கன்னை பிரியும் நிலைமை ஒன்று உள்வெடித்துள்ளது.

அரசாங்கத்துக்கும் - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் - ஜாதிக ஹெல உறுமயவுக்கும்- இடையில் கசப்புணர்வு ஏற்படுவதற்கு, பௌத்த தேரர் அல்லாத சாதாரண பிரசையான சம்பிக்க ரணவக்கவுக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டதும் ஒரு காரணம் என்று சொல்லப்படுகிறது.

கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்தின் முன்னால் ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவில் பெரிய எடுப்பிலான ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதும் ஜனாதிபதியை இக்கட்டுக்குள் மாட்டிவிடும் மறைமுக நோக்கம் கொண்டதே என்றும் அரசியல் வட்டாரங்களில் முணுமுணுக்கப்படுகிறது.

அரசாங்கத்துக்கும் - மிகக் குறிப்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும்- ஜாதிக ஹெல உறுமயவுக்கும் இடையே தோன்றியுள்ள கசப்புணர்வு இனிவரும் மாதங்களில் அரசியல் களத்தை தலைகீழாக்கிவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை... !

# ஐ.நாவின் நிபுணர் குழுவை வரவேற்கிறார் ஜெயலலிதா

## கருணாநிதியும் போர்க்குற்றவாளி என்கிறார் அவர்

சென்னை, ஜூலை 03

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான் கீ மூன் அமைத்துள்ள நிபுணர் குழுவை தாம் வரவேற்கிறார் என தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கையில் நடந்து முடிந்த உள்நாட்டுப் போரில் உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்களை ஆராய்வதற்காக, இந்தோனேசியாவின் முன்னாள் தலைமைச் சட்டத்தரணியின் தலைமையில் மூன்று பேர் கொண்ட ஒரு குழுவை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் பான் கி மூன் நியமித்திருக்கின்றமை வரவேற்கத் தக்கது.

ஐ.நா. சபையின் பிரதிநிதிகள் குழுவிற்கு விசா வழங்குவதை இலங்கை அரசு தனது இயல்பிற்கு ஏற்ப மறுத்து வருகிறது. இது இலங்கை அரசின் குற்ற உணர்வை வெளிப்படுத்துகிறது. மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கு மறைக்க எதுவுமில்லை என்றால், ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் சுதந்திரமாக இலங்கைக்குள் வர அனுமதித்து, எங்கு வேண்டுமானாலும் செல்ல ஆட்சேபனை தெரிவிக்கக்கூடாது.

பான் கி- மூன் அறிவித்துள்ள மூவர் குழுவில் இடம் பெற்றுள்ளவர்கள் இந்தோனேசியா, அமெரிக்கா மற்றும் தென்னாபிரிக்க நாடுகளைச் சேர்ந்த சட்ட வல்லுநர்கள். இவர்கள் சுதந்திரமாக இலங்கைக்குள் புக அனுமதிக்கப்பட்டால், இந்த மேன்மை மிகுந்த குழு ராஜபக்ஷவால் மறைக்கப்பட்ட அத்து மீறல்களை, மனித உரிமை மீறல்களை, கொடுமைகளை வெளிக்கொணரும் என்பதில் ஐயமில்லை.



2009.04.27 அன்று போர் நிறுத்தம் ஏற்படாதபோது, போர் நிறுத்தம் ஏற்பட்டு விட்டதாகத் தெரிவித்து, நிராயுத பாணிகளாக இருந்த அப்பாவி இலங்கைத் தமிழர்களை இலங்கை இராணுவத்திற்கு இரையாக்கியதன் மூலம் நேரடியாக போரில் பங்கேற்காத, அப்பாவி மக்களுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தி அவர்களைக் கொலை செய்ய இலங்கை அரசுக்கு முதல்வர் உதவி புரிந்திருக்கிறார்.

இரண்டே நாள்களில் வன்னியில் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவி இலங்கைத் தமிழர்கள் மாண்டனர்!

நேரடியாக போர் நடவடிக்கைகளில் பங்கேற்காத மக்களுக்கு எதிராக திட்டமிட்டுத் தாக்குதலைத் திருப்பிவிடும் செயல் போர்க் குற்றமாகும் என சர்வதேச சட்டம் கூறுகிறது. எனவே, கருணாநிதியும் ஒரு போர்க்குற்றவாளிதான்.

ஐக்கிய நாடுகள் சபை பிரதிநிதிகள் குழு இலங்கை செல்லும்போது, அ.தி.மு.கவைச் சேர்ந்த குழு ஐக்கிய நாடுகள் குழுவைச் சந்தித்து, கருணாநிதி ஒரு போர் குற்றவாளி என்று பிரகடனம் செய்யத் தேவையான ஆதாரங்களை அளிக்கும்.- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-சி)

# மீசாலை ரயில் நிலைய புனரமைப்புப் பணி; ஆரம்பநிகழ்வில் மத்திய மாகாண முதலமைச்சர்

## இன நல்லுறவை வளர்க்கும் முயற்சியாக

யாழ்ப்பாணம், ஜூலை 3

மத்திய மாகாண சபையின் முதலமைச்சர் சரத்ஏக்கநாயக்கநேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார்,

வடக்கு - தெற்கு உறவுப்பாலத்தை மேம்படுத்தும் ஒரு திட்டமாக மீசாலை ரயில் நிலையத்தைப் புனரமைப்பதற்கான ஆரம்ப நிகழ்விலும் அவர் நேற்றுக் கலந்துகொண்டார்.

முதலமைச்சருடன் மத்திய மாகாணப் பிரதம செயலாளர்கள், மாகாண அமைச்சர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெற்ற இந்த ஆரம்ப நிகழ்வில் முதலமைச்சர் குழுவினருடன் ரயில்வே திணைக்கள அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

வடக்கு-தெற்கு மக்களிடையேயான இன நல்லுறவைக் கட்டியெழுப்பும் திட்டத்தின் ஒரு முயற்சியாகவே மீசாலை ரயில் நிலையப் புனரமைப்புப் பணி மேற்கொள்ளப்படவுள்ளதாக முதலமைச்சர் குழுவினருடன் வருகை தந்த மத்திய மாகாண சபையின் உயரதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

மீசாலை ரயில் நிலையத்தை முழுமையாகப் புனரமைத்து வழங்கும் பொறுப்பை மத்திய மாகாணசபை ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் இதற்கென முதற்கட்டமாக 40இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுப் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இது தொடர்பான ஆரம்ப நிகழ்வே நேற்று இடம்பெற்றதாகவும் அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

**வடக்கு-தெற்கு மக்களிடையேயான இன நல்லுறவை வளர்க்கும் இந்த முயற்சி நிச்சயம் வெற்றியளிக்கும் எனவும் அவர் மேலும் கூறினார். (50-224)**

## தரம் 5 புலமைப் பரிசில் முன்னோடிப் பரீட்சை

**எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களை பரீட்சைக்குத் தயார்ப்படுத்துவதற்கான முன்னோடிப் பரீட்சை காயத்திரி பப்ளிகேஷன் நிறுவனம் நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் 12 மணி வரை நடத்தவுள்ளது.**

இரண்டு பகுதி வினாத்தாள்களை கொண்ட இப்பரீட்சை அனுமான வினாக்களைக் கொண்டதாக இருக்கும் இப்பரீட்சையில் திறமையாகச் சித்தியடையும் மாணவர்களுக்குப் பரிசில்களும் சித்தியடையும் அனைவருக்கும் சான்றிதழ்களும் வழக்கப்படும்.

மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு பதக்கங்களும் தேசிய ரீதியில் சித்தியடையும் மாணவருக்கு 24 கரட் தங்கதிலான தங்கப் பதக்கமும் வழங்கப்படவுள்ளன.

நாட்டில் உள்ள 24 மாவட்டங்களிலும் உள்ள சகல தமிழ்மொழி மூல பாடசாலைகளிலும் பரீட்சை நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ- 1)

## நினைவுப் பேருரை

சைவ வித்தியா விருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் சு.இராஜரட்ணத்தின் நினைவுப் பேருரை நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருநெல்வேலியில் அமைந்துள்ள சங்க ஆராதனை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.சின்னத்தம்பி 'பாடசாலைக் கல்வி இலவசக் கல்வி ஆகுமா?' என்ற தலைப்பில் நினைவுப் பேருரையாற் றுவார். (ஒ-1)

# நவாலி இடிகுண்டு நீர்த்தேக்கத்தை புனரமைப்பதற்கு ஆவன செய்க

## பிரதேச சபைச் செயலாளரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 3

கட்டுடை - நவாலி வீதியின் அருகேயுள்ள நவாலி இடிகுண்டு நீர்த்தேக்கதிட்ட திட்டத்தை புனரமைப்புச் செய்ய ஆவன செய்ய வேண்டும். இதற்கென ஐ.நா. செயற்படுத்துகை திட்டத்தினால் (யு.என். ஓ.பி.எஸ்) ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு மானிப்பாய் மேற்கு கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் க.முதலியார் மானிப்பாய் பிரதேச சபைச் செயலர் திருமதி பு. சிவலிங்கத்தை கேட்டுள்ளார். இடிகுண்டு புனரமைப்பு தொடர்பாக அவர் எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

2009 - 2010 பெரும் போக அறுவடைக்கு பின்னர் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுமென முன்னர் கூறப்பட்டிருந்தது. எனினும் இதுவரை மேற்படி வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. எனவே அதனை விரைவில் புனரமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் - என்றுள்ளது. (50 - 302)

## நாளை

| | |
|---|---|
| ஆணி 20 | 04.07.2010 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | அட்டமி |
| | முழுவதும் |
| நட்சத்திரம்: | உத்தரட்டாதி |
| | பி.ப. 02.39 வரை |
| சுபநேரம்: | 08.57-10.27 வரை |
| ராகுகாலம்: | 04.27-05.57 வரை |

## உணவு விடுதிகளில் பணிபுரிவோருக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூலை 3

தென்மராட்சிப் பிரதேசத்தில் இயங்கி வரும் உணவு கையாளும் நிலையங்களில் பணி புரிவோருக்கு நெருப்புக் காய்ச்சல் (தைபோயிட்) தடுப்பூசி சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் ஏற்றப்பட்டு வருகிறது.

**கடந்தவாரம் தடுப்பூசி ஏற்றப்பட்டதாகவும் இதுவரை தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாத உணவு கையாளும் நிலையங்களில் பணி புரிவோர் தத்தமது பிரிவு பொதுச் சுகாதார பரிசோதகர் அல்லது சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.**

## பாலர் பாடசாலை விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 3

பாலர் கல்விக் கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் ஞானக்குழந்தை இல்ல ஆனைப்பந்திப் பாலர் பாடசாலையின் 3 ஆவது வருட விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆனைபந்தி மெதடிஸ்த வித்தியாலய மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

பாலர் பாடசாலை ஆசிரியர் செல்வி சியாமா ஜெகநாதன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிராம சேவையாளர் இ.தவரட்ணம் கலந்துகொள்வார். (ஒ- 1)

## கிரிக்கெட் போட்டி; வங்கி அணிகள் மோதல்

மக்கள் வங்கியின் 49 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி வங்கயின் யாழ். பிரதேச விளையாட்டுக்கழகம் வங்கிகளுக்கு இடையில் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் வடவலய உதவிப் பொது முகாமையாளர் த.க. ஆனந்தராஜா கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ். பத்மநாதன், ஓய்வுபெற்ற உதவிப் பிராந்திய முகாமையாளர் எஸ். ஹென்றி, ஓய்வுபெற்ற சுன்னாகம் கிளை முகாமையாளர் எஸ். சந்திரகாந்தன் ஆகியோர் கலந்துகொள்வர்.

இந்த இறுதியாட்டத்தில் இலங்கை வங்கயும் மக்கள் வங்கியும் மோதவுள்ளன. (ஒ-1)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கில் பனை, தென்னை வள உற்பத்தி; கைத்தொழில் பேட்டை நிறுவ நடவடிக்கை

## சபையின் புதிய தலைவர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 3

பனை, தென்னை வள உற்பத்திகளுக்கென கைத்தொழில் பேட்டை ஒன்று வடபகுதியில் அமைக்கப்படவுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பனை அவிருத்திச் சபையின் புதிய தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

எமது பகுதிகளிலுள்ள பனை மற்றும் தென்னை வளங்களைப் பயன்படுத்தி அவற்றின் மூலம் எமது மக்கள் பயன்பெற வேண்டும். இந்தத் துறைசார் உற்பத்திகளை மேம்படுத்துவதற்கென கைத்தொழில் பேட்டை ஒன்றை விரைவில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

இந்தக் கைத்தொழில்பேட்டையை யாழ்.மாவட்டத்தில் அல்லது வன்னிப் பகுதியில் அமைப்பது குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

பனம் பொருள் விற்பனை நிலையங்களை இலங்கையிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் திறப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

வடக்கு, கிழக்கின் 7 மாவட்டங்களில் தற்போது பனை அபிவிருத்தி சபையின் விற்பனை நிலையங்கள் 'கற்பகம்' என்ற பெயரில் இயங்கி வருகின்றன.

அவ்வாறான விற்பனை நிலையங்கள் ஏனைய 18 மாவட்டங்களிலும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. அவை கற்பகம் என்ற பெயரிலேயே இயங்கவுள்ளன.

அத்துடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள அபிவிருத்திச் சபை அலுவலகங்களை ஒருங்கிணைத்து வினைத்திறனான முறையில் இயங்க வைப்பதற்கு அந்தத் துறையுடன் ஈடுபாடுள்ள பட்டதாரி ஒருவரை நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளோம் - என்றார். (ஒ-14)

# தேங்காய் எண்ணெய் உற்பத்திக்கு மானியம்

கொழும்பு, ஜூலை 03

தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்களுக்கு மானியம் வழங்க பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க திட்டமிட்டுள்ளார்.

பெருந்தோட்டக் கைத்தொழிற்றுறைகளில் ஒன்றான தெங்கு உற்பத்தியின் பிரதான தயாரிப்பான தேங்காய் எண்ணெயின் உற்பத்திச் செலவு போத்தலுக்கு 186ரூபா வரை அதிகரித்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காக அமைச்சர் மஹிந்த சமரசிங்க உற்பத்தியாளர்களுக்கு மானியம் வழங்கும் திட்டம் ஒன்றை முன்வைக்கவுள்ளார். (ஒ-சி)

# மயோன் முஸ்தபாவுக்கு பிடியாணை உத்தரவு

கொழும்பு, ஜூலை 03

மொஹமட் முஸாம்மில் எம்.பியை ஜெனரல் சரத் பொன்சேகாவின் தரப்புக்கு இழுத்து எடுப்பதற்காக 42 லட்சம் ரூபாவை வழங்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள முன்னாள் பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபாவுக்கு நேற்று கல்கிஸை நீதிவான் நீதிமன்றம் பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளது.

லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் மயோன் முஸ்தபாவுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ள நிலையில் நீதிமன்றத்துக்கு அவர் வருகைதராததை அடுத்தே அவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் தேசியப் பட்டியல் எம்.பியாக கடந்த ஆட்சிக் காலத்தில் பதவி வகித்த மொஹமட் முஸாம்மில், விமல் வீரவன்ஸ ஜே.வி.பியிலிருந்து விலகி தேசிய சுதந்திர முன்னணியை ஆரம்பித்த பின்னர் அதில் இணைந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

# கள் விற்பனை நிலையங்களிலும் இனி சொகுசாக அமர்ந்து அருந்தலாம்

## அவற்றை நவீனப்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 3

கள் விற்பனை நிலையங்களை நவீன முறையில் மாற்றியமைப்பதற்கு பனை அபிவிருத்தி சபை நடவடிக்கை எடுக்கவுள்ளது.

வடபகுதியிலுள்ள கள் விற்பனை நிலையங்களின் அமைவிடம் மற்றும் அவற்றின் அடிப்படை வசதியற்ற நிலைமைகள் குறித்து தற்போது ஆராயப்பட்டு வருகிறது.

கள் விற்பனை நிலையங்கள் அதிகமானவை மக்கள் வாழ்விடங்களின் ஒதுக்குப்புற பகுதியிலும் மயானங்களுக்கு அண்மித்தும் அமைந்துள்ளன. அத்துடன் அந்த விற்பனை நிலையங்களின் உள்ளே பனை மரக்குற்றிகள் மூலமே இருக்கைகள் மற்றும் தளபாடங்கள் உள்ளன. எனவே இவ்வாறான நிலைமைகள் மாற்றப்படவுள்ளன.

இந்த விற்பனை நிலையங்களை நவீனமயப்படுத்துவதன் மூலம் மக்கள் மத்தியில் கள் விற்பனை தொடர்பாக இருந்து வந்த அருவருக்கத்தக்க நிலையை மாற்றியமைக்க முடியும் என்று கருதப்படுகின்றது.

புதிய தரமான உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் அவற்றுக்கு வழங்கப்பட்டு கள் விற்பனை நிலைஊழியர்களுக்கு சீருடைகளும் விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கை மூலம் கள் விற்கும் நிலையங்கள் நவீன மயப்படுத்தப்படும்.

வெகுவிரைவில் ஏனைய விற்பனை நிலையங்கள் போன்று கள் விற்பனை நிலையங்களிலும் சொகுசாக அமர்ந்து உல்லாசமாக அதனை அருந்தலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-14)

# 'நெல்சிப்' திட்ட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 3

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களுக்கான நெல்சிப் திட்டக் கலந்துரையாடல் நாளை ஞாயிற் றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நடை பெறவுள்ளது. எனவே அனைத்து உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு சபைச் செயலாளர் கேட்டுள்ளார். (50-201)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணுக்குள் மறைந்தும் மறையாத மாணிக்கம்

### அமரர் தம்பாபிள்ளை மாணிக்கம்



மண்ணில் 18.06.1934 — விண்ணில் 03.06.2010

மாதமொன்று மறைந்தாலும்
மாறாது உன்நினைவு-என்றும்
அகத்தினிலே நிறைந்து
வாட்டுதம்மா
நீண்டதோர் நினைவினிலே
வாடவிட்டு
எமைப்பிரிந்து நீ சென்றாயோ
அம்மா!

இன்று (03.07.2010) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

மாணிக்கபவனம்,
தம்பாலை,
அச்சுவேலி.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(100195)



## இலவச தையல் பயிற்சி வகுப்புக்கள்

சர்வதேச Diploma சான்றிதழ், வறுமைக்கோட்டின் கீழுள்ள படித்த யுவதிகளுக்கான இலவச தையல் பயிற்சி அச்சுவேலி, அராலி, மானிப்பாய், நல்லூர், அரியாலை, நெடுங்குளம், பருத்தித்துறை/புலோலி ஆகிய இடங்களில் நடைபெறும்.

பயிற்சி ஆரம்பம்: 05.07.2010
நேர்முகப் பரீட்சை: 04.07.2010
இடம்: இல.140, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
2 மணி-5மணிவரை

உறுதிப்படுத்திய கிராம உத்தியோகத்தரின் நற்சான்றிதழுடன் நேரில் வரவும்.


# ஞானக்குழந்தை பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 3

பாலர் கல்விக்கழகத்தின் நிர்வாகத்தின் கீழுள்ள நல்லூர் ஞானக்குழந்தை இல்லப் பாலர் பாடசாலையின் 14 ஆவது வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நல்லூர் மூத்த விநாயகர் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை ஆசிரியர் திருமதி ஜெ.ஸ்ரீவாணி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் சமூக அபிவிருத்தி மன்ற உப தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசன் கலந்து கொள்வார். (50-16)


## Catholic College of Higher Studies
## CCHS — (Ahavoli)

### English course leading to diploma (level III)

Batch VII is about to commence
6 months course – classes on weekdays from 3.30 – 5.30
Apply before 20 – 07 - 2010
Only those with a credit in English (O/L) will be considered
For further information contact the Registrar
Ahavoli ,
St.Patricks road
Jaffna..

(100196) Tel.Ph.No. 021 2222856



## மரண அறிவித்தல்கள்

### திருமதி நடராசா பாக்கியலக்சுமி



தாவடி தெற்கு, பத்தானை வீதியைப் பிறப்பிடமாகவும் வதிடமாகவும் கொண்ட திருமதி நடராசா பாக்கியலக்சுமி நேற்று முன்தினம் (01.07.2010) வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பிகைபாகன்-பொன்னம்மா தம்பதியரின் மகளும் மகாதேவன் முத்தாபரணம், மகேஸ்வரி, பேரின்பமணி ஆகியோரின் சகோதரியும் சோதிடர் நடராசாவின் மனைவியும் இராஜேந்திரன், மகேந்திரன், கணேஸ்வரி (UK), யோகேந்திரன் (சுவிஸ்), அன்பரசி (சோதிடர்) ஆகியோரின் தாயும் மனோன்மணி, ஜெயதீசன்(UK), வித்தியானந்தநங்கை(சுவிஸ்), இராகவன் (வலயக்கல்வி அலுவலகம், தீவகம்) ஆகியோரின் மாமியும் கிரிகரன், கிருபாளினி, கிரிராஜ், கிரிஷாளினி, ஜெயவாணி, சந்திரவாகினி, ஜெயரதன், இந்துஜா, மாதவன், ஹரிணி, கௌதமன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.07.2010) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்தானை வீதி, தாவடி தெற்கு,
கொக்குவில்.

தகவல்:
சோதிடர் நடராசா
(கணவர்)

(100124)

### சிவகுரு சேனாதிராசா

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது மாதகலை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு சேனாதிராசா நேற்று (02.07..2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அன்னபூரணத்தின் அன்புக் கணவரும் வவா, ஜெயம், காலஞ்சென்ற ஜெயகாந்தராசா (மாம்பழம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2010) சனிக்கிழமை மாதகல் கடற்கரையில் நடைபெறும்.

வேலுப்பிள்ளை கடையடி,
மாதகல்.

தகவல்:
வவா (மகள்)

(100193)


# கணிதபாட செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 3

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் கணித பாட ஆசிரியருக்கான கணித மென்பொருள் ஆக்கம் தொடர்பான செயலமர்வு இன்றும் நாளையும் வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

செயலமர்வில் கலந்துகொள்ளவுள்ள ஆசிரியர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (1-207)


BOC

## இலங்கை வங்கி

### 2011/2012 ஆண்டுக்கான வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் தொழில்சார் நிபுணர்களையும் பதிவு செய்தல்

இலங்கை வங்கிக்கு 2011/2012 ஆண்டுக்கான வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் தொழில்சார் நிபுணர்களையும் பதிவு செய்தல் தொடர்பாக 11.05.2010 அன்று வீரகேசரி, டெய்லி நியூஸ், தினகரன் பத்திரிகைகளில் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. அவ்வறிவித்தலின்படி விண்ணப்பப் படிவம் வழங்கும் இறுதித்திகதி 07.07.2010 ஆகவும் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 21.07.2010 ஆகவும் பிற்போடப்பட்டுள்ளது.

தயவுசெய்து ஆர்வமுள்ளவர்கள் தங்கள் விண்ணப்பங்களை உடனடியாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு:

உதவிப் பொது முகாமையாளர்
(வடபிராந்தியம்) இலங்கை வங்கி,
உதவிப் பொது முகாமையாளர் காரியாலயம்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2735/ 021 222 3126/ 021 222 3945

செயற்பாட்டு முகாமையாளர்,
வடபிராந்தியம்.

(இ/568809)


# தென்மராட்சியில் செயலணிக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

தென்மராட்சிக் கல்வி வலய செயலணிக் குழு உறுப்பினர்களுக்கான கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும்.

கூட்டத்திற்கு பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்வி அலுவலர், கணக்காளர் ஆகியோரையும் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (1-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை ஆராய்ச்சி நிலையத்தை இயங்கவைக்க இந்திய அரசு 85 மில்லியன் ரூபா உதவி

## அபிவிருத்திச் சபையின் புதிய தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 3

இலங்கையில் பனம் பொருள்சார் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காக கைதடியில் உள்ள பனை ஆராய்ச்சி நிலைத்தை மீண்டும் இயக்குவதற்கு இந்திய அரசு 85 மில்லியன் ரூபா நிதியுதவி வழங்கியுள்ளது.

பனை அபிவிருத்திச் சபையின் புதிய தலைவர் பசுபதி சீவரத்தினம் இந்தத் தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு எமது நாட்டில் பனைவளம் சார்ந்த உற்பத்திகளைத் தரமாகவும் நவீனமான முறையில் மேற்கொள்வதற்குப் பல்வேறு நடவடிக்கைகளை அமுல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக இயங்காமல் உள்ள கைதடி பனை ஆராய்ச்சி நிலையத்தினை மீண்டும் செயற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம். இதற்கான நிதியுதவியினை வழங்கும் உறுதிமொழியினை இந்திய அரசு கடந்த மாதம் 25ஆம் திகதி வழங்கியுள்ளது. இந்த நிதியுதவி மூலம் அந்த நிலையத்திற்கான உபகரணங்கள் மற்றும் தளபாடங்களைக் கொள்வனவு செய்ய முடியும்.

அத்துடன் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தையும் பனை அபிவிருத்திச் சபையையும் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தையும், இந்த இரண்டு நிறுவனங்களினதும் செயற்பாடுகளையும் மேம்படுத்த முடியும் என நம்புகின்றோம். இதற்காக மேலும் நிதியுதவிகளை வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம்.

அத்துடன் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பனம் பொருள் உற்பத்திகளைத் தரமாக மேற்கொள்வதற்கும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. அதற்காக அத்துறை சார் போதனாசிரியர்களுக்குப் பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அண்மையில் 30 போதனாசிரியர்களுக்கு இவ்வாறு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே பனை அபிவிருத்திச் சபையின் மூலம் பயிற்சி பெற்றவர்களை ஒருங்கிணைத்து அவர்களின் தொழில் தகைமையுள்ளவர்களை இனங்கண்டு ஊக்குவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

பனம் பொருள் உற்பத்திகளை மேம்படுத்துவதற்கு இலங்கை அரசும் 30 மில்லியன் ரூபாவினை ஒதுக்கியுள்ளது என்றார்.

(50-14)

# துப்புரவு செய்யாத வடிகால்களால் துர்நாற்றம் வீசும் நகர்ப்பகுதி

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ். நகரப்பகுதிகளிலுள்ள வடிகால்கள் சில துப்புரவு செய்யப்படாதுள்ளமையால் அவற்றில் கழிவு நீர் தேங்கி துர்நாற்றம் வீசுவதாக பொதுமக்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக யாழ்.பஸ்நிலையத்திற்கு பின்புறமாக உள்ள மின்சார நிலைய வீதியோரமாகவுள்ள வடிகால் தடைப்பட்டு கழிவு நீர் தேங்கித் துர்நாற்றம் வீசுவதாக அப்பகுதி வர்த்தக நிலையங்களில் பணிபுரிவோரும், பணியாளர்களும் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

எனவே நகரப்பகுதியிலுள்ள வடிகால்களை துப்புரவு செய்து டெங்குத் தொற்று உருவாகமல் தடுப்பதற்கு யாழ்.மாநகர சபை அதிக கவனம் எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(50-14)

# யாழ் நகரப் பகுதியில் தினமும் குவியும் கழிவுப் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ். நகரில் தற்போது தினமும் கழிவுப் பொருள்கள் அகற்றப்படாமல் தேங்கிக் கிடப்பதாக வர்த்தகர்களும், பொது மக்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக யாழ். நகரின் மரக்கறிச் சந்தைக்குள் கடந்த சில நாள்களாக பழுதடைந்த இளநீர் கோம்பைகள் அகற்றப்படாமல் குவிந்து காணப்படுகின்றன.

இதனைவிட பொது இடங்கள் மற்றும் போக்குவரத்து நெரிசல்மிக்க இடங்களிலும் இளநீர் கோம்பைகள் வீசப்பட்டுக் காணப்படுகின்றன.

வியாபரிகள் தமது வியாபார நிலையங்களில் வரும் கழிவுப் பொருள்கள், பைகள் போன்றவற்றையும் வீதியில் வீசிவிட்டுச் செல்கின்றனர்.

தாம் தினமும் நகரைக் கூட்டிச் சுத்தம் செய்தாலும் கழிவுப் பொருள்கள் கட்டுக் கடங்காமல் குவிவதாகச் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கழிவுப் பொருள்களைப் போடுவதற்கான வசதிகள் செய்து கொடுக்கப் படாமையாலும் இந்த நிலைமை ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(50 - 224)

# மல்வம் மயான வீதியை இதுவரை யாரும் கண்டுகொள்ளவில்லையா?

நவாலி, ஜூலை 3

உடுவில், மல்வம் மயான வீதி நீண்ட காலமாக திருத்தியமைக்கப்படாததினால் குண்டும் குழியுமாக காணப்படுகின்றது.

மழைகாலம் ஆரம்பமானதும் இவற்றில் வெள்ளம் தேங்கி நிற்பதனால் மக்கள் போக்குவரத்து செய்ய முடியாது கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

மேலும் இவ்வீதியின் இருமருங்கிலும் மக்கள் மிக நெருக்கமாக வாழ்ந்து வருகின்றனர். இதனால் போக்குவரத்து மட்டுமன்றி இங்குள்ள சேமக்காலை, மயானம் என்பவற்றில் பிரேத நல்லடக்கம் செய்வதற்கும் இந்த வீதியைப் பாவித்து வருகின்றனர்.

இதேவேளை இதனுடன் இணைந்து செல்லும் குறுக்கு வீதிகள் பல சிறந்த முறையில் செப்பனிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த வீதி மட்டும் ஏன் புறக்கணிக்கப்பட்டுள்ளது என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் இதனை நேரில் பார்வையிட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர். (50-100)

# யாழ். நகரில் பொலிஸாரின் இரவுநேர ரோந்து அதிகரிப்பு

யாழ். நகரில் பொலிஸாரின் இரவு நேர ரோந்துப் பணிகள் அதிகரித்துள்ளன.

நகரில் இரவு நேரத்திலும் போக்குவரத்து நெரிசல் காணப்படுகின்றது.

இதனைச் சீர்செய்வதற்காகவும், குற்றச் செயல்களைத் தடுப்பதற்காகவும் யாழ். பொலிஸார் இரவு நேரத்தில் ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர். சைக்கிள்களிலும் மோட்டார் சைக்கிள்களிலும் இவர்களின் ரோந்து நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

ரோந்துப் பணியில் ஈடுபடும் பொலிஸார் தற்போது பற்றன் பொல்லுகளோடு நடமாடி வருகின்றனர்.

பொலிஸாரின் இந்த நடவடிக்கையால் நகரில் திருட்டு மற்றும் குற்றச் செயல்கள் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (50-224)

# காரைநகரிலும் ஊர்காவற்றுறையிலும் தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகள்

## நாளை திறந்து வைக்கப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஜூலை 3

தீவகத்தின் காரைநகர் மற்றும் ஊர்காவற்றுறை பிரதேசத்தில் தேசிய சேமிப்பு வங்கி தனது கிளைகளை நாளை ஞாயிற்றுக் கிழமை திறந்து வைக்கவுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதான வீதியில் அமைந்துள்ள கிளை நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு இலங்கை தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் பிரதீப் காரியவசத்தினால் திறந்து வைக்கப்படவுள்ளது. இந்நிகழ்வில் தேசிய சேமிப்பு வங்கியின் பொதுமுகாமையாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான எச்.எம்.ஹென்னாயக்க பண்டாரவும் பங்கேற்கின்றனர்.

காரைநகர் பிரதான மேற்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள கிளையினை நண்பகல் 12 மணிக்கு இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் திறந்து வைக்கிறார். '(50-250)

# நிறுவுநர் தினமும் சான்றிதழ் வழங்கலும்

யாழ்ப்பாணம், ஜூலை 3

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் மருதனார்மடம் விவசாய நிறுவனம் என்பவற்றின் 24 ஆவது நிறுவுநர் தினமும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வட்டுக்கோட்டை தொழில்நுட்ப நிறுவனத்தின் 'ஏபிள்'மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிறுவனத்தின் சபைத்தலைவரும் முன்னாள் தென்னிந்தியத் திருச்சபைப் பேராயருமான கலாநிதி எஸ்.ஜெபநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப நிறுவனப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.ஜே.எம். சகாயன் மற்றும் வைத்திய கலாநிதி திருமதி லூசிண்டா சகாயன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (50-16)

# காரைநகர்-பொன்னாலை வீதியில் வாகனங்களை மெதுவாகச் செலுத்தவும்

## உதவி அரசாங்க அதிபர் கோரிக்கை

காரைநகர், ஜூலை 3

காரைநகர்-பொன்னாலைப் பால வீதி புனரமைப்புப் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருவதனால் வாகனங்களைச் செலுத்துவோர் அதனை மெதுவாகச் செலுத்துமாறு உதவி அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

காரைநகர்-பொன்னாலைப் பால வீதி அகலமாக்கப்பட்டு புனரமைக்கும் பணி நிறைவுக்கட்டத்தை நெருங்கி வருவதுடன் புனரமைப்புப் பணிகள் முழுவீச்சில் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் இந்த வீதி ஊடாக வாகனங்களைச் செலுத்துவோர் அதனை மிக வேகமாகச் செலுத்துவதனால் புனரமைப்பு பணிகளில் ஈடுபட்டு வரும் பணியாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குவதுடன் புனரமைப்புப் பணிகளை விரைவாக முன்னேடுக்க முடியாத நிலையும் காணப்படுவதாக கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற பிரதேச குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதனையடுத்தே இந்தப் புனரமைப்புப் பணிக்கு அனைவரையும் ஒத்துழைப்பு வழங்குமாறும் இந்த வீதி ஊடாக வாகனங்களைச் செலுத்துவோர் அதனை மெதுவாகச் செலுத்தி புனரமைப்புப் பணிகள் விரைவில் நிறைவு பெற ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் கேட்டுள்ளார். (50-250)




# அரசடி வீதி திருத்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

நல்லை ஆதீனத்திற்கு முன்பாகச் செல்லும் அரசடி வீதியில் உள்ள சேதங்கள் திருத்தப்படுகின்றன.

இந்த வீதியில் இருந்த குழிகள் தார்க்கலவை மூலம் நிரப்பட்டு சீர் செய்யப் பட்டுள்ளன. (50 - 224)



தரம் 3 மாணவர்களுக்கு சுற்றாடல் அமைச்சினால் வழங்கப்பட்ட 'எனது சுற்றாடல்' தினக்குறிப்பு வழங்கும் நிகழ்வு யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தில் அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சின் பணிப்பாளர் சுனிமால் ஜெயதுங்க, அமைச்சின் செயற்றிட்ட உதவியாளர் மயூரி மல்லவராய்ச்சி, யாழ். வலய ஆரம்பக் கல்வி உதவிப் பணிப்பாளர் ப.[illegible], தேசிய கல்வி நிறுவனத்தின் ஆரம்பக் கல்வி பிரதி துறைக்கான பணிப்பாளர் கலாநிதி சுரணிமல வேக்கம் ஆகியோர் மாணவர், பாடசாலை அதிபர்கள் ஆகியோருக்கு தினக்குறிப்புகளைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (படங்கள் - லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரூபா 10 லட்சம் செலவில் சிறுவர் பூங்கா

யாழ்ப்பாணம்,ஜூலை3

சாவகச்சேரி வைத்தியசாலையில் 10 லட்சம் ரூபா செலவில் சிறுவர் பூங்கா அமைக்கப்படவுள்ளது. இதற்கான நிதியை ஜப்பான் நாட்டு நிறுவனம் வழங்கவுள்ளது.

ஏற்கனவே வைத்தியசாலை வளாகத்தில் இந் நிறுவனத்தினரால் நிர்மாணிக்கப்பட்டு வரும் சிறுவர் விடுதிக்கு அருகில் சிறுவர் பூங்கா அமைக்கப்படவுள்ளது. (ஓ-207)


## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 660 திகதி 01-07-2010

வெற்றி எண்கள்

07 08 23 59 P

ஜக்பொட் பரிசு ரூ. 25,174,060/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 25,174,060/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 15 | 2,000/= | 30,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 380 | 1,000/= | 380,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 649 | 1,000/= | 649,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 15073 | 60/= | 904,380/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7448 | 40/= | 297,920/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 175768 | 20/= | 3,515,360/= |
| | | மொத்தம் | ரூ. 6,576,660/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| இரத்தினபுரி | 700151041-2-02 |
| பதுளை | 700149093-4-24 |
| மாத்தளை | 700145264-1-31 |
| மொணராகலை | 700140032-5-35 |
| கொழும்பு | 700154337-1-01 |
| வவுனியா | 700143382-3-03 |
| கம்பஹா | 700155340-6-16 |
| கொழும்பு | 700152313-3-03 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,976,660/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 25,651,000/=

பஞ்சன் நிற டிக்கட்டுகள் 2010 ஜூலை 05 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7


## லயன்ஸ் உப ஆளுநருக்கு கௌரவிப்பு விழா

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்டம் 306 பி 1 இன் 2 ஆவது உப மாவட்ட ஆளுநராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள எஸ்.எஸ்.தங்கராஜா, லயன் சீமாட்டி ஜெயசோதி தங்கராஜா ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்றுமாலை 4.30 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

37 வருடங்களின்பின்னர் இம்முறை யாழ். மாவட்டத்துக்கு இந்தப் பதவி கிடைத்துள்ளதை ஒட்டி இடம்பெறும் இந்த நிகழ்வில் சகல லயன்ஸ் கழக உறுப் பினர்களையும் கலந்துகொள்ளுமாறு மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் கேட்டுள்ளது. (ஓ-1)


### Personal Class

தரம்3 - A/L வரையான மாணவர்களுக்கு English Personal Class உம் Spoken with Grammar கற்க விரும்புபவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பித்துக்கொடுக்கப்படும். (அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை) தொடர்பு: கே.கே.எஸ். வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். தொ.பே: 0778692979

### வீடு, வளவு விற்பனைக்கு

மானிப்பாய் மெமோறியல் வீதியில் 4 பரப்பு 7 குழியுடைய காணியில் சகல வசதிகளுடனும் கூடிய புதுவீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு 0717353524

### வீடு வாடகைக்கு

யாழ். பிரதான வீதிக்கு அருகில் வசதியான வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள், காரியாலயங்களுக்கு உகந்தது.
தொடர்பு: 0776679401

### ஆலயப் பூசகர் தேவை

வண்.வடமேற்கு ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் திருக்கோயிலுக்கு குருக்களுடன் கூடிய நித்திய பூசகர் தேவை.

விபரங்களுக்கு ஆலய தர்மகர்த்தா சபையுடன் உடன் தொடர்புகொள்ளவும்.

ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் திருக்கோயில்
வண்.வடமேற்கு,
ஆனைக்கோட்டை. (சி/568801)

### வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு 27.06.2010

We Serve

வடமராட்சி லயன்ஸ் கழகத்தினரால் 2008/2009 காலப் பகுதியில் விற்பனை செய்யப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களின் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டு கடந்த 27.06.2010 கழகச் செயலகத்தில் சீட்டுக்கள் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டன. வெற்றியீட்டிய சீட்டுக்களின் இலக்கங்கள் பின்வருமாறு:

| | பரிசுகள் | இலக்கங்கள் |
|---|---|---|
| முதலாம் பரிசு | - துவிச்சக்கர வண்டி | 0231 |
| 2 ஆம் பரிசு | - வானொலிப் பெட்டி | 0071 |
| 3ஆம் பரிசு | - மேசை மின்விசிறி | 1524 |
| 4ஆம் பரிசு | - குக்கர் | 0074 |
| 5ஆம் பரிசு | - சுவர் மணிக்கூடு | 0604 |

ஆறுதல் பரிசுகள் பத்து

| | |
|---|---|
| 0023 | 0467 |
| 0303 | 0057 |
| 1071 | 0061 |
| 1717 | 1706 |
| 1042 | 0513 |

வெற்றியீட்டியவர்கள் செயலாளர் அல்லது பொருளாளரிடம் சீட்டுக்களைச் சமர்ப்பித்து பரிசுகளை 30 நாள்களுக்கு இடையில் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

லயன் எம்.தர்மலிங்கம்
செயலாளர்
தொ.பே: 2212263059

லயன் தங்கராசா
பொருளாளர்
தொ.பே: 2212263284

(சி/568815)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் துரைராசா ஞானாம்பிகை

தோற்றம்
26.12.1942



மறைவு
03.06.2010

எத்தனை நாள்கள்
கழிந்தாலும் எமக்கெல்லாம்
குலவிளக்காய் இருந்து
பார்போற்ற வாழ்ந்து
நல்வழிகாட்டிய பசுமை
நிறைந்த நினைவுகள் நம்
வாழ்வில் என்றும் நம்
மனதினிலே இருக்கும்.

குடும்பத்தினர்.
சுதன் (சுவிஸ்)

சுந்தரோடை மேற்கு,
சுன்னாகம்.

### வருடாந்தப் பொதுக்கூட்டம்

கைதடி, நவீல்ட் செவிப்புலனிழந்தோர் பாடசாலையின் பழைய மாணவர் சங்கக் கூட்டமும் 43ஆம் ஆண்டு நிறைவு விழாவும் இன்று (03.07.2010) சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். அனைவரையும் அழைத்து நிற்கின்றோம்.
-க.இரத்தினேஸ்வரன்(செயலாளர்)


### கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்டு உத்தரவாதமளிக்கப்பட்ட NO.1 தரமான Broiler கோழிக்குஞ்சுகள் 05.07.2010 காலை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர். T.P-: 021 222 6944

சூட்டி பாம்:
வட்டுக்கோட்டையிலும்
பதிவு செய்யலாம்.
T.P: 021 321 6290

குறிப்பு: எம்மிடம் குஞ்சு வாங்குபவரிடம் திருப்பிக் கோழிகள் கொள்வனவு செய்யப்படும்.

### விற்பனைக்கு

8' உயரம் 12' அகலம் கொண்ட சுருக்குக் கேற் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0213211890

### காயத்திரி பப்ளிகேஷனின்

நாடளாவியரீதியில் பாடசாலைமட்ட
முன்னோடி புலமைப்பரிசில் பரீட்சை 2010

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களை பரீட்சைக்கு தயார்ப்படுத்துவதற்கான முன்னோடி பரீட்சையை ஆசிரியர் வே. நவமோகனின் வழிகாட்டலில் காயத்திரி பப்ளிகேஷன் நிறுவனம் நாடளாவியரீதியில் பாடசாலை மட்டத்தில் நடத்தவுள்ளது.

- இரண்டு பகுதி வினாத்தாள்களைக் கொண்ட இப்பரீட்சை எதிர்வரும் ஜூலை மாதம் 18 ஆம் திகதி நாடளாவியரீதியில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- அனுமான வினாக்களைக் கொண்டதாக இருக்கும் இப்பரீட்சையில் திறமையாகச் சித்தியடையும் மாணவர்களுக்கு பரிசில்களும் சித்தியடையும் அனைவருக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.
- மாகாண மட்டத்தில் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு எமது இலச்சினை பொறிக்கப்பட்ட பதக்கமும், தேசிய மட்டத்தில் முதலாமிடம் பெறும் மாணவருக்கு 22K தங்கப் பதக்கமும் வழங்கப்படும்.
- பரீட்சைக்கட்டணம் தலா ஐம்பது ரூபா வீதம் அறவிட்டு வே. நவமோகன் என்ற பெயருக்கு வெள்ளவத்தை தபாலகத்தில் மாற்றத்தக்கதாக அனுப்பி வைக்க வேண்டும்.
- பரீட்சை வினாத்தாள்களை பரீட்சைக்கு இரு தினங்களுக்கு முன்னர் பாடசாலை அதிபருக்கு அனுப்பி வைப்போம்.
- பரீட்சை முடிந்தவுடன் அவற்றை அப்படியேபார்சல் செய்து திருத்துவதற்கு எங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- கொழும்பு, யாழ்ப்பாண மாவட்டங்களில் தனிப்பட்ட ரீதியிலும் மாணவர்கள் பரீட்சைக்கு தோற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவர்கள் 100 ரூபா வீதம் கட்டணம் செலுத்தவேண்டும்.

இப் பரீட்சைக்கு தோற்றவிரும்புவர்கள் 10 ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்

அன்னை புத்தகசாலை
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 9881, 077 2487662

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பெற்றோர் 30 வயது M.B.B.S. DOCTOR ஆகப் பணிபுரியும் மணமகனுக்கு படித்த ,அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: 0775490765

### நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு

நல்ல இன ஜேர்மன் செப்பட் 45 நாள்கள் நிரம்பிய (பூச்சி நீக்கப்பட்ட) நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 021 222 6052
0776622313

### விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய அல்சேசன் ஆண், பெண் நாயும் டாசோன் பெண்நாயும் பொக்கட்பெனியர் பெண் நாயும் பொமேரியன் ஆண், பெண் நாயும் 45 நாள் பூர்த்தியான பொமேரியன் ஆண், பெண் நாய்க் குட்டிகளும் அல்சேஷன் குட்டிகளும் வான்கோழிகளும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: வி.மயூரன், இல.209, பலாலி றோட், ராஜா கிளாஸ் முன்பாக, கோண்டாவில்.

### காணவில்லை

நாணயம் குத்தப்பட்ட, மாவெள்ளை நிறம், வளைந்த கொம்புடைய சினையுடன் கூடிய பசு மாட்டை கயிற்றுடன் சீனியர் லேன், கலட்டிப் பகுதி யில் வியாழக்கிழமை (01.07.2010) இரவு முதல் காணவில்லை. யாராவது கண்டால் கீழ்காணும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
021 222 9522, 0775212415

### வீடு விற்பனைக்கு

சுண்டிக்குளி, விதானையார் வீதியில் 1 ½ பரப்புக் காணியுடன் கூடிய வீடும், 3 பரப்புக் காணியுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு.தொடர்பு: எஸ்.எஸ். நாதன், 16/3, விதானையார் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். தொ.பே. 0776146434

### காணி விற்பனைக்கு

இணுவில் மேற்கு, பாப்பா தோட்ட ஒழுங்கை, பருத்தியடைப்பு பிள்ளையாரடி முடக்கில் இரண்டு பரப்புச் சொச்சக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- தொ.பே: 021 321 6866

### காணி விற்பனைக்கு

பலாலி வீதியில் 2 1/2 பரப்புக் காணி பங்குக் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. நல்லூர் பிரதேச செயலகத்திற்கு அருகில்.
தொடர்பு: 0777111400

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது 1Kg 450/=. வியாபாரிகளுக்குக் கழிவு வழங்கப்படும்.

விஜயகுமார்
குளப்பிட்டி வீதி,
ஆனைக்கோட்டை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை டிப்போவின் சேவைகளை சீரமைப்பதற்கு 30 புதிய பஸ்கள் தேவை

## போக்குவரத்துப் பிரதியமைச்சருக்கு மகஜர்

வடமராட்சி,ஜூலை 3

பருத்தித்துறை இ.போ.ச.டிப்போவுக்கு 30 புதிய பஸ்களைத் தந்து உதவினால் பருத்தித்துறை இ.போ.ச.டிப்போவினால் நடத்தப்பட்டுவரும் பஸ்சேவைகளைச் சீர்செய்ய முடியும் என போக்குவரத்து பிரதி அமைச்சர் றுவான் திசநாயக்காவிடம் கையளிக்கப்பட்டுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து பிரதி அமைச்சர் அண்மையில் பருத்தித்துறை டிப்போவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு, டிப்போவின் குறைகள், தேவைகள் குறித்து அறிந்து கொண்டார்.

அவர் ஊழியர்கள் மத்தியில் உரையாற்றுகையில் பருத்தித்துறை இ.போ.ச. டிப்போ முகாமையாளர் எஸ்.குணபாலசெல்வம் டிப்போவின் தேவைகள் குறித்து மகஜர் ஒன்றைக் கையளித்தார்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பருத்தித்துறை டிப்போவில் உள்ள 48 பஸ்வண்டிகளில் தற்போது 33 பஸ்வண்டிகளே உள்ளன. ஏனைய பஸ் வண்டிகள் முற்றாகப் பழுதடைந்து சேதமடைந்து சேவையாற்றமுடியாத நிலையில் யாழ். இ.போ.ச. டிப்போவில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

எஞ்சிய 33 பஸ்வண்டியில் 25 பஸ் வண்டிகள் மிகப்பழமை வாய்ந்தவை. போக்குவரத்துச் சேவையில் போட்டிகள் மிகுந்துள்ள இன்றைய சூழ்நிலையில் இன்னமும் 30 பஸ் வண்டிகள் இருந்தால்தான் பயணிகளுக்கு சிறப்பான சேவைகளை வழங்க முடியும்.

தேவையான சாரதிகள், நடத்துநர்கள், அலுவலகப் பணியாளர்கள் இன்மையாலும், கணனி வசதிகள் இன்மையாலும் அலுவலக நிர்வாகத்தைக் கொண்டு செல்வது கஷ்டமாகவும் சிரமமாகவும் உள்ளது.

பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பிரதான வீதி அகலமாக்கப்பட்டு வருவதால் டிப்போவின் சிற்றுண்டிச்சாலை அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. டிப்போவின் சுற்று மதில்கள் நிஷா புயலினால் சேதமடைந்துள்ளன.

பருத்தித்துறை-கொழும்பு நீண்ட தூர பஸ்சேவையை மேம்படுத்த குறைந்தது இரண்டு அரைச் சொகுசு பஸ் வண்டிகள் வழங்கப்பட்டால் அச்சேவையை முன்னேற்றகரமாக மேம்படுத்த முடியும் எனவும் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50-236)

## மண்டைதீவு மக்களுக்கு தொழில் உபகரணங்கள்

நல்லூர்,ஜூலை 3

மண்டைதீவில் மீனவர்கள், விவசாயிகளுக்கான தொழில் உபகரணங்களை வழங்க ஐ.நா.அபிவிருத்தித்திட்ட நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இந்த மாதத்தில் இவை வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மீனவர்கள் 74 பேருக்கு வள்ளம், இயந்திரம், வலைகள் என்பன வழங்கப்படும் எனவும் விவசாயிகள் 15 பேருக்கு நீரிறைக்கும் இயந்திரம், மண்வெட்டி, முள்ளுக்கம்பிகள் என்பனவும் விவசாய சம்மேளனத்திற்கு ஓர் உழவு இயந்திரமும் 3 தெளிகருவிகளும் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (50-111)

## வெங்காயத்தில் கருக்கல் நோய்

யாழ்ப்பாணம்,ஜூலை 3

வலி.கிழக்கு விவசாயிகளால் பயிரிடப்பட்ட வெங்காயப் பயிர்கள் ஒருவித நோயினால் பாதிக்கப்பட்டுள்ளன.

'கருக்கல்' மற்றும் 'வட்டறுக்கல்' நோய்த் தாக்கத்தினால் இந்த வெங்காயப் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

வெங்காயப் பயிர்களில் ஏற்பட்டிருக்கும் இந்த நோயைக் கட்டுப்படுத்த மருந்து விசிறும் நடவடிக்கையில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். (50-224)

## அலங்காரத் திருவிழா

யாழ்ப்பாணம்,ஜூலை 3

சாவகச்சேரி கோவிற்குடியிருப்பு ஞான வீரபத்திரர் ஆலய அலங்காரத் திருவிழா இன்று சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை சங்காபிஷேகம் நடைபெற்று சுவாமி வெளிவீதி உலா வருவார். (ஒ-207)

## மக்கள் வங்கியின் ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை 3

மக்கள் வங்கியின் 43 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையில் இந் நிகழ்வு கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் வாடிக்கையாளர்கள் பலர் கலந்துகொண்டனர். (ஒ-207)

# நெல்லியடியிலும் வின்சர் சந்தியிலும் விரைவில் வீதிச் சமிக்ஞை விளக்கு

யாழ்ப்பாணம்,ஜூலை 3

வடமராட்சியில் நெல்லியடிச் சந்தியிலும், வலிகாமத்தில் வின்சர் சந்தியிலும் வீதிச் சமிக்ஞை விளக்குகளை முதற்கட்டமாக அமைக்கும் நடவடிக்கைகளில் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஈடுபட்டுள்ளதாக அதன் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கான அளவீட்டுப் பணிகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பாக அந்த அதிகாரி மேலும் தெரிவிக்கையில், பருத்தித்துறை வீதியின் அகலிப்பு பணியின் மூலம் நெல்லியடிச் சந்தியும் அகலமாக்கப்பட்டுள்ளது.

எனவே இந்தச் சந்தியிலும் வீதிச் சமிக்ஞை விளக்கை அமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டு அதற்கான அளவீட்டுப் பணிகளும் முடிவடைந்துள்ளன.

அத்துடன் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டபடி யாழ்.வின்சர் சந்தியிலும் வீதிச் சமிக்ஞை விளக்கு விரைவில் அமைக்கப்படும்-என்றார்.

குடாநாட்டில் தற்போது போக்குவரத்து நெரிசல் அதிகரித்து வருகின்றது. இதனைக் குறைக்கும் வகையில் முதலில் இந்த இரண்டு பிரதான சந்திகளிலும் வீதி சமிக்ஞை விளக்குகள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-224)




# வடமராட்சி கிழக்கில் இடம் பெயர்ந்த மக்களை விரைவில் மீளக் குடியமர்த்துவதற்கு ஏற்பாடு

வண்ணை,ஜூலை 3

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட இடம் பெயர்ந்த மக்களை விரைவில் மீளக் குடியமர்த்துவதற்கு கடந்த 29 ஆம் திகதி கூடிய மீள்குடியேற்றக் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்துள்ள மாமுனை, செம்பியன்பற்று, தாளையடி மற்றும் மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, போக்கறுப்பு ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்கள் இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதிருந்தால் உடனடியாக குடத்தனையில் இயங்கும் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் தமது குடும்பப் பதிவுகளை மேற்கொள்ளும்படி மீள் குடியேற்றக் குழுவினரால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஜூலை 15 ஆம் திகதி அளவில் மேற்படி பகுதி மக்கள் மீளக் குடியமர்த் தப்பட இருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50-160)

# தென்மராட்சிப் பிரதேசத்துக்கான தொலைபேசி சேவை விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 3

தென்மராட்சிப் பிரதேசத்துக்கான தொலைபேசி இணைப்புக்கள் மேலும் அதிகரிக்கப்படவுள்ளன.

புதிதாக மேலும் இரண்டாயிரம் 'கேபிள்' தொலைபேசி இணைப்புக்களை இந்தப் பிரதேசத்துக்கு வழங்குவதற்கு ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் யாழ்.பிராந்திய அலுவலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கென இப்பிரதேசத்தில் புதிதாக பரிவர்த்தனை அலகு ஒன்று அமைக்கப்பட்டு கேபிள் இணைப்புக்களைத் துரித கதியில் வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது சாவகச்சேரி பிரதேசத்துக்கும் நிலத்தடி கேபிள்கள் அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. (50-224)

## இரண்டு நாள்கள் மின் தடை

யாழ்ப்பாணம்,ஜூலை 3

யாழ்-பருத்தித்துறை வீதியை அகலமாக்கும் பணிகளுக்காக மின்சார விநியோகத் தூண்களை இடம்மாற்றம் செய்ய வேண்டியுள்ளதால் நாளை ஞாயிற்றுக்கிழமையும் எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை மின்சார விநியோகம் தடைப்படும் என இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் பிராந்திய அலுவலக மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, மற்றும் வடமராட்சிப் பிரதேசம் முழுவதும் மின்தடை அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மின் விநியோக மார்க்கங்களின் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்வதற்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை பின்வரும் இடங்களில் மின்சார விநியோகம் தடைப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உரும்பிராய், கோண்டாவில், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டினப் பகுதி தவிர்ந்த யாழ்.மாநகர சபைப் பகுதி ஆகிய இடங்களில் மின்தடை அமுலில் இருக்கும். (50-201)

## சிறுவர்களின் விஞ்ஞான உற்பத்திக் கண்காட்சி

பருத்தித்துறை,ஜூலை 3

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறுவர்களின் விஞ்ஞான உற்பத்தி படைப்புக் கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

நன்னடத்தை சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தின்கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தேசிய சிறுவர் சபையின் விஞ்ஞான உற்பத்திப் படைப்புக் குழுவின் ஏற்பாட்டின் கீழ் இக்கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

பாடசாலை மட்டத்தில் வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்படும் ஆக்கங்களின் கண்காட்சி எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இக் கண்காட்சி பிரதேச மட்டம், மாவட்ட மட்டம், தேசிய மட்டம் என நடத்தப்பட்டு சிறுவர்களின் சிறந்த படைப்புகளுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைத் திணைக்களத்தினால் வழங்கப்படவுள்ளன. (50-190)

## ரூ.5 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம்,ஜூலை 3

அளவுக்கு அதிகமாக வீட்டில் கள்ளு வைத்திருந்த நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கினை விசாரித்த நீதிவான் ஏ.எம்.எம். றியால் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் மூன்று மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-207)



யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 23 ஆவது வருட நிறைவு தின நிகழ்வு நேற்று முன்தினம் நிறுவனத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிறுவனத்தின் பொருளாளர் வைத்திய கலாநிதி திருமதி செ.தெய்வேந்திரன், நிர்வாகச் செயலாளர் என்.சிவநாதன் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதை முதலிரு படங்களிலும், நிறுவனத் தலைவர் வைத்தியகலாநிதி திருமதி ஜெ.கணேசமூர்த்தி, நிகழ்விற்குப் பிரதம விருந்திரனராகக் கலந்துகொண்ட செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வதிவிடப் பிரதிநிதி புளோறன்ஸ் கிலெற் அம்மையார் ஆகியோர் உரை நிகழ்த்துவதை அடுத்துள்ள இரு படங்களிலும் வலுவிழந்த சிறுமி ஒருவருக்கு சக்கர நாற்காலியைப் பிரதம விருந்தினர் வழங்குவதனை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: ரட்ணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதிக்காகப் போராடுகிறது இலங்கை!

**போர் முடிவுக்கு வந்து ஆண்டொன்று கடந்துவிட்ட நிலையில் இலங்கை அமைதிக்காகப் போராடுகிறது என்று Gulf News இணையத்தளத்தில் அதன் துணை ஆசிரியரான Mick'O' Reilly எழுதியுள்ளார்.**

அப்பயணக் கட்டுரையில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பயணமான தனது அனுபவங்களை அவர் பதிவு செய்துள்ளார்.

வீதியோர மின்கம்பத்தில் உச்சியில் அமர்ந்திருந்த வெண்ணிற நாரையொன்று தனது பால்போன்ற வெள்ளை நிற இறக்கையை மெல்ல அசைத்தவாறு ஆளரவமற்ற அந்தக் கடற்கரையில் பறந்து செல்கிறது.

இந்த நாரை கடல் நீரில் நீந்துவதற்கு ஏற்ப கடல் வெதுவெதுப்பாக இருந்தாலும் கொழும்பு-3 இல் உள்ள கடற்பகுதியில் நீச்சலுக்குத் தடைவிதிக்கப்பட்டிருக்கிறதே.

அலரி மாளிகை முதல் பாதுகாப்பு அமைச்சினது தலைமையகம் வரையிலான பகுதிகள் இந்தக் கடற்பகுதிக்கு அண்மையில் இருப்பதே இத்தடைக்கான காரணம்.

இந்த வீதியில் இடைவிடாது பயணித்துக்கொண்டிருந்த ஓட்டோக்களும் வாடகை வண்டிகளும் இராணுவத் தலைமையகத்திற்கு முன்னால் பலரை இறக்கிவிட்டுச் சென்றன. ஆனால், கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் கைக்கொள்ளப்படும் இந்த இராணுவ வளாகத்திற்கு ஒரு சிலர் மாத்திரமே பாதுகாப்புச் சோதனைகளின் பின்னர் அனுமதிக்கப்படுகிறார்கள்.

இலங்கையின் வடக்குப் பகுதியிலுள்ள யாழ்ப்பாணத்திற்குச் செல்வதற்கான பாதுகாப்பு அனுமதியைப் பெறுவதற்காகவே இந்தக் கூட்டம் இராணுவத் தலைமையக வாசலில் அலைமோதுகிறது.

37ஆண்டுகளாக இலங்கைத் தீவில் தொடர்ந்த மோசமான இனப்போர் 14 மாதங்களின் முன்னர் முடிவுக்கு வந்திருக்கலாம். ஆனால், யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குப் பயணம் செய்பவர்கள் மீது இப்போதும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

''நான் யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக் கொண்டவள்'' என தனது கணவர் சில்வஸ்ராருடன் தற்போது ஆஸ்திரேலியாவில் வசிக்கும் தமிழ் கிறிஸ்தவரான மேரி கூறுகிறாள். ''யாழ்ப்பாணத்தில் எங்களுக்கு இப்போதும் சொந்தமாக வீடு இருக்கிறது. இருந்தும் குடாநாட்டுக்குச் செல்வதற்காக பயண அனுமதியைப் பெறுவது கடினமானதாகவே இருக்கிறது'' என்கிறாள் அவர்.

மே 2009இல் போர் முடிவுக்கு வந்த பின்னர் இவர்கள் தங்களது சொந்த இடமான யாழ்ப்பாணத்திற்குச் சென்று வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அப்போது கொழும்பிலிருந்து பலாலி விமானத்தளத்திற்கு விமானத்தில் பயணம் செய்திருந்தார்கள்.

ஆனால் இம்முறை இவர்கள் ஏனைய மூவருடன் சேர்ந்து ஒவ்வொருவரும் 10 ஆயிரம் ரூபா செலுத்தி வாடகை வாகனமொன்றில் 300 கிலோ மீற்றர் தரை வழியாகப் பயணித்து குடாநாட்டுக்குச் செல்வதற்கு விரும்புகிறார்கள்.

''பாதுகாப்பு அமைச்சிடமிருந்து நாம் பயண அனுமதியைப் பெறவேண்டுமாம்'' என்கிறாள் மேரி.

பயண அனுமதியைப் பெறுவதற்காக இந்தப் படை முகாமின் வாசலை, துருப்பிடித்த மஞ்சள் நிறத்திலமைந்த பாரிய இரும்புச் சட்டங்களால் படையினர் மறித்திருக்கிறார்கள். ஆயுதந்தாங்கிய ஏழு படையினர் இங்கு காவல் கடமையில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

மஹிந்த ராஜபக்ஷவின் பதவிக் காலத்தின்போது இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான நெருங்கிய உறவை உணர்த்தும் ஒரு சமிக்ஞையாக இங்கு இராணுவ உடையில் கடமையில் நின்ற படையினர் சீனத்தயாரிப்பான ரி-56 வகையைச் சேர்ந்த அரைத் தானியங்கித் துப்பாக்கிகளைக் கைகளில் வைத்திருந்தார்கள்.

குறிப்பிட்ட இதே தினத்தன்று காலையில், கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளின் மத்தியில் கொழும்பின் மையப் பகுதியில் அமைந்திருக்கும் ஹில்டன் விடுதியில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த பொருளாதார அபிவிருத்தி மாநாட்டில் சீனாவின் துணைப் பிரதமர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டிருந்தார்.

கொழும்பு நகரினது முக்கிய சந்திகளை அண்டிய நடைபாதைகளில், வீதி மறியலுக்குப் பயன்படும் மஞ்சள் நிறத்திலான இரும்புக் சட்டங்களை இன்னமும் காணமுடிகிறது. மீண்டும் பயங்கரவாத அச்சுறுத்தல் ஏற்படுமிடத்து பயன்படுத்துவதற்காக இவர்கள் இவற்றை இன்னமும் வைத்திருக்கிறார்கள் போலும்.

இலங்கைத் தீவில் தாக்குதல் அச்சம் எங்கும் நிறைந்திருக்கிறது. அத்துடன், மோதல்நிலையை நாடு எதிர்கொண்டிருப்பதைப் போலவே அரச நிர்வாகங்கள் அனைத்தும் செயற்படுகின்றன. இலங்கையில் இயல்பற்றதொரு அமைதி நிலவுவதாகவே தெரிகிறது.

இங்கு கடமையில் இருக்கும் படைவீரர்கள், கடந்த ஆண்டு இடம்பெற்ற போரில்பெரும் பங்காற்றிய இலங்கை இராணுவத்தின் ஏயார் மொபைல் படைப்பிரிவைச் சேர்ந்தவர்களே. அவர்களது சீருடையின் தோள்பட்டையில் காணப்பட்ட அடையாளங்கள் அதனை உறுதிப்படுத்தின. போரை வெல்வதற்கு மாத்திரமின்றி இந்தப் படையினர் அமைதியை நிலைநாட்டுவதற்காகவும் பயன்படுத்தப்படுகிறார்கள்.

இராணுவ பொலிஸாரோ அல்லது கடற்படைப் பொலிஸாரோ அல்லது




விமானப்படைப் பொலிஸாரோ அணிவதைப் போலன்றி இவர்கள் பச்சை நிறத்திலமைந்த சப்பாத்துக்களை அணிந்திருந்தார்கள்.

வெள்ளை நிற பிக்கப் ரக வாகனமொன்று பாதுகாப்பு அமைச்சின் வாயிலை அண்மித்தபோது கடமையிலிருந்த படையினர் அனைவரும் ஒரே நேரத்தில் மரியாதை செலுத்துகிறார்கள். வாகனத்தின் முன் இருக்கையில் இராணுவ அதிகாரி ஒருவர் அமர்ந்திருந்தார்.

கொழும்பு-3 இல், பாலதாச மாவத்தையில் அமைந்திருக்கும் பாதுகாப்பு அமைச்சினது வாசலில் கடமையில் இருக்கும் இந்தப் படையினர் பாதுகாப்புக் கருதி குறித்த இந்தப் பிக்கப் வாகனத்தின் அடிப்பகுதியையும் வாகனத்தின் பின்பகுதியையும் அவதானத்துடன் சோதனையிட்ட பின்னர் அமைச்சினது வளாகத்திற்குள் வாகனம் நகர்ந்து செல்கிறது.

பாதுகாப்பு அமைச்சின் வாசலில் யாழ்ப்பாணம் செல்வதற்கான



படையினரின் எழுத்துமூல அனுமதியைப் பெறுவதற்காக இருபதுக்கும் அதிகமான மக்கள் காத்திருக்கிறார்கள். கடவுச்சீட்டு அல்லது தேசிய அடையாள அட்டை ஆகியவற்றின் பிரதிகள் மற்றும் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் குடாநாட்டுக்குச் செல்வதற்கான காரணம், எப்போது திரும்புவார்கள் என்பது போன்ற விவரங்களை இவர்கள் கையளிக்கவேண்டும்.

அங்கு கடமையிலிருக்கும் ஆறு பொலிஸாரினதும் மற்றும் அனுமதியைப் பெறுவதற்காக வந்திருக்கும் பொதுமக்களினதும் புழுக்கத்தைப் போக்கும் வகையில் தலைக்குமேலே மின்விசிறி ஒன்று சுழன்றுகொண்டிருந்தது. மரத்தால் அமைக்கப்பட்ட மேசையின் பினனால் எழுத்தர் ஒருவர் அமர்ந்திருந்தவாறு அங்கு அனுமதி பெற வருபவர்களது விவரங்களைப் பதிந்தவாறிருக்கிறார்.

அனுமதிக்காகக் காத்திருக்கும் பொதுமக்கள் இந்தக் எழுத்தர் ஊடாகத்தான் குடாநாட்டுக்கான தங்களின் பயணத்திற்கான எழுத்துமூல அனுமதியைப் பெறவேண்டும். அனுமதி நிராகரிக்கப்பட்டிருந்தால் வேறு கதையில்லாமல் திரும்பிவிடவேண்டியதுதான். ''நாங்கள் பயண அனுமதியைப் பெற்றுவிட்டோம்'' எனக் கூறிய மேரி தனது கணவர் சில்வேஸ்ரருடன் யாழ்ப்பாணத்திற்கான தரைவழிப் பயணத்திற்காகத் தயாராகிறாள்.

எழுத்தர் தெளிவான கையெழுத்தில் பதிவு செய்துகொண்டிருந்த அநேகமான கடிதங்கள் 'உங்களது சேவைக்காக' என்ற வாசகத்தைத் தாங்கி தபால் செலவில்லாத இலவச கடித உறைகளைக் கொண்டிருந்தது. அவை புலனாய்வு அதிகாரி, பாதுகாப்பு அமைச்சின் தலைமைச்செயலகம், பீஜிங்கிலுள்ள இலங்கை தூதரகம், இலங்கை இராணுவ புலனாய்வுப் பிரிவு, விமானப்படை புலனாய்வுப் பிரிவு ஆகியவற்றின் முகவரியிடப் பட்டிருந்தன.

யாழ்ப்பாணத்திற்கான பயணத்திற்கான அனுமதி கோரும் கடிதங்கள் அவை.

வயது முதிர்ந்த தமிழ்ப் பெண் ஒருவர் அமைதியாக அமர்ந்திருந்தார். பாதுகாப்பு அமைச்சின் வாயிலில் அமைந்திருக்கும் இந்த விடுதிக்கு இவர் தொடர்ந்தும் நாலாவது நாளாக வந்திருக்கிறார். ஆனால், இந்தப் பெண்ணுக்கு இன்னமும் பயண அனுமதி கிடைக்கவில்லை. இவரது மகள் ஒருவர் யாழ்ப்பாணத்தில் வசித்துவரும் அதேநேரம் மகன் புலிகள் அமைப்பில் இணைந்து செயற்பட்ட வேளையில் கொல்லப்பட்டு விட்டாராம்.

''இன்றோ அல்லது நாளையோ எனக்குப் பயண அனுமதி வழங்கப்படலாம்'' என்றார் அவர். கடந்த மூன்று ஆண்டுகளாக அவர் வீட்டில் இருக்கவில்லை. தனது சொந்த ஊரான யாழ்ப்பாணத்திற்குச் செல்ல விரும்பும் வயதான இந்தப் பெண்ணுக்கு இன்றும் பயண அனுமதி வழங்கப்படவில்லை.

**தமிழில் : வண்ணமதி**

அமைச்சின் வாசலிலுள்ள பயண அனுமதி வழங்கும் விடுதியிலுள்ள தொலைபேசி மணி அடித்துக்கொண்டிருந்தது. இராணுவப் பொலிஸைச் சேர்ந்த அலுவலர் ஒருவர் தொலைபேசியை எடுத்து உரையாடிவிட்டு என்னிடம் அதனைத் தந்தார்.

''நீங்கள் யாழ்ப்பாணத்திற்குப் பயணிக்கலாம்'' என மேஜர் ரவீந்திர என்னிடம் கூறினார். ''ஆனால், நீங்கள் வீதி வழியாகப் பயணிக்க முடியாது. கொழும்புக்கும் பலாலிக்கும் இடையே இடம்பெறும் விமானசேவை மூலமே நீங்கள் அங்கு செல்ல முடியும்'' - என்றார் அவர்.

(18ஆம் பக்கம் பார்க்கவும்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மாணவர்களுக்கு சம உரிமைகளைப் பெற்றுத் தருவதே இ.தொ.காவின் கொள்கை

## பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம்

கொழும்பு, ஜூலை 03

சிங்கள மொழிமூல மாணவர்கள் அனுபவிக்கும் உரிமைகள் - சலுகைகளைத் தமிழ் மொழிமூல மாணவர்களும் அனுபவிக்க வேண்டும். இதுவே இ.தொ. காவின் கொள்கை. மஹிந்த சிந்தனையின் பிரதான கொள்கைகளுள் இதுவும் ஒன்றாகும். அதன் அடிப்படையிலேயே எமது கட்சி செயற்படுகின்றது - என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான முத்து சிவலிங்கம் தெரிவித்தார்.

அண்மையில் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களுக்கு விஜயம் மேற்கொண்ட பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் தமிழ்மொழி மூலம் கல்விகற்கும் மாணவர்களைச் சந்தித்து உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ்ப் பாடசாலைகள் கடந்த காலங்களில் அபிவிருத்தி செய்யப்படவில்லை. தற்போது மஹிந்த சிந்தனையின் கீழ் பிராந்திய மட்டத்தில் சிங்கள மொழி மூலப் பாடசாலைக்கு நிகராக தமிழ் மொழி மூலப் பாடசாலைகளையும் அபிவிருத்தி செய்வதற்குத் திட்டமிடப் பட்டுள்ளது.

கடந்த காலங்களில் யுத்தத்தைக் காரணம் காட்டி பாடசாலைகள் உரிய நேரத்தில் ஆரம்பிக்கப்படவில்லை. அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பல்வேறு சிரமங்களை அனுபவித்தனர். அவ்வாறான நிலை இன்று இல்லை.

எதிர்காலத்தில் தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் கூடிய கவனம் செலுத்தும்படி அமைச்சர்களுக்கும் அரச அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன், தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள வும் திட்டமிடப்பட்டுள்ளது.

எனினும், கல்வி அதிகாரிகள் தமிழ்ப் பாடசாலைகள் குறித்து எவ்வித அக்கறையுமின்றிச் செயற்படுகின்றனர்.

மேலும், பல்வேறு கட்டங்களாக வடக்கு, கிழக்குப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம்.

இப்பணிகளை மேற்கொள்ள பெற்றோர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அதுபோன்று ஆசிரியர்கள் தமது கடமையை உணர்ந்து செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்படு வதன் மூலமே கல்வி அறிவுள்ள எதிர்கால சந்ததியினரை நாம் பார்க்க முடியும்.

கடந்த இருபது ஆண்டுகளுக்கு முன்னர் வடக்கு, கிழக்கைச் சேர்ந்தவர்களே கல்வியில் சிறந்து காணப்பட்டனர்.

உயர் பதவிகளிலும் இருந்தனர். எனினும் இன்று கல்வியிலும் தொழில்துறையிலும் பின் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே, இனியும் நாம் பின்நோக்கிச் செல்லாமல் சமூகத்தையும் நாட்டையும் கட்டியெழுப்ப வேண்டும் - இப்படி பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் தெரிவித்தார். (ளி)

# ஜூலை 12 ஆம்திகதி காதிர்காமம் உற்சவம்

கொழும்பு, ஜூலை 03

கதிர்காமம் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இம் மாதம் 12 ஆம் திகதி ஆரம்பித்து 26 ஆம்திகதி நிறை வடையும் என கதிர்காம ஆலயத்தின் பஸ்நாயக்க நிலமே தெரிவித்தார்.

கடந்த காலங்களைவிட இம்முறை பல விசேட அம்சங்கள் விழாவில் இடம் பெறும். தொடர்ந்து 14 நாள்கள் இரவில் பெரஹர வீதி வலம் வரும்.

இறுதி ரன்தோலி பெரஹரா 25 ஆம்திகதி இரவு இடம் பெறும். வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து பாத யாத்திரையாக வரும் பக்தர்களை வரவேற்கவென உகந்தையில் விசேட ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

இம்முறை வழமையைவிடக் கூடுதலான தமிழ் பக்தர்கள் கதிர்காமத்திற்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது என நிலமே மேலும் தெரிவித்தார்.

(ளி)




# நுவரெலியா ஏரிகளில் படகு வீடுகள் இலங்கை முதலீட்டுச் சபை நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 03

இலங்கை வரும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணி களைக் கவரும் விதத்தில் நுவரெலியா நீர் ஏரிகளில் ஆடம்பரப் படகு வீடுகள் அமைக்கும் திட்டத்தை அறிமுகப் படுத்துவதற்கு இலங்கை முதலீட்டுச் சபை தீர்மானித் துள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று இலங்கை முதலீட்டுச் சபைக்கும், ஹோட்டல் சேவை நிறுவனங் களுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் ஆரம்ப முதலீடாக 5கோடி 50 லட்சம் ரூபாவை ஒதுக்கவும், பின்னர் இதனை 10 கோடி ரூபாவாக அதிகரிக்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

உல்லாசப் பிரயாணிகளுக்காக எரிகளில் ஆடம்பரப் படகு வீடுகளை அமைக்கும் திட்டம் இந்தியாவின் கேரள மாநிலத்தில் வெற்றியளித்துள்ளது.

அதனையடுத்தே இலங்கையிலும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த இலங்கை முதலீட்டுச் சபை தீர்மானித்துள்ளது.

இந்திய நிறுவனம் ஒன்று இந்த ஆடம்பரப் படகுகளை உருவாக்கும். 100 அடி நீளமும் , 20 அடி அகலமும் 16 அடி உயரமும் கொண்டவையாக பலகைகளி னால் இந்தப் படகுகள் தயாரிக்கப்படும். இவற்றில் இயந்திரங்களும் பொருத்தப்படும்.

சொகுசான படுக்கையறைகள், சாப்பாட்டறை, ஹோல் மற்றும் மேல் பகுதியில் 100 பேர் அமரக்கூடிய இருக்கைகள் கொண்டவையாக இவை உருவாக்கப்படும்.

இப்படகு வீடுகளின் உதிரிப்பாகங்கள் இந்தியாவில் தயாரிக்கப்பட்டுப் பின்னர் இலங்கைக்கு கொண்டுவந்து பொருத்தப் படும்.

உல்லாசப் பயணிகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் இப்படகுகளில் இருக்கும் - என்று மேலும் அறிவிக் கப்பட்டுள்ளது. (ளி)

# பதுளையில் மாணவர்கள் டெங்குநோயால் பாதிப்பு

கொழும்பு, ஜூலை 03

பதுளை தர்மதூத பாலர் பாடசாலையில் மேலும் நான்கு மாணவர்கள் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக் கப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமையன்று பதுளை வைத்தியசாலையில் மாணவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனை மூலமே இது கண்டறியப்பட்டுள்ளது.

இவர்கள் தரம் இரண்டு, மூன்று மற்றும் நான்கைச் சேர்ந்தவர்களாவர்.

அதேவேளை, இவர்களில் இருவர் குறித்த பாடசாலை ஆசிரியர்களின் பிள்ளைகளாவர். பாடசாலையிலும் அதனை அண்டிய பிரதேசத் திலும் டெங்கு பரவக்கூடிய அபாயம் உள்ளது எனப் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து பதுளை மாநகரசபையினருடன் இணைந்து மாணவர்களின் பெற்றோர் சிரமதானப் பணிகளில் ஈடுபட் டனர். (ளி)

---

## மட்டக்களப்பு வழியாக கதிர்காம பாதயாத்திரை

மட்டக்களப்பு, ஜூலை 02

திருகோணமலை, வவுனியா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இந்துக்கள் மட்டக் களப்பு வழியாக, கதிர்காம பாதயாத்திரையை தற்போது மேற்கொண்டுள்ளனர்.

இவர்களில் பலர் ஆங்காங்கே உள்ள ஆலயங்களிலும், இன்னும் சிலர் வீடுகளிலும் தங்கி தம் பாதயாத்திரையைத் தொடருகின்றனர்.

கதிர்காம உற்சவம் எதிர்வரும் 16ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாக ள்ளது. தீர்த்தோற்சவம் 26ஆம் திகதி இடம் பெறவிருக்கிறது. (ளி)

# மட்டக்களப்பில் மீள்குடியேற்றப்பட்டவர்களுக்கு அடிப்படை வசதிகள் வழங்கப்படவில்லை

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விசனம்

மட்டக்களப்பு, ஜூலை 03

''மட்டக்களப்பு மாவட்டத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட லட்சக்கணக்கான மக்களுக்கு இதுவரை எவ்வித அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை.''

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ப.அரியநேத்திரன் கூறியவை வருமாறு:-

சுமார் 39 ஆயிரம் குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளன. 13ஆயிரத்து 777 வீடுகள் முழு அளவிலும், 9 ஆயிரத்து 317 வீடுகள் பகுதியளவிலும்சேதமடைந் துள்ளன. ஆனால் இதுவரை ஆயிரத்து 377 வீடுகளே கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

நிவாரணக் கொடுப்பனவான 25 ஆயிரம் ரூபாவும், 6 ஆயிரம் பேருக்கே வழங்கப்பட்டுள்ளது. இப்பணத்தை 50 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு கோரியும், அது இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதேவேளை, 25ஆயிரம் குடும்பங்களுக்கு இது வரையும் 25ஆயிரம் ரூபா வழங்கப்படவில்லை - இவ்வாறு அரியநேத்திரன் தெரிவித்தார். (ளி)

# ஏறாவூர் பிரதேச காதி நீதிபதியாக மௌலவி மஜீத் கபூரி நியமனம்

ஏறாவூர் பிரதேசத்திற்கான காதி நீதிபதியாக மௌலவி எம்.சி.அப்துல் மஜீத் கபூரி நியமிக்கப்பட்டுள்ளார். நீதிச்சேவை ஆணைக் குழுவின் நேர்முகப் பரீட்சை அடிப்படையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 03 வருடங்களுக்கு அமுலில் இருக்கும் விதத்தில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இவர் மட்டக்களப்பு




மாவட்ட நீதிவான் வி.இராமகமலன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து தமது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

ஏறாவூர் புன்னக்குடா வீதியின், ஜிப்ரி தைக்கா குறுக்கு ஒழுங்கையில் அமைந்துள்ள ஏறாவூர் காதிநீதிமன்ற அலுவலகத்தில் சனிக்கிழமைகளில் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை அமர்வுகள் நடை பெறவுள்ளன.

ஏறாவூர் காதி நீதிமன்றத்தின் ஜூரி சபைக்கு 03 உறுப்பினர்கள் புதித்ாக நியமிக்கப்பட்டுள்ளனர் என காதி நீதிபதி மௌலவி எம்.சி. அப்துல் மஜீத் கபூரி தெரிவித்தார்.

ஓய்வு பெற்ற அதிபர்களான என்.எஸ்.எம். அஜ்வத், எம்.ஹுஸைன், ஆசிரியர் ரி.எம்.கஸ்ஸாலி சாஹிப் ஆகியோரே ஜூரிசபை உறுப்பினர்களாக நியமிக்கப் பட்டுள்ளனர்.

ஏறாவூர் பிரதேசத்துக்கான காதி நீதிபதியாக ஏற்கனவே கடமையாற்றி வந்த மௌலவி ஏ.எம். இப்றாகிம் சேவையிலிருந்து ஓய்வு பெற்றதையடுத்தே புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ளி)

## வெருகல் பிரதேசத்துக்கு புதிய குடியேற்ற அலுவலர்

கிழக்கு மாகாண காணி நிருவாகத் திணைக் களத் தால், பி.பிரவினா என்பவர், வெருகல் பிரதேச செயலக குடியேற்ற அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நீண்டகாலமாக காணி உத்தியோகத்தராக பணியாற்றிய ஜீ.ரவிராஜன் வெருகல் பிரதேச செயலகத்திலிருந்து திருகோணமலை காணி நிருவாக திணைக்கள தலைமை காரியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

தற்சமயம் வெருகல் பிரதேச செயலகத்தில் இரண்டு குடியேற்ற அலுவலர்கள் பணியாற்றுகின்றனர். அதனால் அரச காணி சம்பந்தப்பட்ட பிணக்குகளை கால தாமதமின்றி தீர்த்துக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என பொது மக்கள் நம்பிக்கை தெரிவிக்கிறார்கள். (ளி)

# காரைதீவில் நூல் வெளியீடு!

அம்பாறை, ஜூலை 03

தத்துவக் கவிஞர் பொன். தவநாயகம் இயற்றிய 'இன்பத் தமிழும், இனிய நிலமும்' கவிதை நூல் அறிமுகவிழா காரைதீவு விபுலானந்த மணிமண்டபத்தில் நடை பெற்றது. இதில் நூலாசிரியர் பொன். தவநாயகம் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார்.

ஓய்வுபெற்ற அதிபர் இ. தங்கராஜா தலைமையில் கடந்த ஞாயிறன்று நடை பெற்ற இவ்விழாவில் ஆசிரியர் அ.குமாரநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார். ஓய்வு பெற்ற மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க. விஜயரத்தினம் வாழ்த்துரை வழங்கினார்.

முதற்பிரதியை பொறியியலாளர் இரா. ரவிச்சந்திரனிடமிருந்து ஓய்வுபெற்ற அதிபர் க.பரமலிங்கம் பெற்றார். ஏனைய பிரதிகளை நூலாசிரியரின் புதல்வர்களான த. ஞானவிந்தன்(பொறியியலாளர்), த.மதிவேந்தன்(விரிவுரையாளர்) ஆகியோர் ஏனையோருக்கு வழங்கினர்.

உதவிக் கல்விப் பணிப்பாளரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா நூல் அறிமுகவுரையும், ஓய்வுபெற்ற அதிபர் விபுலமாமணி பொன்.சிவானந்தன் நயவுரையும் ஆற்றினர்.

மாணவரின் கலைநிகழ்ச்சிகளும் இதில் இடம்பெற்றன. (ளி)

# தென்கிழக்குப் பல்கலைக்கழக விஞ்ஞானபீட புதிய பீடாதிபதி

அம்பாறை, ஜூலை 03

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் புதிய பீடாதி பதியாக சாய்ந்தமருதைச் சேர்ந்த கலாநிதி சபீனா இம்தியாஸ் நியமிக்கப்பட் டுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் முதன் முதலில் கலாநிதிப்பட்டம் பெற்ற முஸ்லிம் பெண் மணி சபீனா இம்தியாஸ் ஆவார். அத்துடன், இவர் இப்பல்கலை கக்கழகத் தின் இரண்டாவது முஸ்லிம் பெண் பீடாதிபதியுமாவார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதியாக நிய மிக்கப்படுவதற்கு முன்னர் இவர் பல்கலைக்கழகத்தில் பல முக்கிய பதவிகளை வகித்துள்ளார்.

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைத் தொடங் கிய இவர் பேராதனைப் பல்கலைக்கழ கத்தில் தனது இளமாணி, முதுமாணிப் பட்டப் படிப் புகளை முடித்துக் கொண்டவர். (ளி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முக்கிய அறிவித்தல்

## கரைச்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் 30.04.2009 இல் நிதிக் கூற்றுத் தயாரித்தல்

மேற்படி எமது சங்கம் மீளக்குடியமர்ந்தபின் 30.04.2009 இல் கணக்குகளை ஒழுங்குபடுத்தி நிதிக்கூற்றுத் தயாரிக்க வேண்டியுள்ளது. இதற்கமைய கீழ்வரும் விடயங்களை மேற்படி திகதியில் உறுதிப்பத்திரங்களை 15.07.2010 இற்கு முன் தலைவர்/பொதுமுகாமையாளர், கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம், கட்சன் வீதி, வட்டக்கச்சி எனும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கலாம் அல்லது நேரடியாகக் கையளிக்க முடியும்.

I) ***சங்கத்திற்கு வருமதியானது***
- *01) வியாபாரக் கடன் பெற்றோர்*
- *02) முற்பணம் பெற்றோர்*
- *03) மற்றும் ஏனைய வருமதிகள்*

II) ***சங்கத்திடமிருந்து செலுத்தவேண்டியவை***
- *01) வியாபாரச் சென்மதிகள்*
- *02) முற்பணம்*
- *03) ஏனைய சென்மதிகள்*

III) ***கிராமிய வங்கியில் வைப்புச் செய்தோர்***
*மேற்படி எமது சங்கத்திலுள்ள கிராமிய வங்கியில் சேமிப்பு, நிலையான வைப்பு மற்றும் ஏனைய வைப்புச் செய்தவர்கள் தமது சேமவைப்பு புத்தகங்கள், நிலையான வைப்புச் சான்றிதழ்கள் பரிசீலனைக்காக சங்கத்திற்கு சமர்ப்பித்து 30.04.2010 இல் மீதியை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.*

IV) ***இடம்பெயர்வு தொடர்பில் சங்கம் தொடர்பாக ஏதும் தகவல்கள் இருப்பின் அதனையும் சங்கத்திற்குச் சமர்ப்பிக்கவும்.***

தலைவர்,
கரைச்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
கட்சன் வீதி,
வட்டக்கச்சி.

(சி/568792)

# நாணய நிதிய நிபந்தனைகளுக்கு அடிபணிந்து பட்ஜட் தயாரிப்பா?

## முடிந்தால் நிரூபிக்குமாறு விமல் வீரவன்ஸ சவால்

கொழும்பு, ஜூலை 3

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அடிபணிந்தே இந்த வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்று கூறும்" ஐ.தே.கட்சி முடிந்தால் அதை நிரூபித்துக் காட்டட்டும் என்று அமைச்சர் விமல் வீரவன்ஸ நேற்று முன்தினம் நாடாளுமன்றில் சவால் விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு சவால் விடுத்தார்.

அவர்இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

நாம் ஒருபோதும் வெளிநாட்டவர்களின் தாளத்துக்கு ஆடமாட்டோம். நாம் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு உடன்பட்டே இந்த வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்தோம் என்றும் நிவாரணங்களை வெட்டிவிட்டோம் என்றும் எதிர்க்கட்சி கூறுகின்றது. முடிந்தால் அந்த நிபந்தனைகள் என்னவென்று கூறட்டும்.

இந்தவரவு-செலவுத் திட்டத்துக்கு எதிராக நாட்டு மக்களைத் திரட்டி ஐ.தே. கட்சியால் ஆர்ப்பாட்டம் நடத்த முடியாது. மக்கள் வரமாட்டார்கள். அதனால் தான் அக்கட்சி நாடாளுமன்றத்துக்குள் ஆர்ப் பாட்டம் செய்கிறது.

எதிர்க்கட்சி அரசியல் அநாதையாகி விட்டது. அக்கட்சிக்கு நிலையான கோஷமில்லை. இதனால், நாளுக்கு நாள் அக்கட்சியின் கோஷம் மாறுகிறது. இக்கட்சியால் எதுவும் செய்யமுடியாது.

நாம் மக்கள் நலனில் அக்கறை கொண்ட வரவு-செலவுத் திட்டம் ஒன்றையே முன் வைத்துள்ளோம். - என்றார். (சி)

# முக்கிய அறிவித்தல்

## கரைச்சி வடக்குப் பலநோ.கூட்டுறவுச் சங்கம், பரந்தன்

**30.04.2009ஆம் திகதியின் மேற்படி எமது சங்கத்தின் மூல தனக்கணக்குகளை ஒழுங்கமைக்கும் முகமாக கீழ் வரும் விவரங்கள் தொடர்பில் சங்க நடவடிக்கையுடன் தொடர்பு கொண்டவர்களிடமிருந்து 30.04.2009இல் உள்ளவாறான மீதிகளை உறுதிப்படுத்திச் சங்கத்தின் தலைவர்/ பொது முகாமையாளர், கரைச்சி வடக்கு பல நோக்குக்கூட்டுறவுச்சங்கம் எனும் முகவரிக்கு 15.07.2010 ஆம் திகதிக்கு முன் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.**

- ★ ***தாங்கள் சங்கத்துடன் செய்து கொண்ட வியாபார நடவடிக்கைகள் மூலம் சங்கத்திற்கும் தங்களுக்குமிடையே வருமதிகள், சென்மதிகள், முற்பணங்கள், கடன்கள் இருப்பின் அவற்றினை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்கள் ரீதியாகச் சமர்ப்பிக்கவும்.***
- ★ ***சங்கத்தின் கிராமிய வங்கியில் வைப்புச் செய்தவர்கள் நிலையான வைப்புகள், சேமிப்பு வைப்புகள், சிறுவர் பெற்ற கோபுர சேமிப்புகள் மற்றும் கடன் பெற்றவர்கள் 30.04.2009இல் மேற்படி மீதிகளை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்கள் இருப்பின் சமர்ப்பித்து உறுதிப்படுத்திக் கொள்ளவும்.***
- ★ *மேற்படி திகதிக்குமுன் பங்குப் பணம் செலுத்திய அங்கத்தவர்கள் அவற்றினை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்கள் இருப்பின் அவற்றினைச் சமர்ப்பித்து அங்கத்துவத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.*

| | |
|---|---|
| அ.கேதீஸ்வரன், | க.செல்வராசா, |
| தலைவர், | பொது முகாமையாளர், |
| கரைச்சி வடக்கு | கரைச்சி வடக்கு |
| பல நோ.கூ.சங்கம். | பல நோ.கூ.சங்கம். |


(சி/568795)

# 50ஆம் ஆண்டு நினைவுப்பூக்கள்



அமரர்
**செல்லத்துரை தையலம்மா**





அமரர்
**கந்தையா செல்லத்துரை**

திதி: பூர்வபட்ச ஸப்தமி

என் அன்புத்தாயே - நீர்
எத்தனை 50ஆண்டு காலமாக
எமைவிட்டுப் பிரிந்தாலும்
என்றும் உங்கள் பசுமையான
நினைவுகள் எமைவிட்டு நீங்காது.
விழி இமைக்கும் நேரம் ஆனதம்மா
உமது 50ஆண்டு கனவுலகம்
பலகாலங்கள் சென்றாலும்
எம் மனது ஆறாதம்மா
அதில் என்றும் உமைப்பற்றிய
நினைவுகள் மட்டுமே.

என்றும் நினைவில்:
குடும்பத்தினர்.

*33/11, இராமநாதன் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(100154)

# ஓராண்டு நினைவஞ்சலி



தவப்பேறு:
04.12.1945

சிவப்பேறு:
14.07.2009

## அமரர் தியாகராஜா நவநீதன்

*நெக்குருகும் சக்தி நெஞ்சாரும் நேர்மை*
*எக்காலமும் பணியும் சற்குரு-பாதம்,தாழ்ந்த சுபாவம்*
*வித்தகன் நீ விடைகொண்டு போனாய் விடைமேகனூன் பாதம்*
*எத்திசையும் விடியொளியாய் நிறைந்தாய் எம்மனதில்*
*நீ எங்கே மறைந்தாய் எம் நினைவில்?*

35/6, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கும்:
**குடும்பத்தினர்.**

*(100101)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிம்மதி என்ன விலை



வாழ்வில் எல்லோருமே நிம்மதியை விரும்புகிறார்கள். நாடுகிறார்கள். ஆனால் அதுவோ எல்லோருக்கும் கிட்டாமல் நழுவிப் போகிறது. அப்படியானால் வாழ்க்கையில் நிம்மதியைப் பெறவே முடியாதா? முடியும். எப்படி? அதைத்தான் விளக்குகிறது பின்வரும் கதை.

ஒரு பெரிய அரசர் இருந்தார். அவருக்கு எல்லா வசதியும், வாழ்க்கையில் நிம்மதி இல்லையே என்கிற குறை அவருக்கு இருந்தது. அரண்மனையில் தினமும் கலை நிகழ்ச்சிகளும் நாட்டியங்களும் நடந்து கொண்டுதான் இருந்தன. இருந்தாலும் அரசருக்கு நிம்மதி இல்லை!

நிம்மதி எங்கே கிடைக்கும் என்று அரசன் தேட ஆரம்பித்தார். அதை அடைவதற்குரிய முயற்சிகளில் தீவிரமாக இறங்கினார்.

நாட்டிலுள்ள தத்துவ மேதைகளையெல்லாம் அழைத்தார். அவர்கள், நிம்மதிக்குரிய வழி என்று பலவிதமான விளக்கங்களை அளித்தார்கள். ஆனால் அவர்கள் தந்த எந்தப் பதிலும் அரசர்க்கு திருப்தி அளிக்கக்கூடிய வகையில் இல்லை. எதிலும் திருப்தி பெறாத அரசர் நிம்மதி இழந்து நிதானமில்லாமல் இருந்தார்.

ஒரு நாள் அவர் மாளிகையின் உப்பரிகையில் உலாவிக் கொண்டிருந்தார். அச்சமயம் தெருவில் ஒரு பிச்சைக்காரன் மிகவும் உல்லாசமாகப் பாட்டுப் பாடிய பாடியே சென்று கொண்டிருந்தான். அவன் குரலிலே ஒரு சந்தோஷம், ஒரு பூரிப்பு, நடையிலே ஒரு மிடுக்கு காணப்பட்டது. அவனிடம் கொஞ்சம்கூட கவலையிருப்பதாகவே தெரியவில்லை.

அரசருக்கு அந்தப் பிச்சைக்காரனே, நிம்மதியின் வடிவமாகவே, நிம்மதியின் அவதாரமாகவே தோன்றினான். உடனே அவர் காவலாளிகளை அழைத்து, ''உடனே ஒடிப்போய் அந்தப் பிச்சைக்காரனை இங்கு அழைத்து வாருங்கள்'' என்று உத்தரவிட்டார்!

காவலாளிகள் உடனே ஓடிச்சென்று பிச்சைக்காரனிடம் அரசனின் உத்தரவைத் தெரிவித்தார்கள். ஆனால் அவனே அரசகட்டளை என்று தெரிந்தும் கூட அரண்மனைக்கு வர மறுத்துவிட்டான். ''நான் அரண்மனைக்குள் அடிஎடுத்து வைக்கமாட்டேன்'' என்றான்.

காவலாளிகள் அரசரிடம் வந்து விசையத்தைக் கூறினார்கள். அதைக் கேட்ட அரசர்,' இப்படியும் ஒரு ஆள் இருப்பானா?' என்று ஆச்சரியப்பட்டார். ''சரி! அவன் என்னதான் சொல்லுகிறான்?'' என்று விசாரித்தார்.

காவலாளிகள் மீண்டும் தெருவுக்கு வந்து அரசர் கூறியதை பிச்சைக்காரனிடம் கூறினார்கள். அதற்கு அவன், ''என்னை அரசர் பார்க்க விரும்பினால் அவரே வேண்டுமானால் இங்கு வந்து என்னைப் பார்க்கட்டும்'' என்று சொல்லி விட்டான்.

காவலாளிகள் அரசரிடம் வந்து பிச்சைக்காரன் சொன்னதைத் தெரிவித்தார்கள். அரசருக்கு பிச்சைக்காரன் மீது கோபம் வரவில்லை. மாறாக, 'இவ்வளவு சுதந்திர உணர்வோடு இருப்பவன் ஒரு சாதாரண ஆளாக இருக்க முடியாது' என்று நினைத்தார். உடனே அவர் கிடுகிடுவென்று இறங்கி பிச்சைக்காரனிடம் சென்றார்.

''நீ கொஞ்சம் கூட கவலைப்படாமல் சந்தோஷமாகப் பாடிக் கொண்டு போகிறாயே! உன்னால் எப்படி இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்க முடிகிறது?'' என்று கேட்டார். ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?என்று பிச்சைக்காரன் வினவினான்.

''அதற்கில்லை.... எனக்கு அரண்மனையில் எல்லா சுகபோகங்களும் இருக்கிறது. இருந்தாலும் என் மனத்தில் நிம்மதி இல்லை. இது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. இந்த தேசத்திலுள்ள அறிஞர்களை எல்லாம் கேட்டுப் பார்த்துவிட்டேன். அவர்களுக்கும் பதில் தெரியவில்லை. உன்னைக் கேட்டால் தெரியும் என்று நினைத்தேன். அதனால் தான் உன்னைச் சந்திக்க விரும்பினேன். ஆனால் நீ மறுத்து விட்டாயே!'' என்றார் அரசர்.

பிச்சைக்காரன் கடகடவென்று சிரிக்க ஆரம்பித்துவிட்டான். சிரித்துக்கொண்டே அவன், மகிழ்ச்சிக்கும் உங்களுக்கும் தடையாக இருப்பது இந்த மாளிகைதான் . இதைவிட்டு விட்டு தாங்கள் வெளியே வந்தால் நிம்மதி உங்களைத் தேடிக்கொண்டு வந்துவிடும். ''நான் அரசன். எனக்கு என்று கடமைகள் உள்ளன. அவற்றையொல்லாம் விட்டுவிட்டு எப்படி வரமுடியும்?'' என்றான் அரசன்.

''அரசபோகம், நிம்மதி இரண்டும் ஒரே நேரத்தில் கிடைக்கவேண்டும் என்பது முடியாத காரியம் உங்கள் சுகபோகத்திற்கு விலையாகத் தான் உங்கள் நிம்மதியை நீங்கள் கொடுத்து இருக்கிறீர்கள்! என்னை பாருங்கள்! என்னிடம் எதுவும் இல்லை. அதனால் ஏதுவும் என்னைவிட்டு போய்விடுமே என்ற பயமும் எனக்கு இல்லை. மிகவும் நிம்மதியாக நான் இருக்கிறேன் என்றார் அவர். இதைக் கேட்ட அரசர் மகிழ்ச்சியடைந்தார். தன்னுடைய மேலங்கிய எடுத்து அவனுக்கு பரிசாகக் கொடுத்தார்.

அவன் சிரித்துக் கொண்டே வாங்க மாட்டேன் என்று சொல்லிவிட்டான். '' இதை நீங்கள் கொடுப்பதால் எனக்கு எந்தப் பயனும் இல்லை. அதே நேரத்தில் இதை நான் வாங்கிக் கொண்டால் அடுத்த வினாடியில் இருந்து அதை எப்படி பாதுகாப்பது என்ற கவலை எனக்கு வந்துவிடும். அப்புறம் தூக்கம் வராது. நிம்மதி போய்விடும் என்று சொல்லிவிட்டு அந்தப் பிச்சைக்காரன் முன்புபோல் மகிழ்ச்சியாகப் பாடிக் கொண்டு சென்றுவிட்டான்.

அரசருக்கு அப்போது தான் நிம்மதியின் ரகசியம் புரிந்தது. நிம்மதி எங்கே இருக்கிறது என்று புரிந்து கொண்டார். அந்த இடத்துக்கு தம்மால் போகமுடியாது என்பதையும் அவர் உணர்ந்தார்.

மகிழ்ச்சிக்கும் நமக்கும் குறுக்கே நிற்பவை நமது ஆசைகளும் வசதிகளும் தான். எல்லாவற்றையும் துறந்தவர்களுக்கு, எதையும் எதுபார்க்காமல் வாழ்பவர்களுக்கு எவ்வித துன்பமும் கவலையும் இல்லை. நிம்மதி தானாகவே அவர்களைத்தேடிவரும். *(நன்றி: நீதிக்கதைகள்)*

# மனிதனும் நம்பிக்கையும்!



ஒரு பெரியவர் ரயில்லே பிரயாணம் பண்ணிக்கிட்டிருந்தார். ஏதோ ஒரு ஊர்லே அந்த ரயில் ரொம்ப நேரம் நின்னுக்கிட்டிருந்தது.

ஒருத்தன் பிச்சை எடுத்துக்கிட்டே ஜன்னல் ஓரம் வந்து நின்னான். பெரியவரைப் பார்த்தான்.

''ஐயா... எனக்குப் பெரிய கஷ்டம்!'' என்னு ஆரம்பிச்சான். அதுக்குள்ளே இந்தப் பெரியவர் அவனைத் தடுத்தார்.

''இதோ பார்... உன்னுடைய கஷ்டத்தைப் பற்றிப் பேச ஆரம்பிக்காதே... அதனாலே உன்னுடைய நேரமும் வீண். என்னுடைய நேரமும் வீண். நான் என்ன செய்யமுடியும். அதை மட்டும் சொல்!'' அப்படின்னார். அவனுக்குச் சந்தேகம். ஒரு மாதிரியா முழுக்க ஆரம்பிச்சான். ஏன்னா.. அவனுக்குத் தெரியும்...

தன்னுடைய கஷ்டத்தைச் சொல்லி அழுதாத்தான் கேட்கிறவங்க நம்புவாங்க... காசு போடுவாங்க... ஆனா இவரு ஆரம்பத்துலேயே நான் என்ன செய்யணும்ங்கறாரே... எவ்வளவு நம்பிக்கை நம்ம பேர்லே? அப்படின்னும் நினைச்சான். மெதுவா துணிச்சலை வரவழைச்சிக்கிட்டு ''ஒரு ரூபாய் கொடுங்க!'' ன்னான். பெரியவர் கொடுத்தார். இவன் வாங்கிக்கிட்டுப் போயிட்டான். போகும்போதே யோசிச்சான்.

''இவரு நம்ம கதையைக் கேட்காமலே.. நமக்குக் கஷ்டம் தான்னு நம்பி காசு கொடுத்துட்டார். ஆனா பல பேருக்கு நம்ம முழுக்கதையையும் கேட்டதுக்கு அப்புறமும் நம்ம பேர்லே நம்பிக்கை வர்றதில்லை! பொய் சொல்றோம்ன்னு நினைக்கிறாங்க. காசு கொடுக்க மாட்டேங்கறாங்க!''

அப்படின்னு நினைச்சிக்கிட்டே போயிட்டான்.

ஒரு அஞ்சு நிமிடம் கழிச்சி அவனே திரும்பி வந்தான்... வேறே உருவத்துலே! ஆமாம் இப்போ தலையிலே ஒரு குல்லா.. முகத்துலே ஒரு மீசை... அவனா இவன்? -ன்னு அடையாளம் தெரியாத அளவுக்கு மாறியிருந்தான்.

அதே பெரியவர் கிட்டே வந்தான்...

''ஐயா.. நான் ஒரு பெரிய கஷ்டத்துலே இருக்கிறேன்!'' ன்னு ஆரம்பிச்சான். பெரியவர் தடுத்தார்.

''இதோபார்...உன்னுடைய கஷ்டத்தைப் பத்தி எதுவும் சொல்லவேணாம்... நான் என்ன செய்யணும்? அதை மட்டும் சொல்!''-ன்னார்.

அவன் இவரை ஆச்சரியமா பார்த்தான். இவர் என்ன பைத்தியமா- ன்னு நினைச்சான். நம்மளை அடையாளம் தெரியலையா- அதுக்குள்ளே மறந்துட்டாரா.. ன்னு குழப்பம்! இருந்தாலும் மறுபடியும் துணிச்சலை வரவழைச்சிக்கிட்டு, ''எனக்கு இரண்டு ரூபாய்..'' - ன்னான்.

''இந்தா ரெண்டு ரூபாய்!''- ன்னு கொடுத்துட்டார்.

வாங்கிக்கிட்டுப் போயிட்டான்.

கொஞ்ச நேரம் கழிச்சி மறுபடியும் வந்தான்.. வேறே ஒரு வேஷத்துலே...! இப்போ ஒரு பழைய கோட்வேறே போட்டிருந்தான். மெதுவா பெரியவர் முன்னாடி வந்து நின்னான். அவனைப் பார்த்ததும் இந்தப் பெரியவரே ஆரம்பிச்சார்...

''இதோ பாருப்பா... உன் கஷ்டத்தைப் பற்றி ஆரம்பிக்கவே வேண்டாம்!'' -ன்னார்.

அவன் ஆச்சரியமா இவரைப் பார்த்தான்.

''என்னங்க பெரியவரே! உங்களை நினைச்சா ஆச்சரியமா இருக்கு! உங்களுக்கு அடையாளம் தெரியலையா! நான் அதே மனிதன் தான்!'' அப்படின்னான்.

பெரியவர் சொன்னார்:

''இதோபாருப்பா! நீ அதே மனிதன்தான்ங்கறது எனக்குத் தெரியுது...! அதே மனிதன் தான் நீ-ங்கறது உனக்குத் தான் தெரியலை போலிருக்கு -ன்னு நான் நினைச்சேன்!'' - அப்படின்னார்.

இவன் பார்த்தான். ''இந்தாங்க நீங்க கொடுத்த மூன்று ரூபாய்!'' -ன்னு நீட்டினான்.

''வேண்டாம்... அதை நீயே வச்சுக்கோ... அது நீ சம்பாதிச்ச பணம்!''- ன்னார்.

அவன் அதைக் கேட்காமல்... மூன்று ரூபாயை ஜன்னல்லே வச்சுட்டான். ''இதை நான் எடுத்துக்க மாட்டேன்'' -னுட்டான்.

''ஏன்... எடுத்துக்க மாட்டேன்ங்கறே?'' -ன்னு கேட்டார்.

அவன் சொன்னான்.

''என்னை நம்புகிற ஒரு மனிதரை நான் ஏமாற்றக் கூடாது!'' அப்படின்னு சொல்லிவிட்டு கூட்டத்தோடு கூட்டமா கலந்துட்டான்.

இது ஒரு பெரியவருக்கு (ஓஷோ) ஏற்பட்ட ஓர் அனுபவம். மனித இயல்பு என்ன தெரியுமா?

ஒரு மனிதன் நம்மளை ஏமாத்திபுட்டான் -னா நாம உடனே ஒரு முடிவுக்கு வர்றோம்- இனிமே எந்த மனிதனையுமே நம்பக் கூடாது..! அப்படின்னு.

இது ஒரு விவேகமான முடிவு அல்லங்கறது அந்தப் பெரியவர் சொல்ற கருத்து.

இன்றைக்கு நம்மை ஏமாற்றியவன் நாளைக்கும் நம்மை ஏமாற்றுவான்- ங்கற அவசியமில்லை.

ஒரு மனிதன் செய்யிற தவறுக்கு ஒட்டு மொத்தமா மனித வர்க்கம் மீதே நம்பிக்கை இழந்துடப்புடாது. நடந்து போறோம். ஒரு இடத்துலே கால் இடறுது... உடனே உலகம் பூறா இடறிவிடும் -ன்னு முடிவு கட்டலாமா? இது தான் அவர் கேள்வி!

இப்படி யெல்லாம் யோசிக்காததுனாலேதான் இன்றைக்குப் பலபேர் வாழ்க்கையை அவநம்பிக்கையோடவே கழிச்சிக்கிட்டிருக்கோம்.

இந்தக்காலத்து கதையெல்லாம் எப்படி இருக்கு தெரியுமா?

ஒரு பெரியவரைத் தேடி ஒருத்தன் வந்தான்.

''ஐயே.. என்னை ஞாபகம் இருக்கா?'' -ன்னான்.

''இல்லையே!''-ன்னார்.

''ஒரு 10 வருசத்துக்கு முன்னாடி.. நான் வாழ்க்கையிலே ரொம்ப கஷ்டப்பட்டு உங்ககிட்டே வந்தேன். நீங்கதான் அப்போ ஒரு ஆயிரம் ரூபாய் கொடுத்து என் வாழ்க்கையிலே விளக்கேத்தி வச்சீங்க!'' ன்னான்.

''அது பரவாயில்லை... அதுக்காக வெல்லாம் இப்படி வந்து நன்றி சொல்லணும்ன்னு அவசியமில்லை!'' ன்னார் இவர்.

நான் அதுக்காக வரலை ஐயா! அதே மாதிரி இன்னொரு தடவை என் வாழ்க்கையிலே விளக்கேத்தி வைக்கமுடியுமா? -ன்னு கேட்கறதுக்காக வந்தேன்!'' அப்படின்னான்! *(நன்றி: தகவல் களஞ்சியம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காட்டுப் பனங்காய் பொறுக்குவதில் கடும் போட்டி நிலவும். சின்னம் மாச்சி ஒருமுறை முதற்சாமம் கோழி கூவ பனங்காய் கடகத்துடன் வெளிக்கிட்டுப் போய் இருட்டில் புடையனில் இடறிவிழுந்து கடகத்தை தூக்கி கொண்டு வீட்டை ஓடி வந்து பார்க்க புடையன் கடகத்துக்கே கிடந்ததாம்.

அவ்வளவு காட்டுப் பனங்காய் பொறுக்குவதில் போட்டி அவ்வளவு இலாபம்.

வன்னியில் தங்குப் பனங்காய் பொறுக்கும் முறை ஒன்று இருக்கின்றது. ஏழெட்டு வண்டிக்காரர் ஒன்றாய் சேர்ந்து காட்டுக்குள் போய் ஒரு கிழமை தங்கி நின்று பனங்காய் பொறுக்கி ஏற்றி வருவார்கள் - (கொஞ்சம் இழக்காரமான வேலை என்பார்கள்)

ஆனால் பனை நிறைய மனிதரை வாழ வைத்த அற்புத மரம்.

யாழ்.தேவி இரயிலில் பனங்கிழங்கு விற்று பளையில் படித்து முன்னேறியவர்கள் பலர்.

சின்னாம்மாச்சி வீட்டுக்கு மு ங்கையில் ஒரு பனை நின்றது ஞாபகம். மிகப்பெரிய பனம்பழம். பனங்காய் பணியாரதுக்கு மிகவும் சுவையானது. மனுசி ஒரு பனங்காய் தன்னும் கேட்டால் தராது.

"அது மூத்தவனுக்கு குடுக்கோனும்" "அது சின்னவன் பெண்டில் கேட்டது"

நாங்கள் பெரிய தென்னம் மட்டையை எடுத்து பனை மரத்துக்கு கீழே நின்று ஓங்கி அடிக்க "தொம் தொம்" என்று சத்தம் கேட்க சின்னமாச்சி திண்ணையில் இருந்து விழுந்தடித்து சேலை உரிய ஓடி வந்து பார்க்கும்.

**கதை இரண்டு பகுதி - 2**




"சத்தம் கேட்டது ஒண்டையும் காணேல்ல" "ம்... எங்கை போட்டுது"..

கொஞ்சம் யோசிக்கும் நாம் பற்றை மறைவில் நின்று பார்க்க வீட்டை திரும்பி போகும். பிறகு மனம் பொறுக்காமல் திரும்பி வந்து பனையை சுற்றி பார்க்கும்.

"உந்த கோதாரி விழுந்த இரத்தினன்ரையள் தூக்கி கொண்டு போட்டுதுகள் .... அதுக்கிடையில்"

எங்கள் வீடு நோக்கி வசை பாடிவிட்டு போய்விடுவார்.

சின்னம்மாச்சி பனாட்டு பினைவதிலும் கெட்டிக்காரி.

காலையில் வெள்ளென காலை அகட்டி வைத்துக் கொண்டு அந்த மனுசி பனாட்டு பினைவதே தனியழகு (அவ்வளவும் விற்று காசாக்கி காணி வாங்கின மனுசி - இது நானறிய நடந்ததல்ல அம்மா சொல்லும் கதை. பின்னர் விலைவாசி உயர இது சாத்தியம் இல்லாமல் போய்விட்டது. பனாட்டு போடுபவர்களும் மிகக்குறைவு) பின்னாளில் பழகின தோசத்துக்கு பனாட்டு போடுவதை கண்டிருக்கின்றேன்.

எங்களூர் வளர்ப்பு மாடுகளுக்கு கடவுள் தந்த ஐஸ்கிறீம் பனங்காய் தான். ஒரு பனங்காயைக் கண்டு விட்டால் பசு மாடு அடையும் ஆனந்தம் உயர்வானது என நினைக்கின்றேன். உருட்டி உருட்டி முகத்தால் உன்னி மாடு பனங்காய் பிய்த்து உண்பது ஒரு கலைதான்.

யாரும் சிறுவர்கள் சாப்பிட்டு வாயைப் கழுவாமல் வந்தால்
"என்னடா பனங்காய் சூப்பினமாடு மாதிரி வாறாய்",

என்று கேட்கும் அளவிற்கு மாடு - பனங்காய் தொடர்பு முக்கியமானது. ஒரு மாடு ஒரு பனங்காயுடன் 45 நிமிடத்துக்கு மேல் செலவளிக்கும் (மினக்கெடும்). மாட்டின் வாயைச் சுற்றி ஒரு ஆறு மாதத்துக்கு கறுப்பாய் பனங்காய் படர்ந்தே இருக்கும். பனங்காய் சீசனில் மாடு புல்லைத் தேடுவதே கிடையாது.

(வளரும்)




இல்லாத பிரச்சினையும் தனக்கு வந்து
இன்னலுற வைக்கிறதே என்று வருந்தி
செல்லாது வெளியாலே வீட்டின் முன்னால்
சாய்கதிரை மீதினிலே சாய்ந்து கிடந்து
தில்லானா மோகனாம்பாள் பாட்டைப் பாடி
தித்திப்பாய் கனகருமோ கிடந்த வேளை
நில்லாது நிலைமாறி வந்த லொறி
நிம்மதியாய்க் கிடந்தவரின் மீது பாய்ந்ததே!
(அடுத்த சனிக்கிழமை கனகர் சந்திப்பார்)




யாழ்ப்பாணப் பண்பாட்டில் சிறப்பிடம் பெறும் மடங்கள் பல்வேறு சமய, சமூகச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய பௌதிகக் கட்டுமானங்கள் ஆகும். ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்து இலக்கியங்கள், அக்கால கட்டத்தில் காணப்பட்ட மடங்கள் சிலவற்றைப் பெயரிட்டுள்ள போதிலும், இன்று நம்மிடையே காணப்படும் மடங்கள் பலவும் பிரித்தானிய காலனிய காலத்தில் கட்டியெழுப்பப்பட்டவைதான். குறிப்பாகக் காலனிய கால யாழ்ப்பாணத்தில் நாவலராலும், அவரது பரம்பரையினராலும் மறுநிர்ணயஞ் செய்யப்பட்ட 'புதிய' சைவத்தின் மிக முக்கியமான கட்டுமானச் சூழலாக மடங்களும் முன்னிறுத்தப்பட்டன.

இவ்விதமெழுந்த மூத்த மடங்களின் ஒரு தொகுதி கீரிமலையில் நகுலேச்சரச் சுற்றாடலில் அமைந்துள்ளன. நகுலேச்சரம் இலங்கைத் தீவில் அமைந்திருந்த பண்டைய பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றாக எடுத்துக் காட்டப்படுகிறது. தேர்ந்த தொல்லியற் பேராசிரியரான பொ.இரகுபதி நேர்ப் பேச்சொன்றின்போது, இக் கோயிலை சைவத்தின் மூத்த மரபுகளுள் ஒன்றான பாசுபத சைவத்துடன் காரண காரிய ரீதியாக பலபட இணைத்துப் பேசினார். இப்பின்னணியே கீரிமலை ஆலய மையத்தினை பிதிர்க்கடனிறுத்தலின் மையமுமாகி இருக்க வேண்டும். காங்கேசன் துறை எனும் வட இலங்கையின் துறையூடாக மேற்படி பாசுபதமரபு பயணப்பட்டு இங்கு வந்திருக்கலாம். கைக்கெட்டும் தகவல்களின்படி இக்கோயில் 1621 களில் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டுள்ளது. மீளவும் 1878 களில் நாவலரது முன்முயற்சியின் பயனாக 1894 இல் புனருத்தாரணஞ் செய்யப்பட்டுமுள்ளது.

இந்தப் பண்பாட்டு வரலாற்றுச் சூழலுக்குள் அமையப்பெற்ற மடங்களுள் சிறப்பானதும், இலங்கையிலுள்ள சைவ மடங்களுக்குள் கட்டடக்கலை என்ற ரீதியில் தனித்துவமானதாகக் காணப்படுவது சிறாப்பர் மடமாகும்.

மானிப்பாயைச் சேர்ந்த கதிரவேலுச் சிறாப்பரால் 1891 இல் கட்டப்பட்ட மேற்படி மடம் நூற்றாண்டுகளைக் கடந்த எமது மூத்த கட்டுமானங்களுள் ஒன்றும்







வாரந்தோறும் பார்த்தீர்களா? கேட்டீர்களா? பகுதியில் குறைகளைத் தான் சொல்வீர்களா? ஏன் உங்களுடைய கண்களுக்கு, நல்லது தென்படாதா? அல்லது நல்ல செயற்பாடுகள் பற்றி கேள்விப்பட்டதில்லையா? அத்தகைய நல்ல விடயங்களை சொன்னால் ஏனையவர்களும் அதனை முன் மாதிரியாகக் கொண்டு செயற்படுவார்கள் தானே என்று உங்களில் பலர் உங்களுக்குள் பேசிக் கொள்கிறீர்கள்.

அதனால் இம்முறை நல்லதொரு ஆரோக்கியமான விடயத்தைச் சொல்லப்போகிறேன்.

"இப்பொழுதெல்லாம் ஆலயத்திருவிழாக்கள் களை கட்டத் தொடங்கிவிட்டன. இசைக்குழுக்கள், வானவேடிக்கையென்று சும்மா அதிருதல்ல.. ஆயிரங்கள், லட்சங்கள் வானவேடிக்கையில் சில நிமிடங்களில் பஞ்சாக பறந்து சிதறுதல்ல... இப்படியெல்லாம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ...டத்தைப் பாதுகாப்போமா?


,தனிச்சிறப் புடைய எமது மரபுரிமைகளின் வரிசைக் குரியதுமாகும்.

அடிப்படையில் வானத்துக்குத் திறக்கப்பட்ட நடுமுற்ற முடைய நாற்சார மையத்தில் இருந்து கிளம்பி வடக்குத் தெற்காக நீண்டும், கிழக்கு மேற்காக அகன்றுமுள்ள இக்கட்டுமானம் திண்ணைகளையும், திண்ணைதிறம்பியுருவான தூண் களுடைய விறாந்தைகளையுமுடையது. நெருக்கமான இராச ஊசிக்கால் கூரைத்தாங்கமைவு வடபுலத்தின் அழகான கூரை தாங்கமைவுகளுள் ஒன்றாக அதனை மாற்றியுள்ளது. பல அறைகள், சமயற்கட்டு, கிட்டங்கி முதலியவற்றோடு மிகப் பரந்து அது விரிந்துள்ளது.

இம்மடத்தின் கட்டடவியற் சிறப்புடைய தலையாய பகுதி வடக்கிலும் - தெற்கிலும் உள்ள வாயில் முகப்பமைவாகும். கீழைத்தேய - மேலைத்தேய கட்டடவியற்கலப்பின் மிகவும் அழகியல் பூர்வமான நிறுவுகையான இது மேலைத்தேய பரோக்கிய முகப்பினையும், திரா விடக் கோபுரத்தினையும் ஒன்று கலப்பதன் மூலம் இதனைச் சாதித்துள்ளது. அதிலுள்ள சுதைவேலைப்பாடுகளும், அதன் வெளிப்பாட்டுப் பண்பும் எமது காண்பியக் கலை மரபின் உரு கால கட்டத்தின் தகைமை வாய்ந்த சுட்டியுமாகும். எனது தனிப்பட்ட பார்வையின்படி இலங்கையிலுள்ள முகப்பமைவுகளின் முதல்வரிசையைச் சார்ந்ததும், எமது கடந்த காலத்தின் மிகச் சிறந்த மரபுரிமை யாகவும் இதுவுள்ளது.

ஆனால், யுத்தம் - எமது அலட்சியமாகியவற்றின் மத்தியில் மேற்படி பெருமை மிக்க அமைவோ நாளிலும் - பொழுதிலும் சிறுகச் சிறுக அழிந்து கொண்டு செல்கிறது. நகுலேச்சரம் திருத்தப்படுகிறது. அது போல இதனையும் திருத்த முடியும்.

ஆனால் அதன் பண்டைய தனித்துவங் கெடாது, அதனை ஒரு மரபுரிமையைப் பாதுகாக்கும் விஞ்ஞானபூர்வமான



ம. திருக்குமரன்

முறையுடன் செய்தல் வேண்டும். ஒரு தகைமையுடைய கட்டடக் கலைஞரது ஆலோசனை அதற்கு மிக மிக அவசியம். இல்லாது விடின் இருப்பதையும் அழித்துவிடுவோம். பலவேளை காக்க வேண்டும் என்ற நன்நோக்கம் இருந்தாலுங்கூட இவ்விதமான விழிப்பின்மை காரணமான விரும்பத்தகாத நிலவரங்கள் ஏற்படுகின்றன. காலம் இன்னும் கடக்கவில்லை. இப்போது நினைத்தாலும் சிறாப்பர் மடத்தினைக் காக்க முடியும். தயாரா?★★★★★★★★

# ...பாஷ்!

செய்தால் தங்களுக்கொரு கௌரவம் என்று கருதிக்கொள்பவர்கள் பலர் இருக்கிறார்கள்.

இத்தகைய நிகழ்வுகளில் ஈடுபடுகின்ற இந்து ஆலயங் களின் பிரதிநிதிகளைச் அரச அதிகாரிகள் சந்தித்து அவர்க ளுக்கு அறிவுரைகள் பல கூறி யதார்த்தத்தை எடுத்துச்சொல்லி, இவ்வாறு அவமே செலவழிக் கின்ற பணத்தினைத் திரட்டித் தாருங்கள் வறிய மாணவர்களின் கல்விக்கு உரமூட்டுவோம், என்று தயவாக - அன்பாக அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

உடனே அவர்களும் தமது நியாயத்தைப் புரிந்து, வறிய மாணவர்களின் தேவைகளை அறிந்து தமது ஆலயத்தின் ஆடம்பரத்திற்கான நிதியினைத் திரட்டித் தருவதாக கூறினார்கள். சுமார் இருநூறு ஆலயங்களின் நிர்வாகம் இவ்வாறு முன் வந்திருக்கிறது. என்றால் பாருங்களேன்! இவர்களின் காத்திரமான பணிக்குப் போடுங்கள் ஒரு சபாஷ்!

-கவிநேசன்-

உண்மையிலே இந்தச் சம்பவத்தைக் கேட்டதும் மெய்சிலிர்த்துப் போனேன். அதிகாரிகள் தமது கடமைக்கப்பால் இவ்வாறு சமூகத்திற்கு அர்ப்பணிப்பான பணிகளையும் செய்ய முன் வந்திருக்கிறார்கள் என்ற திருப்தி மனதில் ஏற்படுகிறது. அத்தோடு அவர்களைப் பாராட்டாமலும் இருக்க முடியாது.




இப்படியொரு காத்திரமான சேவையினை நல்லூர் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலரின் வழிநடத்தலின் கீழ் சிறுவர் நன்னடத்தைப் பிரிவும், கலாசாரப்பிரிவும் இணைந்து மேற்கொண்டு வருகின்றன.

இத்தகைய செயற்பாடுகளைஏனைய திணைக்களங்களில் உள்ள சமூகப் பணிசார்ந்த பிரிவுகளும் மேற்கொண்டால் தெரிந்தோ, தெரியாமலோ - தவறான பாதையில் செல்கின்ற எம் சமூகத்தவர்களை நேரானதும் - சீரியதுமான பாதையில் இட்டுச்செல்லலாம் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய சேவையினால் தவறுகளும் திருத்தப்படுகின்றன. தேவைகளும் நிறைவேற்றப்படுகின்றன. இரண்டு காரியங்கள் நன்றே நிறைவேறுகின்றன.

# இது இந்தக் காலம்

தொல்புரம் சி.கதிர்காமநாதன்

மறுபடியும் நடத்துநர் காட்டுக் கத்தல் கத்தினார். சனங்களை வசைமாரி பொழிந்தார்.

" பின்னால போங்கோவன், ஏன் கம்பியை பிடிச்சுக் கொண்டு மரம் மாறி நிக்கிறியள்"

' உந்தப் 'பச்சை' சட்டைக் காரரை தட்டும் ஐயா! பின்னால் போங்கோவன் சீற்றில படுத்தெல்லே கிடக்கிறியள்'

அம்மா எங்கையணை பார்த்துக் கொண்டு நிக்கிறாய். பஸ் ஓடுற பக்கம் நில்லனை.

அக்கா உந்தக் காலை சீற்றுக்குள்ள வையுங்கோ. உப்பிடி அகட்டி வைச்சா யார் நிக்கிறது?

"ஐயா எழும்புங்கோ. சீற்றில ரண்டுபேர்தான் இருக்கலாம், மூன்று பேர் இருக்கலாகாது எழும்புங்கோ. ஏலாட்டி அடுத்த பஸ்சில வாங்கோ"

"பின்னால போங்கோ"

பின்னால போங்கோ"

வழியில ஸ்கூல் பிள்ளைகளை ஏத்த வேணும் 'பின்னால போங்கோ' என்ற வேண்டுகோளை நாங்கள் எவ்வளவு காலமாய் கேட்டுக் கொண்டு இருக்கிறோம். பஸ் நடத்துநர் 'பயணியை' பின்னால் அனுப்புவதற்கு என்னென்ன வழிகளைக் கைக்கொள்கிறார். நாங்கள் எவ்வளவு காலமாய் பஸ் பயணம் செய்து கொண்டிருக் கிறோம்.



## பின்னுக்குப் போங்கோ

பஸ்ஸில் பயணம் செய்யாத மனிதர்கள் யாரே னும் உண்டா? எனக்கு விவரம் தெரிந்த நாள் தொடக்கம் இன்றுவரை பாவம் நடத்துநரின் கூப்பாடு ஓயவேயில்லை. என்னதான் நடக்கிறது.

" பின்னால போ என அவர் சொல்ல வேண்டிய தேவையென்ன. மனிதர்கள் நமது சுயசிந்தனைப்படி பஸ்ஸில் பயணம் செய்து அலுவல்கள் செய்ய முடியாதா? அவர்களுக்கு எப்போதும் யாரே னும் கட்டளை பிறப்பித்துக் கொண்டுதான் இருக்க வேண்டுமா?

" ஒருமுறை தெரிந்தால் அதனைத் தொடர்ந்து கடைப்பிடித்து செய்வது மனிதனுக்கு முடியாத காரியமா? முடியாது என்றால் ஏன்? நான் சிந்தனையுள்ள ஆறறிவு மனிதனென்று தன்னைத் தம்பட்டம் அடித்துக் கொள்கிறான். முன்னால் போவதற்கும் பின்னால் போவதற்கும் என இரு கூட்டத்தை இறைவன் படைத்திருக்கிறானா? இதன் காரணமாகத் தான் மனிதர்கள் "யார் போவது என்ற நிலையில் ஒருவரையொருவர் பார்த்தபடி நடத்துநர் சொல்வதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் சடப்பொருளாய் நிக்கின்றார்களா?

நடத்துநர் என்ன சொல்கிறார்?

"கடவுளே... தூரம் போற ஆக்கள் பின்னால போங்கோவன்"

ஐயா... நீங்கள் எங்க போறியள்?

ரவுணுக்கு

ரவுணுக்கு என்றால் பின்னால போங்கோவன், ஏன் முன்னுக்கு நிக்கிறியள் கடைசியாய் இறங்கலாம்தானே!

"அம்மா நீங்கள்....

ஓட்டுமடம்

அட ஓட்டுமடமோ... வந்து பின்சீற்றில இருக்கிறியள். பிறகு இறங்குறது கஸ்ரமெல்லே எழும்பி முன்னுக்கு வாங்கோ, என்னடா சனங்கள் ஒண்டும் தெரியாமல் நிக்குதுகள்.

நடத்துநரின் கதையைப் பார்த்தால் சனங்களுக்கு தாங்கள் " நிக்கிற" இடம் தெரியாது போல் உள்ளது. யாரும் அவர்களுக்கு சரியான விளக்கத்தை,பாடத்தைக் கொடுக்கத் தவறிவிட்டார்களா?

விளக்கம் இல்லாத நிலையில்தான் முன்னால் நிக்க வேண்டியவர்கள் பின்னாலையும் பின்னால் நிக்க வேண்டியவர்கள் முன்னாலையும் நிக்கிறார்களா? அல்லது தத்துவங்கள், புத்தகங் கள், பிரசங்கங்கள் எல்லாம் மனிதர்களை முன்னாடி போ முன்னாடி போ என்றுதான் சொல்கின்றன. எடுத்து வைத்த காலை பின்னாடி வைக்காதே. வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் முன்னோக்கி செல். பின்னோக்கிப் பார்க்காதே, மொத்தத்தில் எல்லாமே முன்னால் போ என்றுதான் முழக்கமிடுகின்றன. இந்தப் பரம்பரையில் வந்த எங்க ளுக்குப் பின்னால் போ என்று சொன்னால் ஏற்றுக் கொள்ளவோமா?

அப்படியானால் என்ன செய்வது?

வாழ்க்கையில் முன்னேறுவது என்றால் முன்னுக்கு போக வேண்டும். பஸ்ஸில் போவதென்றால் பின்னுக்கு போக வேண்டும். ஆஹா எப்பேர்ப்பட்ட வாக்கியம். ஒவ்வொரு தமிழ் மகனும் இதனைக் கருத்தில் கொண்டால்

நடத்துநரின் கூப்பாடு ஓய்ந்து போயிருக்கும்.

இங்கே நடக்கும் விஷயத்தைப் பாருங்கள்

அம்மா... வாங்கோ என்ன பிரச்சினைக்காக மகனைக் கூட்டிக்கொண்டு வந்தனீங்கள்.

காலேல தொடங்கி பின்னேரம் வரை என்ன நடக்குதெண்டு தெரியாமல் குழப்பமாய் இருக்கிறார் டொக்டர்

உங்கட மகன் மாத்திரமல்ல... 'இங்க நாட்டில கனபேர் உப்பிடித்தான்' என்ன நடக்கிறதெண்டு தெரியாமல் இருக்கினம்.★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். சொல்வாக்கைக் காப்பாற்றி செல்வாக்கை அதிகரித்துக் கொள்வீர்கள். கணவன், மனைவி உறவில் அன்யோன்யம் அதிகரிக்கும். பொது விடயங்களில் தலையிட்டு புகழ் சேர்க்க முற்படுவீர்கள். பிள்ளைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள்.

### இடபம்



தெய்வ காரிய பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். பல நாள்களாக இழுபறியாக இருந்த காரியம் திடீரென முடிவுக்கு வரும். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். கடனுதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் பலன் கிடைக்கும். மற்றவர்கள் மூலம் உங்களின் வேலை ஒன்றை முடிப்பீர்கள்.

### மிதுனம்



முற்போக்கு சிந்தனையுடன் செயற்படும் நாள். பணிச் சூழ்நிலை ஆறுதல் தரும். எதிர்பாராத விருந்தினர்கள் வருகையால் செலவு ஏற்படலாம். தொலைபேசி வழியில் சந்தோஷம் தரும் அல்லது சங்கடம் தரும் செய்தியை கேட்கலாம். சில விடயங்கள் ஏட்டிக்கு போட்டியாக நடந்தாலும், இறுதியில் நன்றாக முடியும்.

### கடகம்



சந்திரனை வழிபட்டு சங்கடங்களைக் குறைத்துக் கொள்ள வேண்டிய நாள். திட்டமிட்ட காரியம் ஒன்று நினைத்ததற்கு மாறாக நடக்கலாம். உதவி நாடி வந்த ஒருவருக்கு அவர் கேட்ட உதவியை செய்ய முடியாமல் அதிருப்திக்கு ஆளாகலாம். வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். பேராசைகளைத் தவிர்க்க வேண்டும்.

### சிங்கம்



ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். மனைவி வழியில் மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கலாம். நண்பர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். பணம் கொடுக்கல் வாங்கலில் சுமூகமான நிலைமை காணப்படும். தொழில் ரீதியாக வர வேண்டிய பழைய மிகுதிகளை வந்து சேரலாம். உற்சாகம் அதிகரிக்கும் நாள்.

### கன்னி



வாய்ப்புகள் வாயில் தேடி வரும் நாள். சில தரப்பில் எதிர்ப்புகள் இருந்தாலும் மற்றொரு தரப்பில் உங்களுக்கு ஆதரவு கிடைக்கும். வாகனங்களில் செல்லும் போது அதிக வேகத்தை தவிர்ப்பது நன்மை தரும். கடிதங்கள் மூலம் நல்ல செய்திகள் வந்து சேரலாம். கட்டண மிகுதிகளை செலுத்துவீர்கள். ஆதாயகரமான நாள்.

### துலாம்



உடல் உபாதைகளால் சோர்வு, சோம்பல் அதிகரிக்கும். நீண்ட நாள்களாக செல்லாத உறவினர் வீட்டுக்கு திடீரென செல்லலாம். நீங்கள் தொடர்பு கொண்டு பேச முற்பட்ட போது கிடைக்காத நபர் இன்று உங்களுடன் தொலைபேசியில் பேசலாம். குடும்ப உறுப்பினர்களின் விருப்பங்களை நிறைவேற்றி வைக்க முற்படுவீர்கள்.

### விருச்சிகம்



எளிதில் முடிந்து விடுமென நினைத்த வேலை ஒன்றில் அதிக அலைச்சலை சந்திக்கலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்தவர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். உறவினர்கள் தொடர்பான விடயங்களில் பட்டும்படாமல் நடந்து கொள்ள வேண்டும். மனைவி வழியில் அன்புத் தொல்லை உண்டு.

### தனுசு



நினைத்தது எல்லாம் நடக்கும் நாள். தேக ஆரோக்கியத்தை சீர்படுத்த மருத்துவ சிகிச்சைகள் மேற்கொள்ளலாம். தாய் வழியில் ஏற்பட்ட சிரமங்கள் குறையும். உத்தியோகத்தர்கள் மகிழ்ச்சி, உற்சாகமாகக் காணப்படுவர். பிரபலங்களின் சந்திப்பு நிகழ வாய்ப்புகள் உண்டு. பழைய தவறு ஒன்றை திருத்திக் கொள்வீர்கள்.

### மகரம்



மற்றவர்கள் விவகாரங்களில் மூக்கை நுழைக்காமல் ஒதுங்கி இருக்க வேண்டும். ஓய்வு எடுக்க நினைத்தாலும் அது முடியாத அளவுக்கு யாராவது வந்து தொந்தரவு கொடுக்கலாம். உங்களின் நம்பிக்கையை சீர்குலைக்கும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். பணவரவுகளை விட செலவுகளே அதிகமாக இருக்கும்.

### கும்பம்



ஆதாயம் தரும் வேலைகளுக்காக அலைந்து திரிவீர்கள். வியாபாரிகள் கடன் மிகுதிகளை வசூலிப்பதில் திருப்தி காண்பர். உறவினர்களிடம் பேசும் போது கடும் வார்த்தைகளை தவிர்ப்பது நன்மை தரும். பெண்கள் வழியில் பெருமைப்படும் உதவி கிடைக்கும். பெருமைக்காக சில செலவுகளை செய்வீர்கள்.

### மீனம்



பெற்றோர்கள் தொடர்பான விவகாரங்களில் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். நீண்ட நாள்களாக உங்களுடன் இருந்த நண்பர் ஒருவரை பிரிய நேரிடலாம். பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்ட வேண்டும். சகோதரிகள் வழியில் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம்.

# மரண அறிவித்தல்

## அமரர் கந்தசாமி மனோன்மணி (மணி)

## (முறிவு நெறிவு வைத்தியர்-கட்டுடை, மானிப்பாய்)

கட்டுடை, மானிப்பாயைப் பிறப்பிட மாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி கந்தசாமி மனோன்மணி 29.06.2010 செவ்வாய்க் கிழமை காலமானார்.



அன்னார் கந்தசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வர்களான வேலன் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தங்காள் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான சண்முகம், வீரசிங்கம், குணசிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரியும், நாகம்மா, இரத்தினம், பாக்கியம், சரஸ்வதி, இராசையா, நாகேஸ்வரி, கதிரமலை ஆகியோரின் மைத்துனியும் சதீஸ்குமார் (லண்டன்), தயாநிதி (ஜேர்மனி), பவாநிதி (பனை தென்னைவள அ.வி.கூ.சங்கம்), சிவநிதி (ப.நோ.கூ.சங்கம், மானிப்பாய்), உதயகுமார் (ஜேர்மனி), ஜெயாநிதி ஆகியோரின் பாசமிகுதாயும் செல்வராணி (லண்டன்), சக்திவேல் (ஜேர்மனி), சுதாகரன் (பிரான்ஸ்), முருகானந்தன், சுவர்ணா (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும் சுயந்தன், வினிசியா, ஜெரன்சிகா, கபில்ராஜ், கஜனி, யூட் கனிஸ்ரன், சந்தியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.07.2010) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கட்டுடை, மானிப்பாய். குடும்பத்தினர்.

(100165)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

16.08.1992

* இந்தியாவில் இருந்தும் மற்றும் வெளிநாடுகளிருந்தும் தாயகம் திரும்புவோரால் வடக்கில் 'ஏய்ட்ஸ்' நோய் பரவும் சாத்தியங்கள் உண்டு என வைத்தியசாலை வட்டாரங்கள் எச்சரித்திருப்பதாகத் தெரிவிப்பு.

* மட்டக்களப்பு -அம்பாறை மாவட்டங்களின் எல்லைப்பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் 7 பொலிஸார் உயிர் இழந்ததாகத் தெரிவிப்பு.

17.08.1992

* கண்ணிவெடித் தாக்குதலில் உயிர் இழந்த தளபதிகள் டென்ஸில் கொப்பேகடுவ, விஜய விமலரத்ன ஆகியோர் திட்டமிட்ட இராணுவ நடவடிக்கை வடக்கில் திட்டமிட்டபடி மேற்கொள்ளப்படும் என வடபிராந்திய புதிய இராணுவத் தளபதி தெரிவிப்பு.

* சுவிற்சர்லாந்தில் உள்ள இலங்கை அகதிகள் பலவந்தமாகத் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள் என கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரகப் பொறுப்பதிகாரி தெரிவிப்பு.

18.08.1992

* யாழ்.குடாநாட்டில் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை மேலும் விஸ்தரிக்கும் நோக்குடன் இராணுவத்தினர் தமது நடவடிக்கைகளை எந்தநேரத்திலும் ஆரம்பிக்கலாம் எனத் தெரியவருவதாக கொழும்பு பத்திரிகைகள் தெரிவிப்பு.

* ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் பத்மநாபா உட்பட 14 பேர் கொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 18 பேரும் நேற்று விசேட நீதிமன்றத்தில் ஆயர் செய்யப்பட்டதாகத் தெரிவிப்பு.

19.08.1992

* மண்டைதீவுப் பகுதியில் இருந்து இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட 50 கலிபர் துப்பாக்கித் தாக்குதலில் யாழ். ஆஸ்பத்திரி வலையத்துக்குள்ளும் சன்னங்கள் விழுந்து சிதறியதாக குற்றச்சாட்டு.

* மட்டக்களப்பு மாவட்டம் - மயிலந்தனையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் பொதுமக்களின் பெயர் பட்டியல் ஜனாதிபதி செயலகத்திடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிப்பு.

20.08.1992

* செய்தியாளர்கள் தாக்கப்படும் சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று கொழும்பு நகரில் பொருந்தொகையான செய்தியாளர் கூடி அரசுக்கு எதிராக மறியல் போராட்டம் நடத்தியதாகத் தெரிவிப்பு.

* கனத்தைக் கலவரங்களை விசாரிக்க ஆனைக்குழு வொன்றை நியமிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ அரசைக் கோரியிருப்பதாகத் தெரிவிப்பு.

21.08.1992

* யாழ். குடாநாடு மீதான இலங்கை பாதுகாப்புப் படையினரின் பெரும் தாக்குதல் ஒன்று நேற்று பெரும் எடுப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

* குடாநாட்டில் மேலும் பல பகுதிகளை அரச கட்டுப்பாட்டில் கொண்டு வருவது, விடுதலைப் புலிகளைப் பேச்சு வார்த்தைக்கு வரத் தூண்டுவது என்ற இரட்டை நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டதே யாழ்ப்பாணக் குடாநாடு மீதான இராணுவ நடவடிக்கை என ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவிப்பு.

22.08.1992

* ஈழத்தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக அவுஸ்திரேலியா, பிரான்ஸ், சுவீடன் ஆகிய நாடுகளின் தலைவர்களுடன் தாம் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாகத் மொரிஷியஸ் நாட்டு வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு.

* யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீது இராணுவத்தினர் மேற்கொள்ளும் "ஒப்பரேஷன் பூமியதிர்ச்சி" இராணுவ நடவடிக்கை காரணமாக பொது மக்கள் பெரும் அளவு பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிப்பு.

23.08.1992

* ஜே.வி.பியினர் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தத் திட்டமிட்டு வருகின்றனர் என ஜனாதிபதி பிரேமதாஸ நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிப்பு.

* யாழ். குடாநாட்டில் இடம் பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்து மானிப்பாய் பிரதேசத்துக்கு வந்த பொதுமக்களுக்காக மட்டும் 43 முகாம்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

24.08.1992

* அடுத்த மாதம் ஜகார்த்தாவில் நடக்கவுள்ள அணிசேரா நாடுகளின் மாநாட்டில் இலங்கை இனப்பிரச்சினை விடயத்தை மொரிஷியஸ் நாடு எழுப்பும் எனத் தெரிவிப்பு.

* அமைச்சர் தொண்டமான் ஒரு இனவாதி அல்ல என ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவிப்பு.

25.08.1992

* கடந்த மூன்று நாள் இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்த 20 ஆயிரம் குடும்பங்கள் யாழ். குடாநாட்டில் பாதிப்புற்ற நிலையில் சிரமப்படுவதாகத் தெரிவிப்பு.

* "ஒப்பரேசன் பூமியதிர்ச்சி" நடவடிக்கை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகத் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன தெரிவிப்பு.

26.08.1992

* 1988 டிசெம்பர் ஜனாதிபதித் தேர்தலில் பிரேமதாஸ வெற்றி பெற்றமையை ஆட்சேபித்து தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பு அடுத்த வாரத்தில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிப்பு.

* மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளில் இதுவரை தமிழர்களின் 17 ஆயிரத்து 614 வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டதாகத் தெரிவிப்பு.

27.08.1992

* கூட்டுப்படைத் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க நேற்று பலாலி இராணுவ முகாமுக்கு விஜயம் செய்து படைத்தளபதிகளுடன் ஆலோசனை நடத்தியதாகத் தெரிவிப்பு.

* மட்டக்களப்பு, பொலன்நறுவ எல்லைப்புறங்களில் குடியேற்றப்பட்டுள்ள சிங்களவர்களுக்கு பாதுகாப்புக்கென அரசு துப்பாக்கிகளை வழங்கிவருவதாகத் தெரிவிப்பு.

28.08.1992

* பலாலியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிலர் களுத்துறையில் உள்ள தடுப்பு முகாமுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பலாலிக்கு விஜயம் செய்ம சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு அதிகாரிகள் தெரிவிப்பு.

* புதுடில்லி விமான நிலையத்தில் நேற்று இடம்பெற்ற விமான விபத்தொன்றில் இந்திய எல்லைப்பாதுகாப்பு படையின் இன்ஸ்பெக்டர் ஜெனரல் கொல்லப்பட்டதாகத் தெரிவிப்பு.

29.08.1992

* வெற்றிலைக்கேணிப்பகுதியில் அமைந்திருந்த இராணுவ காவலரண்கள் மீது விடுதலைப்புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் 10 படையினர் பலியானதாகத் தெரிவிப்பு.

* வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு இல்லையேல் நாட்டின் எதிர்காலம் சூனியமாகிவிடும் என நீதி அமைச்சர் ஹமீத் எச்சரிக்கை.

30.08.1992

* இலங்கைக் கடற்படைக்குச் சொந்தமான நவீன ரக விசைப்படகு ஒன்றை விடுதலைப்புலிகள் நேற்று கைப்பற்றியுள்ளதாகத் தெரிவிப்பு.

* முன்னாள் அமைச்சரான லலித் அத்துலத் முதலி நேற்று கொழும்பில் வைத்து காடையர் குழு ஒன்றினால் தாக்கப்பட்டதாகத் தெரிவிப்பு.

31.08.1992

* திருகோணமலை நகர மத்தியில் - பஸ் நிலையப்பகுதியில் தனியார் பஸ் ஒன்றில் குண்டு வெடித்ததால் இராணுவச் சிப்பாய் உட்பட 9 பேர் பலியானதாகத் தெரிவிப்பு.

* களுத்துறை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழர்கள் படிப்படியாக விடுதலை செய்யப்படவிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிப்பு.

# புத்தகசாலை

## வட்டுக்கோட்டைக் கூத்தும் கிராமியக் கலைகளும்



நம்மத்தியில் இன்றும் உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் அறிஞர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் நாடக விற்பன்னர்கள் என்று அனைவரதும் அனுபவங்கள் மற்றும் படைப்பு கள் எழுத்துருவில் பதியப்பெற வேண்டியது இன்றைய காலத்தின் தேவை மட்டுமன்றி வருங் காலத்தின் தேவையாகும். என்று வலியுறுத்து கின்றோம்.

இந்தப் பணியில் தனிப்பட்டவர்கள் ஈடுபடுவதைவிட சமூக அமைப்புகள், கலைக்கூடங்கள், கலாசார நிலையங்கள் ஏன் சனசமூக நிலையங்களும் கூட ஈடுபட வேண்டும். இதன் மூலம் மறைந்து கொண்டிருக்கும் நம்மூர் கலைகளை, கலாவிற் பன்னர்களை, கலாசார அமைப்புக்கள் எல்லாம் பிற்கால சந்ததியினருக்காக சேமித்துவைக்க முடியும்.

இந்த வகையில் சங்கானைப் பிரதேச செயலகத்தின் கீழ் இயங்கும் வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவை பாராட்டுக்குரியது. அவர்கள் "வட்டுக் கோட்டைக் கூத் தும் கிராமியக் கலைகளும்" என்றதலைப்பில் கலாபூஷணம் கந்தையா நாகப்பு எழுதிய நூலினை வெளியிட்டுப் பெருமை சேர்த்துள்ளனர். இது இளம் கலைஞர்களுக்கும் எதிர்காலச் சந்ததியினருக்கும் பல செய்திகளை வழங்குவதாக உள்ளது. நிச்சயமாக இந்நூல் உரியமுறையில் ஆய்வு செய் யப்பட வேண்டிய தொன்றாகும்.

இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கியுள்ள பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: எமது பாரம்பரிய கலைகளையும் அதன் ஊற்றுக்கால்களையும் ஓட்டங்களையும் பதிவு செய்ய வேண்டிய எம்முன்னே பரந்து கிடக்கின்ற சமூக, பொருளாதார, அரசியல் வாழ்வியல் அழியல் களால் எமது கலைகள் மறக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் வருகின்றன. இத்தகைய சூழலை மனங்கொண்டு நமது பலத்தைப் பதிவு செய்யும் திரு.நாகப்பு அவர்களைப் பாராட்டுகின்றோம் - என்று குறிப்பிட்டுள்ளார்.

நவீன தொழில் நுட்ப வளர்ச்சியினால் தொலைக்காட்சி, இணையத்தளம் என்று தமது பொழுது போக்கினைக் கழித்துக்கொண்டிருப்ப தால் பழமைகள் அதிலும் எமது பாரம்பரியக் கிராமியக்கலைகள் அருகி வருகின்ற இந்த அவசரயுகத்தில் காலத்தின் தேவையுணர்ந்து இந்நூலை இவர் படைத்துள்ளார்.

இயற்பகுதி, இசைப்பகுதி, நாடகப்பகுதி, கிராமியக்கலைகள் என வகைப்படுத்தி எமது பாரம்பரிய கலைவடிவங்களின் நுணுக்கங்களையும் அதன் தார்ப்பரியங்களையும் அழகுற சொல்லியிருக்கின்ற விதம் பாராட்டுதலுக்குரியதாகும்.

கிராமியக் கலைகள் பற்றிய த்கவல்கள் எழுத்துருவில் பதியப்படாமல் விட்டுள்ளமை குறித்து நூலாசிரியர் க.நாகப்பு தமது நூலில் பின்வருமாறு ஆதங்கம் வெளியிட்டிருப்பது கவனத்துக்குரியது.

கூத்துக்கள் அழிந்துபோகாவண்ணம் கலாபூஷணம், கலைவாரிதி அ.முருகவேள் ஆசிரியர் அவர்கள் கையெழுத்துப் பிரதியெடுத்து அவற்றை ஆவணப்படுத்தியதைப்போல் முன்னுள்ளவர்கள் அந்தந்தப் பாத்திரங்களின் ஆட்ட முறைகளையும் மத்தளத்தாளக்கட்டையும் எழுதி ஆவணப்படுத்தாமல் விட்டதுடன் இக் கூத்துக்கள் எமது ஊருக்குள் எவ்வாறு வந்தது எந்தெந்த பாத்திரங்களை யார் யார் அக்காலத்தில் ஏற்று ஆடினார்கள் என்பன போன்ற வரலாற்றுச் சான்றுகளைக் காலத் துக்குக்காலம் எழுதி ஆவணப்படுத்தாமல் விட்டுவிட்டார்கள்.

இத்தகைய குறைபாடுகள், இடைவெளிகள் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதனை நீக்குவதற்கு திரு.நாகப்பு அவர்களின் முயற்சி ஏனையோருக்கு முன்மாதிரியாக அமையட்டும். *(கவிநேசன்)*

## பொதுத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்



சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் ஆசிரியர் சு.பரம்தில்லைராஜன் எழுதிய "பொதுத்தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்" நூல் வெளிவந்துள்ளது.

மாணவர்களுக்குப் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பொதுத் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் பாடம் தொடர்பான விடயங்களைத் தாங்கி இந்நூல் வெளிவந்துள்ளது.

கணனி தொடர்பான அடிப்படை விடயங்களைத் தெட்டத்தெளிவாக விளக்குகின்ற நூலாக வெளிவந்துள்ளமையும் அதனை மாணவர்கள் படித்துப் பயன் பெறக்கூடியவகையிலும் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளமை பாராட்டத்தக்கதாகும்.

## வளமாகும் குடும்பவாழ்வு




அருள்பணி எஸ்.ஜே.இராஜநாயகம் எழுதிய "வளமாகும் குடும்பவாழ்வு" நூல் அகவொளியின் வெளி யீடாக வெளிவந்துள்ளது

"குடும்பம் ஒரு கதம்பம்" என்று சொல்லிக் கொள் வார்கள் இருப்பினும் அதில் பல்வேறு கலம்பகங் களும் இருக்கத்தான் செய்கிறது.

அத்தகைய குடும்பத்தில் கணவன் மனைவிக்கிடையில் ஏற்படுகின்ற பிரச்சினைகளும் தீர்வுகளும் அதற்கான உளவளப் பயிற்சிகளும் என்று பல்வேறு விடயதானங்களைத் தாங்கி இந்நூல் வெளிவந்துள்ளது.

குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு வரும் இந்நூலைக் கட்டாயம் படிப்பார்களானால் குடும்பம் வளமாகும் என்பதில் எந்தவித ஐயப்பாடு மில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு நிபந்தனையின்றியே கடன் வழங்கியது

## சபையில் சுசில் பிரேமஜெயந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 3

எந்தவித நிபந்தனைகளுமின்றியே சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்குக் கடன் வழங்கியது என்று அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

26 வருடங்களாக எமது நாட்டின் பொருளாதாரத்தை அழித்துக் கொண்டிருந்த பயங்கரவாதத்தை ஜனாதிபதி வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டுவந்ததால் சிலர் அவர் மீது பொறாமை கொண்டு சேறு பூசுகின்றனர்.

இப்போது எவ்வித பயமுமின்றி எம்மால் யாழ்ப்பாணம் சென்று வர முடியும். எதிர்க்கட்சி எம்.பிகளே, நீங்கள் வாருங்கள். நாங்கள் எங்களது செலவில் அங்கு அழைத்துச் செல்கின்றோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு உடன்பட்டே இந்த வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டது என்று எதிர்க்கட்சிகளள் கூறுகின்றன. நாணய நிதியம் எமக்கு எவ்வித நிபந்தனை களையும் விதிக்கவில்லை. நிபந்தனைகள் இன்றியே எமக்கு நாணய நிதியம் கடன் வழங்கியது.

நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு உடன்பட்டு இந்நாட்டுக்குத் துரோகம் இழைத்தது ஐக்கிய தேசியக் கட்சி தான். அக்கட்சியின் இரண்டு வருட கால ஆட்சியில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மூன்றாக உடைக்கப்பட்டு ஒரு பகுதி இந்தியாவுக்கு வழங்கப்பட்டது.

மக்கள் வங்கியைத் தனியார் மயமாக்கவும் ரயில்வே திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றவும் அக்கட்சி முயற்சி எடுத்தது. ஓய்வூதியத் திட்டத்தையும் இல்லாமல் செய்தது. நாம் ஆட்சிக்கு வந்த பிறகு ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் கொண்டு வந்தோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டே மேற்படி நடவடிக்கைகளை ஐக்கிய தேசிய கட்சி எடுத்தது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி இந்நாட்டுக்குத் துரோகம் செய்துவிட்டு, நாம் செய்ததாகக் கூறுவதில் அர்த்த மில்லை.

மூன்று வருடங்களாக எமது பொருளாதாரம் பலமாகியுள்ளது. சர்வதேசம் இதை ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த நிலைமையைப் பார்த்தே நாணய நிதியம் எமக்குக் கடன் வழங்கியது. மாறாக நிபந்தனைகளை அடிப்படையாக வைத்து அல்ல.

- இப்படி அவர் தெரிவித்தார். (சி)

# ஜனாதிபதித் தேர்தலின்போது பொன்சேகா சட்டத்தை மீறும் வகையில் நடந்துள்ளாரா?

## குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணை

கொழும்பு, ஜூலை3

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தேர்தல் சட்டத்தையும், அவசரகாலச் சட்ட விதிகளையும் மீறும் வகையில் எதிர்க்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட சரத் பொன்சேகா நடத்துள்ளாரா என்பது தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுவருவதாக நேற்று முன்தினம் கொழும்பு பிரதம நீதிவான் நிதிமன்றுக்குத் தெரிவித்தார்.

இதன்படி பொன்சேகா அம்பாறை உட்பட கிழக்கு மாகாணத்தில் அவரின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் ஆற்றிய உரை தொடர்பான ஒளி நாடாக்களை நீதிமன்றுக்குக் கையளிக்குமாறு 'சுவர்ணவாஹினி' மற்றும் 'தெரன' ஆகிய தொலைகாட்சி சேவைகளுக்கு கொழும்பு பிரதம நீதிவான் ரஷ்மி சிங்கப்புலி நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

இதற்கு முன்னர் 'சிரச' தொலைக்காட்சி இவ்வாறான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தத் தொலைக்காட்சி அவ்வாறான ஒளி நாடாக்களை அழித்து விட்டது என நீதிமன்றுக்குத் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி எதிர்வரும் 17 ஆம் திகதி சுவர்ணவாஹினி மற்றும் தெரண ஆகியன கிழக்கு மாகாணத்தில் சரத்பொன்சேகா ஆற்றிய ஒளி நாடாக்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று பிரதம நீதிவான் உத்தரவிட்டார். (சி)

# 2010 பட்ஜட் வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்துக்கு ஒருபோதும் உதவாது

## கூட்டமைப்பின் யோகேஸ்வரன் எம்.பி. விசனம்

கொழும்பு, ஜூலை 3

அரசால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டம் வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்துக்கும் வடக்கின் மீள்குடியேற்றத்துக்கும் ஒருபோதும் உதவாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. யோகேஸ்வரன் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

2010 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் மீள்குடியேற்றத்துக்குப் போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை. ஆனால், யுத்தம் முடிவுற்ற நிலையில் பாதுகாப்புக்கு அதிக பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அகதிகளின் வாழ்க்கையை மேம்படுத்த இந்த வரவு-செலவுத் திட்டம் ஒதுபோதும் உதவாது. அகதிகள் உடனடியாக மீள்குடியமர்த்தப்பட்டு அவர்களின் வாழ்வு மேம்படுத்தப்படவேண்டிய கட்டாய தேவை இப்போது ஏற்பட்டுள்ளது.

கிழக்கில் மீள்குடியமர்த்தப்பட்ட பகுதிகளில் கூட வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவில்லை. அங்கு மக்கள் குடிசைகளில் வாழ்கின்றனர். மட்டக்களப்பில் மீள்குடியேற்றம் நடத்தப்பட்ட பின்னர் 200 பேர் கடத்தப்பட்டுள்ளனர்.

மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு கொடுப்பனவுகள்கூட வழங்கப்படவில்லை. மொத்தத்தில் இந்த வரவு-செலவுத் திட்டம் வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்துக்கோ, மீள்குடியேற்றத்துக்கோ உதவாது - என்றார்.

# ஜே.வி.பியின் இணக்கப்பாட்டுடனேயே பொன்சேகா கட்சிப் பதிவு விண்ணப்பம்

## அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

ஜே.வி.பியின் இணக்கப்பாட்டுடனேயே ஜெனரல் சரத் பொன்சேகா எம்.பி., புதிய கட்சியைப் பதிவுசெய்ய விண்ணப் பித்துள்ளார் என ஜே.வி.பி. பேச்சாளர் அநுரகுமார திஸாநாயக்க நேற்று முன்தினம் தெரிவித்தார்.

ஜே.வி.பி. தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து இது குறித்து தகவல் தருகையில் கூறியவை வருமாறு:-

ஜெனரல் சரத் பொன்சேகா ஜனநாயகக் கட்சி என்ற பெயரில் புதிய கட்சி ஒன் றைப் பதிவு செய்ய விண்ணப்பித்துள்ளார். ஜனநாயகத் தேசிய முன்னணி என்பது பல கட்சிகள் இணைந்த முன்னணியாகும். இதில் கட்சிகளே இணைந்துள்ளன. தனி நபர்கள் இதில் அங்கத்துவம் பெற முடியாது. ஜெனரல் சரத்பொன்சேகா ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு என்ற அமைப் பின் மூலமே எம்முடன் இணைந்தார். இந்த அமைப்பு பதிவு செய்யப்பட்ட கட்சி அல்ல. எனவேதான், அவர் இந்த அமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய விண்ணப்பித் துள்ளார் என அவர் விளக்கமளித்தார்.

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு 449 புதிய மாணவர்கள் அனுமதி

கொழும்பு, ஜூலை 3

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2009/2010 கல்வியாண்டிற்கு 449 மாண வர்களை சேர்த்துக் கொள்ளுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவுறுத்தல் விடுத்துள்ளது என அப் பல்கலைக்கப் பதில் பதிவாளர் மன்சூர் ஏ. காதிர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, உயிரியல் விஞ்ஞானத் திற்கு அனுமதிக்கப்பட்ட 89 மாணவர்களும், பௌதீக விஞ்ஞானத்திற்கு அனு மதிக்கப்பட்ட 111 மாணவர்களும் எதிர் வரும் 15ஆம் திகதி தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தங்களை பதிவு செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அதேபோல, மேற்படி பல்கலைக் கழகத்தின் அரபு மொழித் துறைக்கு அனுமதிக்கப்பட்ட 70 மாணவர்களும், இஸ்லாமிய கற்கைகள் துறைக்கு அனுமதிக்கப்பட்ட 98 மாணவர்களும், முகாமைத்துவ தகவல் தொழில் நுட்பத் துறைக்கு (MIT) அனுமதிக்கப்பட்ட 81 மாணவர்களும் எதிர்வரும் 08ஆம் திகதி தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தங்களைபதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (சி)


## விற்பனைக்கு

குட்டி ஈனுவதற்கு இன்னும் 20 நாள்கள் மட்டுமே உள்ள சனன் மறி ஆடும் 5மாத வயதுடைய Boxer பெண் நாய்க்குட்டியும் விற்பனைக்குண்டு.
மனோன் மாஸ்ரர், அராலி, நவாலி தெற்கு, மானிப்பாய்.


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### செபமாலை மாக்கிறேட்

அன்னை மடியில் 05★03★1930

ஆண்டவன் அடியில் 03★06★2010

எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய் எமக்கு
நல்வழி காட்டிய அன்புத் தெய்வமே!
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து மாதம்
ஒன்று ஆனாலும் உங்கள் நினைவு
எம்மைவிட்டுப் பிரியாது

உங்கள் நினைவுடன்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

288, பாங்சால் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

[100181]

## மரண அறிவித்தல்

### பரமலிங்கம் கங்காதரன் (மகான்)



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் நகரை வதிவிடமாகவும் கொண்ட பரமலிங்கம் கங்காதரன் (மகான்) 27.06.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமலிங்கம்-சிவக்கொழுந்து தம்பதிகளின் மகனும் கந்தசாமி-சிவபாக்கியம் தம்பதிகளின் மருமகனும் பிரியதர்சினியின் அன்புக் கணவரும் காருண்ஜா, சுபானா, வந்தனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கனகாம்பிகை, திருவிளங்கம், திருச்செல்வம், ஸ்ரீதரன் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரனும் கண்ணன், உஷா, ரமணா ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான வேதவனம், வேலுப்பிள்ளை மற்றும் அன்னம்மா, ஆச்சிப்பிள்ளை ஆகியோரின் பெறாமகனும் காலஞ்சென்ற நல்லதங்கம் மற்றும் பொன்னுத்துரை, துரைராசா, இராசையா ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதித் கிரியைகள் நாளை (04.07.2010) ஞாயிற்றுக்கிழமை சுவிஸ் நகரில் நடைபெறும்.இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ.திருச்செல்வம்.
தொ.பே: 0776636945

காட்டுவிளி கண்ணகி அம்மன் கோவிலடி,
இணுவில் மேற்கு, இணுவில்.

[100177]


## வாகனம் விற்பனைக்கு

Np Lx-xxxx தொடரிலக்கமுடைய Toyota Dyna ELF Double Wheel, Full Option வாகனம் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 0760971- 021 321 1391

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அல்லது நகரை அண்மித்த பகுதிகளில் சகல வசதிகளுடனும் மற்றும் வாகன தரிப்பிட வசதிகளுடனும் வீடு வாடகைக்குத் தேவை.

தொ.பே: 0779849942
0776669238

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர் தினமும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்.

(99918)

## புறொயிலர் விற்பனைக்கு

உடன் சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் கிலோ 480/= மட்டும்

தொடர்பு: குமரன் பாம், 227, பிறவுண் வீதி, (நரிக்குண்டுக்கு அருகில்), யாழ்ப்பாணம். 0776130675

## வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 824 திகதி: 01.07.2010

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இல: |
|---|---|---|---|---|---|
| K | 09 | 33 | 36 | 43 | 59 |

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 16,863,355.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 1,000,000.00 | 01 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 04 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 286 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 14065 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 196069 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாயின் | 20.00 | 29280 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ.
7,885,480.00

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை
17,172,754.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663
அவசர தேவைக்கு: 2473360, 2433631
இணையம்: www.nlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் இராணுவ முகாம் அமைப்பதன் மூலம் பாரிய பின் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்

## இலங்கை அரசுக்கு ஆனந்தசங்கரி எச்சரிக்கை

கிளிநொச்சி, ஜூலை3

முல்லைத்தீவில் இராணுவ முகாம் அமைப்பதும் வடக்கு, கிழக்கில் இராணுவத்தினருக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதும் உசிதமான செயல் அல்ல. இதன் மூலம் பாரிய பின்விளைவுகளை எதிர்நோக்க நேரிடும். இவ்வாறு இலங்கை அரசுக்கு ஆலோசனை கூறுகிறார் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி.

இது தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

முல்லைத்தீவில் முன்னோடியாக ஒரு இராணுவமுகாம் அமைப்பதையும் இராணுவத்தினருக்கு வடக்கு, கிழக்கில் நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுப்பதாகவும் அரசு எடுத்த முடிவு இன்றைய சூழ் நிலைக்கு ஒவ்வாதெனவும் எதிர்பார்த்த விளைவைக் கொடுக்காதெனவும் விரைவில் ஓர் அனர்த்தத்திற்கு வழிகோலும் எனவும் வெளிப்படையாக எனது கருத்தைத் தெரிவிக்க விரும்புகின்றேன். இந்த முடிவை புத்திசாதுரியமற்ற முறையில் நான் ஆட்சேபித்து குளவிக் கூட்டுக்கு கல்லெறிந்தவன் போன்ற நிலைக்கு ஆளாக மாட்டேன். நான் எதைச் சொன்னாலும், எதைச் செய்தாலும் தேசப்பற்றுடனேயே நோக்குவேன். அரசு உடனடியாக இவ்விரு நடவடிக்கைகளையும் நிறுத்தி ஏற்கனவே திறக்கப்பட்ட இராணுவ முகாமை மூடி புதிதாக இராணுவ முகாம் எதையும் திறக்க வேண்டாம் எனவும் ஆலோசனை கூறுகின்றேன். அரசாங்கம் எனது கருத்தை பாராட்டி எனது ஆலோசனைக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளோடு போராடி வெற்றி கண்ட நல்ல ஓர் இராணுவம் இருந்தது. விடுதலை இயக்கமாக ஆரம்பித்து பின் காலப்போக்கில் மக்களுக்கும் மக்களின் சொத்துக்களுக்கும் பெரும் இழப்புக்களை உருவாக்கிய இயக்கத்தைத் தோற்கடிக்க பொது மக்களும் பெருமளவில் உதவினர். முழுநாடும் சொல்ல முடியாத துயரை அனுபவித்தது, வடக்கு, கிழக்கு மக்கள் அடைந்த இழப்புக்கள், பட்ட கஷ்ரங்கள் பற்றி நான் விவரிக்க முன்வர வில்லை. எதிர்காலத்தில் இதே போன்ற ஒரு நிலை மீண்டும் உருவாகுவதை அவர்கள் விரும்பவில்லை. எவரேனும் அதைப் புதுப்பிக்க முயற்சித்தால் அந்தச் சவாலை அவர்கள் எதிர் கொள்ளத் தயாராக உள்ளனர். விடுதலைப் புலிகளிடம் சிறந்த ஆயுதங்கள் இருந்தமையினாலேயே அவர்களால் மக்களை கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க முடிந்தது மட்டுமல்ல நிரந்தரப் பயப்பீதியுடன் வாழ வைக்க முடிந்தது. நட்புறவுடன் பழகக் கூடிய இராணுவம் அமைந்துள்ளமை எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

ஆனால் அவர்கள் மத்தியிலும் சில கறுப்பாடுகள் கலந் திருக்கக்கூடும். எது எப்படி இருப்பினும் இலங்கையராகிய நாம் வேண்டுவது வெறும் அமைதி மட்டுமல்ல. பூரணமான அமைதியான வாழ்க்கையே. எவரின் கையிலும் ஆயுதம் இருப்பதை நாம் விரும்பவில்லை.

எமக்கு துப்பாக்கிக். கலரசாரம் வெறுத்துவிட்டது. அரசு மட்டும் முன்னின்று நாட்டில் உள்ள ஆயுதங்களை மீளப் பெறுவதோடு இராணுவத்தின் நடமாட்டத்தையும் கட்டுப்படுத்தி முகாம்களிலேயே தங்க வைக்குமானால் பொதுமக்களாகிய நாங்கள் வேறு எவரிடமும் ஆயுதம் இல்லாது பார்த்துக் கொள்ளுவோம்.

மக்கள் எதுவித மேலாதிக்கமும் இன்றி சுதந்திரமாக நடமாடத் தொடங்கும் போது ஏனைய விடயங்களைப் பற்றி ஆலோசிக்கலாம். அப்படிச் செய்யத்தவறினால் இவ்வளவு காலமும் எடுத்த முயற்சிகள் பல்வேறு பிரிவு மக்கள் செய்த தியாகங்கள் அத்தனையும் விழலுக்கிறைத்த நீராகி விடும். தமக்கு இஷ்டம் இல்லாத விடயங்கள் பற்றி நேரடியாகத் தெரிவிக்கும் தைரியமின்றி மக்கள் முணுமுணுக்க ஆரம்பித்து விட்டார்கள். அவர்களின் கவலைகள் எல்லாம் எதுவித கருத்துக்களையும் சாத்வீகமான முறையில் எடுத்துக் கூறக் கூடிய நிலை இன்று நாட்டில் இல்லையே என்பதே. நான் உறுதியாகக் கூறிக் கொள்ள விரும்புவது என்னவென்றால் அரசாங்கம் அவ்வாறான நடவடிக்கைகளை கைவிடாது விட்டால் நாட்டின் ஒரு பகுதி மக்களுக்கு அமைதியைக் கொண்டு வந்ததாகதம் பட்டம் அடிக்க முடியாது. நான் தெரிவிப்பது மக்களின் குரலே - என்றுள்ளது. (50-16)

## செல்வியார்தீவு அம்மன் ஆலயத்தில் பூசைகள்

கிளிநொச்சி,ஜூலை 3

பூநகரி செல்வியார்தீவு அம்மன் ஆலயத்தின் பூஜை வழிபாடுகள் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன.

அண்மையில் ஆனி உத்தரவிழாவும் இந்த ஆலயத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளது.

இந்த ஆலயத்துக்கு எந்தவிதமான சேதங்களும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

பூநகரியில் பிரசித்திபெற்ற இந்த ஆலயத்தில் இருந்த பல பெறுமதியான பொருள்கள் அனைத்தும் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(50-224)

## சட்ட விரோத மணல் அகழ்வைத் தடுக்க கரைச்சிப் பிரதேச சபை நடவடிக்கை

கிளிநொச்சி,ஜூலை 3

கரைச்சிப் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களில் சட்ட விரோதமாக மணல் அகழ்வுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதுடன் சட்ட விரோத மணல் அகழ்வில் ஈடுபடுவோர் மீது தண்டப் பணமும் விதிக்கப்பட்டு வருகின்றது.

மணலை ஏற்றிச் செல்லும் போதே அனுமதி பெறல், தண்டம் விதித்தல் என்பன இடம் பெறுவதால் மணல் வியாபாரிகள் பலர் கல்லாக்கத் தொழிற்சாலைகளை ஆரம்பித்து கற்களை ஏற்றிச் செல்கின்றனர்.

இந்தக் கல்லாக்கத் தொழிற்சாலைகளும் அனுமதிப் பத்திரம் பெறப்படாது சட்ட விரோதமாக நடத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு அனுமதி பெறாத கல்லாக்க தொழிற்சாலைகள் மீது நீதிமன்றம் மூலம் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கரைச்சிப் பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

எனவே அனுமதிப்பத்திரங்களைப் பெற்று தொழில்களை ஆரம்பிக்குமாறும் பிரதேச சபையினர் கோரியுள்ளனர்.

(50-405)

## மன்னாரில் சில தினங்களாக சுழன்றடிக்கும் சோளகக் காற்று

மன்னார்,ஜூலை 3

மன்னாரில் சுழன்றடிக்கும் சோளகக் காற்றால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

கடந்த பல தினங்களாகவே மன்னாரில் தென்மேல் பருவப் பெயற்சிக் காற்று (சோளகம்) சுழன்று, சுழன்று வீசு கின்றது. தெருக்களில் மண்புழுதியை அள்ளி வீசுகின்றது. இதனால் பாடசாலை செல்லும் மாணவர்கள், வீதியால் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

கடற்பகுதி பெரிதும் வற்றியுள்ளதாலும் பெரும் காற்றாலும் மீன் பிடித் தொழில் முற்றாகச் சீர் குலைந்துள்ளது. இதனால் மீனின் விலைகள் அதிகரித்துள்ளன. அத்துடன் இறைச்சி வகைகளின் விலைகளும் அதிகரித்துள்ளன.

நகரில் நடைபாதைகளில் வியாபாரம் செய்து வரும் அங்காடிகள் விற்பனை செய்யும் பழ வகைகள், சிற்றுண்டி வகைகள் புழுதியால் தோய்ந்துள்ளன. எனினும் நகர மக்கள் இவைகளை வாங்கிச் செல்வதைக் காணமுடிகின்றது.

(50-80)




## பூநகரி வாடியடியில் வர்த்தக நிலையங்கள்

கிளிநொச்சி,ஜூலை 3

பூநகரி வாடியடிப் பகுதியில் தற்போது புதிதாக வர்த்தக நிலையங்களை அமைக்கும் பணியில் வர்த்தகர்கள் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த கால யுத்த அனர்த்தத்தினால் பூநகரி வாடிப்பகுதியில் அனைத்து வர்த்தக நிலையங்களும் சேதமடைந்துள்ளன.

தற்போது அப்பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள வர்த்தகர்கள் தற்காலிகமாக வர்த்தக நிலையங்களை அமைக்கும் பணியில் மும்மரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

(50-224)

## பூநகரியில் பெரும்பாலான வீடுகள் யுத்தத்தினால் மோசமாகச் சேதம்

கிளிநொச்சி, ஜூலை3

பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பெரும்பாலான குடியிருப்புகள் கடந்த யுத்தத்தினால் மோசமாகச் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் இப்பகுதியில் மீளக்குடியமர்ந்து வரும் மக்கள் உறைவிடமின்றிப் பெரும் இன்னல்களை எதிர் நோக்குவதாகச் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இப்பகுதியில் மீளக் குடியமர்ந்தவர்களில் பெரும்பாலான மக்கள் தமக்கு வழங்கப்பட்ட கூரைவிரிப்பு, தகரங்கள் என்பவற்றைக் கொண்டு கொட்டில்கள் அமைத்து வசித்து வருகின்றனர்.

எதுவித அடிப்படை வசதிகளும் இல்லாத நிலையிலுள்ள இப்பிரதேச மக்கள் கூடுதலாக நெற்செய்கையை நம்பியே வாழ்ந்து வருகின்றனர்.

இம்முறை பெரும்போகச் செய்கையை மேற்கொண்டாவது தமது வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக அண்மையில் பெய்த மழையைப் பயன்படுத்தி அவர்கள் தமது வயல்களை உழுது சீர் செய்து வருகின்றனர்.

பூநகரி மகா வித்தியாலயம் மீள இயங்குகின்றது. பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளும் இப்பகுதியில் மீள ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டுவருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

(50-224)



மாங்குளம் மக்கள் வங்கிக் கிளை நவீன வசதிகளைக் கொண்ட கிளையாகக் கடந்த மாதம் மத்திய வங்கியின் ஆளுநரால் திறந்து வைக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. யோகபுரம் மத்திய மகா வித்தியாலய மாணவிகளின் நடன அணிவகுப்புடன் விருந்தினர்கள்அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும், வங்கிக்கிளையை ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நாடாவெட்டி திறந்துவைத்த பின்னர் வங்கியின் நடவடிக்கைகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைப்பதை அடுத்துள்ள இரு படங்களிலும், அருகில் வங்கியின் கிளை முகாமையாளர் ச.ஸ்ரீதரன் நிற்பதையும், வடக்கின் வசந்தம் திட்டத்தில் பயனாளி ஒருவருக்கு ஆளுநர் இலகு கடன் அடிப்படையில் நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றைவழங்குவதை இறுதிப்படத்திலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதிக்காகப் போராடுகிறது.........

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணற்ற தொலைநகல்கள், தொலைபேசி உரையாடல்கள், எனது கோரிக்கைகள் மற்றும் பலமணி நேரக் காத்திருப்பின் பின்னர் ஒருவாறாக எனக்குரிய பயண அனுமதிக் கடிதம் கிடைத்தது. ஈற்றில் குறிப்பிட்ட இரண்டு திகதிகளுக்குள், யாழ்ப்பாணத்திற்கு வான் வழியாக மாத்திரம் பயணிப்பதற்கான பயண அனுமதிக் கடிதத்தை அதே கோப்பிரல் தர அதிகாரி என்னிடம் கையளித்தார்.

அனுமதிக் கடிதத்தில் தெளிவாக அறிவுறுத்தப்பட்டிருந்தது. எமது பயணம் தொடர்பான நெகிழ்வுத்தன்மை அந்தக் கடிதத்தில் இல்லை. ஆனால், கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான வர்த்தக வான்வழிப் போக்குவரத்து இப்போது இல்லையாம்.

கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளின் மத்தியில் நாளொன்றுக்கு ஒரு முறை மாத்திரம் விமானப்படை விமானமொன்று சேவையில் ஈடுபடுகிறது. பாதுகாப்பு அமைச்சினது அனுமதிக் கடிதம் இல்லாமல் இந்த விமானத்தில் பயணிப்பதற்கான விமானப் பயணச் சீட்டை நீங்கள் பெற முடியாது.

முட்கம்பிச் சுருள்களாலும், சீனத் தயாரிப்பு ரி-56 துப்பாக்கிகளுடன் காவல்கடமையில் ஈடுபட்டிருக்கும் ஏயர் மொபைல் படைப்பிரிவைச் சேர்ந்த படையினராலும், மண் அரண்களாலும் சூழப்பட்ட விமானப் படைத் தலைமையகத்தின் மத்தியிலுள்ள விளையாட்டு மைதானத்தில் படையினர் வீசப்படும் பந்தைத் தங்களது துடுப்பு மட்டைகளால் பதம்பார்க்கிறார்கள்.

கடும் பாதுகாப்புக்கு மத்தியிலுள்ள அந்தப் பிரதேசத்தில் இவர் ஏன் நிற்கிறார் என்ற தொனியில் அங்கு ஆயுதம் தாங்கியவாறு கடமையில் நின்ற சிப்பாய் ஒருவன் என்னைப் பார்த்தான்.

இந்தப் படை வீரரது மூக்கு நுனியில் ஏதோவொரு தழும்பு இருப்பதை நான் அவதானித்தேன். 'கிறிக்கெற்' விளையாடியா இந்தத் தழும்பு ஏற்பட்டது எனக் கேட்டேன். கடமையில் நின்ற அந்தப் படைவீரன் 'இல்லை' எனப் பதிலளித்துவிட்டுச் சிரித்தான்.

இரண்டு மணி நேரமாகக் காத்திருந்த பின்னர் விமானப்படைக் கப்டன் ஒருவர் எனது கடவுச் சீட்டுடனும், பயண அனுமதிக் கடிதத்துடனும், யாழ்ப்பாணத்திற்கான விமானப் பயணச் சீட்டுடனும் என்னிடம் வந்தார். கொழும்பிலுள்ள ரத்மலானைப் பகுதியிலேயே விமானப்படைத் தளம் அமைந்திருக்கிறது.

இரண்டு ஹெர்குலிஸ் ரக விமானங்கள் மற்றும் இரண்டு அன்ரனோ ரக விமானங்கள் என்பன ஓடுபாதையில் தரித்து நின்றன.

வெளிநாட்டவர் எவரும் யாழ்ப்பாணத்திற்குச் செல்வதற்குத் துணியக்கூடாது என்ற எண்ணத்துடனோ என்னவோ, ''ஏன் யாழ்ப்பாணத்திற்குப் போகிறீர்கள்'' என ஒரு சார்ஜன் என்னைச் சந்தேகத்துடன் கேட்டார். ''அங்கு விடுதலைப் புலிகள் இல்லையே. நீங்கள் அங்கு செல்வதற்கான காரணம்தான் என்ன'' என்றார் அவர்.

இங்கிருந்த படையினர் உள்ளிட்ட 40 வரையிலானோரும் பலாலிக்குச் செல்வதற்காகவே காத்திருந்தார்கள். இன்னொரு விமானத்திற்காக அவர்கள் காத்திருந்தார்கள்.

யாழ்ப்பாணத்திற்கான விமானப் பயணம் 80 நிமிடங்கள் வரை எடுத்தது.

விடுதலைப் புலிகள் தங்களின் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் ஊடாக ஆனையிறவு வழியாக எட்டு மணி நேரப் பயணத்தை மேற்கொண்டுதான் நாங்கள் யாழ்ப்பாணம் செல்லவேண்டும்.

மைல்கணக்கான வீதிகள், மைல்கணக்கான கண்ணிவெடி வயல்கள், குண்டுத்தாக்குதல்களுக்கு இலக்காகி அழிந்த மைல் கணக்கான கட்டடங்கள் எல்லாவற்றையும் தாண்டியே நாம் தரைவழியாக யாழ்ப்பாணம் செல்லவேண்டும்.

2 கோடி மக்களைக் கொண்ட இலங்கைத் தீவு வங்காள விரிகுடாவில் கண்ணீர் துளியை ஒத்த வடிவத்தில் அமைந்திருக்கிறது.

பல பத்தாண்டுகளாகத் தொடர்ந்த போரினால் ஏற்பட்ட வெறுப்புணர்வு, போர், வெற்றி மற்றும் தோல்வி ஆகியவற்றுக்கு ஊடானதாகவே குடாநாட்டுப் பயணம் அமைகிறது. இலங்கைத் தீவில் போரினால் ஏற்பட்ட வடுக்களைப் போக்குவதற்கு அந்த நாடு கடுமையாகப் போராடிவருகிறது. ***

# நாணய நிதிய நிபந்தனைகளுக்கு அடிபணிந்து பட்ஜட் தயாரிப்பா?

## முடிந்தால் நிரூபிக்குமாறு விமல் வீரவன்ஸ சவால்

கொழும்பு, ஜூலை 3

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அடிபணிந்தே இந்த வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்று கூறும் ஐ.தே.கட்சி முடிந்தால் அதை நிரூபித்துக் காட்டட்டும் என்று அமைச்சர் விமல் வீரவன்ஸ நேற்று முன்தினம் நாடாளுமன்றில் சவால் விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு சவால் விடுத்தார்.

அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

நாம் ஒருபோதும் வெளிநாட்டவர்களின் தாளத்துக்கு ஆடமாட்டோம். நாம் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு உடன்பட்டே இந்த வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்தோம் என்றும் நிவாரணங்களை வெட்டிவிட்டோம் என்றும் எதிர்க்கட்சி கூறுகின்றது. முடிந்தால் அந்த நிபந்தனைகள் என்னவென்று கூறட்டும்.

இந்த வரவு-செலவுத் திட்டத்துக்கு எதிராக நாட்டு மக்களைத் திரட்டி ஐ.தே. கட்சியால் ஆர்ப்பாட்டம் நடத்தமுடியாது. மக்கள் வரமாட்டார்கள். அதனால்தான் அக்கட்சி நாடாளுமன்றத்துக்குள் ஆர்ப்பாட்டம் செய்கிறது.

எதிர்க்கட்சி அரசியல் அநாதையாகிவிட்டது. அக்கட்சிக்கு நிலையான கோஷமில்லை. இதனால், நாளுக்கு நாள் அக்கட்சியின் கோஷம் மாறுகிறது. இக்கட்சியால் எதுவும் செய்யமுடியாது. நாம் மக்கள் நலனில் அக்கறை கொண்ட வரவு-செலவுத் திட்டம் ஒன்றையே முன் வைத்துள்ளோம். - என்றார். (சி)

## வாசகர் திருமுகம்

### ஆனைக்கோட்டை தபாலகத்தை தரமுயர்த்தி உதவுக

பரந்த நிர்வாக பீடங்களையும் அதிகமக்கள் செறிவினையும் பல வணக்க ஸ்தலங்களையும் பிரபல வர்த்தக நிலையங்களையும் தொழில்சார் வளங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குவதுதான் ஆனைக்கோட்டை எனும் பெருங்கிராமம். இங்குள்ள தபாலக சேவையால் பற்பல நிறுவனங்கள் சாத்தியமான அனுகூலங்களைப்பெற்று வருவதோடு மட்டுமல்லாமல், இப்பிரதேச வாசிகளின் வாழ்வாதார தேவைகளையும் பூர்த்தி செய்யவல்ல ஒரு தபாலகமாக இது விளங்குகிறது. அல்லாமலும் அரச ஊழியர்கள், ஓய்வூதியர்கள், கிராம உத்தியோகப் பெரும் பிரிவு ஆள்புலக்கருமங்கள், சமுர்த்தி நுகர்வோர், பாடசாலைச் சேவைகள், மின்சாரப் பாவனையாளர் கட்டண சேவைகள், பதவிநிலை கட்டண சேவைகள் மற்றும் வழமையான சேவைகள் எனப் பற்பல சேவைகளைக் குறைந்தளவு ஆளணியினருடன் முடிந்தளவு மக்களுக்கான அர்ப்பணிப்புச் சேவையாக உரிய தகைமைகளுடன் ஆற்றி வருகிறது. இந்நிலையில் மேற்படி உப தபாலகத்தினை தரம் ஒன்றிற்கு உயர்த்துவதற்கு ஆவன புரியுமாறு பிரதேச அஞ்சல் அத்தியட்சகரை வேண்டிக் கொள்கிறேன்.இது இப்பகுதி மக்களுக்கும் அரச, தனியார் துறைப் பணியாளர்களுக்கும் பேருதவியாக இருக்கும்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில். கே.எஸ்.சிவஞானராஜா.

## மரண அறிவித்தல்



### குமாரசாமி பாலசுப்பிரமணியம்

தாவடியைப் பிறப்பிடமாகவும், சுதுமலையை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பு வெள்ளவத்தை ரோகிணி றோட் 16 6/3ஐ வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி பாலசுப்பிரமணியம் 01.07.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமர்ரசாமி இரத்தினம் அவர்களின் அன்புப் புதல்வனும், செல்வரத்தினத்தின் அன்புக் கணவரும், இராஜேஸ்வரி, மகாலிங்கம், காலஞ்சென்ற பரமேஸ்வரன், இன்பமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். சறோயினிதேவி (டென்மார்க்), நிறைஞ்சன் (UK), ராஜினி (பிரான்ஸ்), கஜனி (UK), அனுசா ஆகியோரின் அன்புத் தந்தையும் புவனேந்திரகுமார் (டென்மார்க்), ஜெனார்த்தனா, அருள்தாஸ் (பிரான்ஸ்), ஜீவகுமார் (UK), சிவரஞ்சன் (UK), ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார். செல்வரத்தினம், கனகாம்பிகை, பத்மநாதன், மகாதேவன், செல்வராணி, பாக்கியநாதன் ஆகியோரின் மச்சானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.07.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு மகிந்த மலர்ச்சாலையில் (கல்கிசை) நடைபெற்று தகனக்கிரியைக்காக கல்கிசை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். 03.7.2010 சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை பார்வைக்கு வைக்கப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அறியத் தருகின்றோம்.

தகவல்: மனைவி, பிள்ளைகள் 16 6/3 ரோகிணி றோட் வெள்ளவத்தை. தொ.2554377

## பொதுக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை3

நல்லூர் பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தினுடைய பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூர் சமூக அபிவிருத்தி மன்றத்தில் நடைபெறவுள்ளது.

சமாசத் தலைவர் கா.தில்லையம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளஇக் கூட்டத்தில் ஒவ்வொருசங்கங்களிலிருந்தும் 3 உறுப்பினர்களைக் கலந்து கொள்ளுமாறு சமாசச் செயலாளர் சி.தா. உதயரட்ணம் கேட்டுள்ளார். (50-16)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை3

கைதடி நவீல்ட் செவிப்புலனிழந்தோர் பாடசாலையின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டமும் 43ஆவது ஆண்டு நிறைவு விழாவும் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (50-16)

## ஆன்மீக சொற்பொழிவு

அல்வாய்,ஜூலை3

வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும்நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு வரிசையில் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு 'நலம் தரும்நம்பிக்கை' என்னும் தலைப்பில் [illegible] சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். (50-201-36)


தற்போது யாழ்ப்பாணத்திலும்!

CIMA

யாழ் மாணவர்களின் கல்விக்கனவு இன்று நனவாகிறது.

- சர்வதேசதர கற்கைநெறியுடன் நீங்களும் இணையுங்கள்
- கொழும்பின் முன்னணி விரிவுரையாளர்களின் விரிவுரைகள்



- 2 1/2 வருடங்களில் முழுமையாக கற்கை நெறியைப் பூர்த்திசெய்யமுடியும்.
- நீங்கள் CIMA கற்பதற்கு A/L பெறுபேறுகள் ஒரு தடையல்ல.

புத்தம் புதிய ஆரம்பம்-
(Foundation)
10th July 2010

CAPSTONE
No. 01, Brown Road, Jaffna.
Contact: 077 9148753, 0777 883084


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரியவாணியின் சிறப்பான சமநிலை தவிர்ப்பு உதை; கிண்ணத்தை சுவீகரித்தது நெல்லியடி ம.ம.வி.

வலி.வடக்கு,ஜூலை 3

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளத்தினால் யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய 13வயதுப் பிரிவு பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் சம்பியனாகியது.



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் கோல்கள் பெற வேண்டும் என்ற துடிப்புடன் கடுமையாக மோதிக்கொண்டன.

போட்டி முடிவடையும் வரை இரு அணிகளும் தமக்குக் கிடைத்த கோல் பெறும் சந்தர்ப்பங்களைத் தவறவிட்ட நிலையில் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்கு வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதைகளில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீராங்கனை பிரியவாணி ஒரு கோலை அடிக்க இரு அணிகளினதும் ஏனைய வீராங்கனைகள் தமக்கான வாய்ப்புக்களை வீணாக்கினார்கள்.

ஆட்ட நிறைவில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் 1:0 என்ற கோல் கணக்கில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியை வெற்றி பெற்றுச் சம்பியனாகியது.

(50-86)




# அரச திணைக்களத்தின் மகளிர் அணிகள் பங்குபற்றும் கிரிக்கெட்

நாவற்குழி, ஜூலை 3

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நல்லூர்ப் பிரதேச சபையின் யாழ்.மாவட்ட அரச திணைக்களங்களுக்கிடையில் மகளிர் மென்பந்துக் கிரிக்கெட் போட்டியை நடத்தவுள்ளது.

09 பேர் கொண்ட பெண் உத்தியோகத்தர் குழு இதற்கு விண்ணப்பிக்க முடியும். போட்டியில் கலந்து கொள்ளவிரும்பும் அரச அலுவலகங்கள் உடனடியாக விண்ணப்பத்தைத் தம்மிடம் சமர்ப்பிக்குமாறு நல்லூர்ப் பிரதேச சபையின் செயலர் மேரி ஜோசப் சாந்தசீலன் அறிவித்துள்ளார்.

(50-121)

# யாழ்.இந்துவை 67 ஓட்டங்களால் வென்றது பம்பலப்பிட்டி இந்து

வலி.வடக்கு, ஜூலை 3

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் நூற்றாண்டு விழாவையொட்டி நடைபெற்ற 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி ஆட்டத்தில் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி 67 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி 49:4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 283 ஓட்டங்களைப் பெற்றது.

சிவநிரோசன் 66 ஓட்டங்களையும், இனோசன் 38 ஓட்டங்களையும், கஜமுகன் ஆட்டமிழக்காது 28 ஓட்டங்களையும், பிரணவன் 21 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 48 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த நிறஞ்சன் 10ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 52 ஓட்டங்களுக்கு 05 விக்கெட்டுக்களையும் பிரியதர்சன் 09 ஓவர்கள் பந்து வீசி 45 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் ஜஸ்மின், பார்த்தீபன் முறையே 24, 37 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

284 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 48.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 217 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பிரியதர்ஷன் 109 ஓட்டங்களையும் சுரேஷ்குமார் 41 ஓட்டங்களையும் பிரசன்னா 14 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 36 ஓட்டங்கள் பெறப்பட்டன.

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சிவநிரோசன் 10 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 30 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும், எனோசன் 7.5 ஓவர்கள் பந்து வீசி 04 ஓட்டமற்ற ஓவர்களுடன் 08 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் அரவிந்தன் 07 ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள். (50-86)

# 'தூய ஒளி' வெற்றிக் கிண்ண ஆட்டம்; உரும்பிராய் சென். மைக்கலுக்கு இலகுவெற்றி

யாழ்ப்பாணம்,ஜூலை 3

'தூய ஒளி' வெற்றிக்கிண்ணச் சுற்றுப் போட்டியில் உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்தும் சுற்றுப் போட்டியில் செவ்வாய்க்கிழமை குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெற்றது.

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக் கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி மோதியது.

உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணியை 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது.

(1-23)

# தியாகிகள் தின உதைபந்தாட்டம் குருநகர் பாடும்மீன் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 3

தியாகிகள் தின உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் ஆட்டம் ஒன்றில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது.

தியாகிகள் தினத்தை முன்னிட்டு பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எப்.அமைப்பு நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் புதன்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டு அணி மோதியது.

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது.

(1-23)

# றொபேட் அதிரடி; குமுதன் துல்லியமான பந்துவீச்சு ஸ்ரான்லியை 65 ஓட்டங்களால் வென்றது ஸ்கந்தா

யாழ்ப்பாணம்,ஜூலை 3

பாடசாலைத் துடுப்பாட்டச் சங்கத்தினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்படும் 17 வயதுக்குட்பட்ட கிறிக்கெட் போட்டியில் கடந்த புதன்கிழமை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, ஸ்ரான்லிக் கல்லூரி அணிகள் மோதின.

ஸ்கந்தா மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஸ்கந்தா அணித்தலைவர் எஸ்.சஞ்சயன் முதலிலே துடுப்பாட்டத்தைத் தெரிவுசெய்தார்.

இதன்படி துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா அணியினர் 36.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். இந்த அணிசார்பாக கே.றொபேட் றிஷான் 5 பவுண்டரிகளுடன் 44 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். தனுஜன், ஜெனிஸ்ரன், சஞ்சயன் ஆகியோர் முறையே 28,25,16 ஓட்டங்களைப் பெற்றனர். ஸ்ரான்லிக் கல்லூரியின் பந்து வீச்சில் ஆர்.கம்சிகாந் 7.3 ஓவர்கள் பந்து வீசி 35 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். ரி.சுரேஷ், ரி.துவாரகன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

185 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லிக் கல்லூரியினர் 32.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 115 ஓட்டங்களை மட்டுமே பெற்றதால் 69 ஓட்டங்களால் ஸ்கந்தா அணியினர் வெற்றிபெற்றனர்.

ஸ்ரான்லி அணிசார்பாக பிரசாத் ஒரு சிக்ஸர் 5 பவுண்டரிகளுடன் 36 ஓட்டங்களையும் ரி.சுரேஷ் 22 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 26 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஸ்கந்தா அணிசார்பில் துல்லியமாகப் பந்து வீசிய குமுதன் 10 ஓவர்களில் 33 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி வெற்றிக்கு வழி வகுத்தார். ஜெனிஸ்ரன், சிந்துஜன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (50-55)

# 17 வயதுப் பிரிவினருக்கான ஆட்டம் 25 ஓட்டங்களால் சென்றல் வென்றது

யாழ்ப்பாணம்,ஜூலை 3

இலங்கை துடுப்பாட்ட சங்கத்தினால் யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்டு வரும் 17 வயதுப் பிரிவினருக்கான 50 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஆட்டம் ஒன்றில் யாழ்.மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது.

கடந்த வாரம் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதியது.

முதலில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணியினர் 49 ஓவர்களில் சகல விக்கெட்டினையும் இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றது.

கோகுலன் 27 ஓட்டங்களையும், கிசாந்தன் 19 ஓட்டங்களையும், வதூசனன் 20 ஓட்டங்களையும், கபிலன் 11 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் சென். பற்றிக் கல்லூரி அணி வீரர்களான அஜித் டார்வின் 10 ஓவர்கள் பந்து வீசி, 24 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும் கிளிங்ரன் மூன்று ஓவர்கள் பந்து வீசி 29 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் றொபேட் 7 ஓவர்கள் பந்து வீசி, 20 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 142 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென களம் இறங்கிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் 36.5 ஓவர்களில் சகல விக்கெட்டினையும் இழந்து 116 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

கிளின்ரன், கவாஸ்கரன், அலஸ்ரின் ஆகியோர் முறையே 20,15,8 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி வீரர்களான டார்வின், 7.3 ஓவர்கள் பந்து வீசி, 22 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டையும் கோகுலன் 10 ஓவர்கள் பந்து வீசி 26 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டையும் டக்சன் ஒன்பது ஓவர்கள் பந்து வீசி 37 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

யாழ்.மத்திய கல்லூரி 25 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (1-23)



522 ஆவது பிரிவுப் படையினரால் தென்மராட்சிப் பிரதேச கிரிக்கெட் அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி அண்மையில் சாவகச்சேரி பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் கிரிக்கெட் போட்டியில் வெற்றியீட்டியோருக்குத் தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், 52ஆவது படையணியைச் சேர்ந்த பிரிகேடியர் லால் பெரேரா ஆகியோர் பரிசில்கள் வழங்குவதை முதல் மூன்று படங்களிலும்- வெற்றிபெற்ற அணியை இறுதிப்படத்திலும் காணலாம்.

(படங்கள்: தென்னவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொர்க்கபுரியாக மாறுகிறது தமிழகம்; பிளாட்டினம் படிமங்கள் கண்டுபிடிப்பு

## ஆய்வுக்கு முதல்வர் முன்னிலையில் மத்திய அரசு ஒப்பந்தம்

சென்னை, ஜூலை3

தமிழகத்தில் முதல்முறையாக விலை உயர்ந்த பிளாட்டினம் கனிமப் படிவங்கள், நாமக்கல், கோவை மாவட்டங்களில் மிக அதிகளவில் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இதுபற்றி மேலும் ஆய்வு செய்யப்படு வதற்கான ஒப்பந்தம், முதல்வர் கருணா நிதி முன்னிலையில் நேற்றுமுன்தினம் கையெழுத்தானது.

பிளாட்டினம் என்னும் கனிமம், தங் கத்தை விட பன்மடங்கு விலை அதிகமான கனிமம் ஆகும். இது தமிழில், 'வெண் தங் கம்' என்றும் அழைக்கப்படுகிறது.

தமிழகத்தில் பல்வேறு பகுதிகளிலும் நிலத்துக்கடியில் படிந்துள்ள 'வெண்தங் கம்' எனப்படும் பிளாட்டினம் கனிமத்தை கண்டறிவதற்காக இந்திய புவியியல் ஆய் வுத்துறை, தமிழகக் கனிமத்துறையுடன் கடந்த 3 ஆண்டுகளாக ஆய்வு செய்து வரு கிறது. இந்த ஆய்வின் பயனாக, மேட்டுப் பாளையம் முதல் நாமக்கல் வரை பல்வேறு பகுதிகளில் நிலத்துக்கு அடியில் பிளாட் டினம் படிமங்கள் இருப்பதாகக் கண்டறி யப்பட்டுள்ளது.

தற்போது கண்டறியப்பட்டுள்ள பிளாட் டினம் கனிமங்களை வணிக நோக்குடன்



ஆய்வு செய்யவும், அக்கனிமங்களைப் பயன் படுத்தி பல்வேறு தொழில்களைத் தொடங் கவும், மேலும் புதிய இடங்களில் கனிமங் கள் குறித்து ஆய்வுப்பணிகள் மேற்கொள் ளவும் தமிழ்நாடு கனிம நிறுவனம், இந்திய புவியியல் ஆய்வுத்துறையுடன் இணைந்து விரிவான அளவில் நடவடிக்கைகள் மேற் கொள்ள நேற்றுமுன்தினம் மாலையில் புரிந் துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது.

சென்னை கோட்டையில் முதல்வர் கரு ணாநிதி முன்னிலையில் இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், கொல்கத்தாவில் உள்ள இந் தியப் புவியியல் ஆய்வுத்துறை இயக்குநர் ஜெனரல் என்.கே.தத்தா, தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் க.மணிவாசன் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

அப்போது, சட்ட அமைச்சர் துரைமுரு கன், சுரங்கத் துறைச் செயலாளர் சாந்தா ஷீலா நாயர், தமிழகத் தொழில்துறை முதன் மைச் செயலாளர் ராஜீவ் ரஞ்சன் உட்பட பலர் உடனிருந்தனர்.

அதன்பிறகு வெளியே வந்த மத்திய சுரங்கத்துறை செயலாளர் சாந்தா ஷீலா நாயர் மற்றும் இந்தியப் புவியியல் ஆய்வுத்துறை யின் இயக்குநர் நாதன் ஆகியோர் செய்தி யாளர்களிடம் தெரிவித்தவை வருமாறு -

தமிழகத்தில் கடந்த 2,3 ஆண்டுகளாக பிளாட்டினம் கனிமத்தை கண்டுபிடிப்ப தற்கான ஆய்வுகள் நடைபெற்று வருகின் றன. இதில், நாமக்கல் மாவட்டம் சத்தம் பூண்டியிலும், மேட்டுப்பாளையத்திலும் பிளாட்டினம் படிமம் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

தற்போது, 30 மீற்றர் ஆழம் மட்டுமே தோண்டியுள்ளோம். இன்னும் 200 மீற்றர் முதல் 500 மீற்றர் வரை தோண்டும்போது மிக அதிக அளவில் பிளாட்டினம் கிடைக் கக்கூடும். உலகில் தற்போது, தென்னா பிரிக்காவில்தான் அதிக அளவில் பிளாட் டினம் வெட்டியெடுக்கப்படுகிறது.

இந்தியாவில் ஒரிஸாவில் மட்டும் ஓரளவு பிளாட்டினம் கிடைத்து வருகிறது. ஆனால், தமிழகத்தில்தான் முதல்முறை யாக மிக அதிக அளவில் பிளாட்டினம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் கிடைக்கும் வருவாய் தமிழகத் தையே சேரும். மத்திய அரசு, பிளாட்டி னம் கண்டறிவதில் உதவி மட்டுமே அளிக்கும். பிளாட்டினம் இருக்கும் இடங்க ளில் கனிமத்தை வெட்டியெடுப்பதில் தனியாரை ஈடுபடுத்துவது, அதை விற் பனை செய்வது என அனைத்திலுமே தமி ழக அரசுதான் முழுபங்கு வகிக்கும்.

- இப்படி அவர்கள் தெரிவித்தனர்.

# நக்ஸலுக்கு எதிராக கூடுதல் படைகள்!

## களமிறக்க மத்திய அரசு திட்டம்

டில்லி,ஜூலை3

நக்ஸலைட்டுகளை ஒழிக்கும் நடவடிக் கைகளில் கூடுதலாக மத்திய ரிசர்வ் படை யினரைக் களமிறக்க மத்திய அரசு திட்ட மிட்டுள்ளது. இதற்கான திட்டம் தயாரிக் கப்பட்டு வருகிறது.

சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், ஒரிஸா, மேற்கு வங்கத்தில் கூடுதல் படைகளை பகுதிவா ரியாகக் களமிறக்க அரசு திட்டமிட்டுள் ளது. மாநில அரசுகளின் ஒப்புதல் கிடைத்த பின்னரே இந்த நடவடிக்கை துரிதப்படுத் தப்படும் என்றும் முதலில் சத்தீஸ்கர் மாநி லத்தில் இத்திட்டம் செயற்படுத்தப்படும் என்றும் உள்துறை அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நக்ஸல்களுக்கு எதிரான நடவடிக்கை யின் தேவைக்கேற்ப கூடுதல் படைகள் அனுப்பிவைக்கப்படும். மேலும் படை யினரின் முகாம்கள் வெகு தூரத்தில் இல் லாமல் பணியில் ஈடுபட்டுள்ள இடத்தின் அருகிலேயே அமைக்க முடிவு செய்யப் பட்டுள்ளது. அதேபோல் மிகவும் ஆபத்து நிறைந்த பகுதிகளிலுள்ள படையினரின் முகாம்களை மாற்றியமைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

# இந்தியாவின் கலாசார ஒற்றுமைக்கு புனிதத் தலங்களே முக்கிய காரணம்

## அத்வானி தெரிவிப்பு

மதுரை,ஜூலை3

இந்தியாவின் கலாசார ஒற்றுமைக்கு புனிதத் தலங்களே முக்கிய காரணமாக விளங்குகின்றன - என்று பா.ஜ.கவின் மூத்த தலைவர் எல்.கே.அத்வானி தெரிவித்தார்.

மதுரையில் கடந்த வியாழக்கிழமை அவர் அளித்த பேட்டியின் விவரம் வரு மாறு -

அருள்மிகு மீனாட்சி அம்மன் மிகவும் வரலாற்றுச் சிறப்புமிக்கது. நான் ஏற்க னவே இக்கோயிலுக்கு வந்துள்ளேன். ஆனால், என்னுடைய குடும்பத்தினர் வரவில்லை. அவர்கள் விரும்பியதால், இராமேஸ்வரம் கோயிலுக்குச் சென்றுவிட்டு திரும்புகை யில் இங்கு வந்தேன். இக்கோயிலானது அழ கும், ஆன்மிகச் சிறப்பும், கலையம்சமும் நிறைந்ததாக உள்ளது.

பல ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் பேசிய முன்னாள் பிரதமர் ஜவாஹர்லால் நேரு, மீனாட்சி அம்மன் கோயில் புராதனச் சிறப்பு கொண் டது. புண்ணிய ஷேத்திரம் என்று அழைக் கப்படுகிறது. இதுபோன்ற புனிதத் தலங் கள்தான் இந்தியாவின் கலாசார ஒற்று மைக்கு முக்கிய காரணமாக இருக்கிறது என்று கூறினார்.

அதேபோன்று, வடக்கில் இருக்கும் யாத்திரிகர்கள் தெற்குப் பகுதிக் கோயில் களுக்கும் தெற்கில் உள்ள யாத்திரிகர்கள் வடக்குப் பகுதிக் கோயில்களுக்கும் சென்று வருவதுதான் இந்தியாவின் கலாசார ஒற்று மைக்கு எடுத்துக்காட்டாக உள்ள.

- இப்படி அவர் கூறினார்.

# மத்திய அரசு விரைவில் கவிழும்

## சென்னையில் லாலு பிரசாத் தெரிவிப்பு

சென்னை,ஜூலை3

சரியான ஒருங்கிணைப்பு இல்லாத தால் மத்தியில் ஆளும் காங்கிரஸ் அரசு விரைவில் கவிழும் - என்று லாலு பிரசாத் யாதவ் கூறினார்.

மத்திய அரசு சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி பாட்டாளி மக்கள் கட்சி சார் பில் சென்னையில் நேற்றுமுன்தினம் இரவு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

**இந்தியச் செய்திகள்**

கூட்டத்தில் ராஷ்டிரீய ஜனதா தளத் தலைவர் லாலு பிரசாத் யாதவ் பேசியவை வரமாறு -

சாதிவாரியாக கணக்கெடுப்புக் குறித்து எந்த முடிவும் தெரிவிக்காமல் உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் நழுவிச் சென்று விடுகிறார். நாடாளுமன்றுக்கு வந்த பிரத மர் மன்மோகன்சிங் சாதிவாரியான கணக் கெடுப்பை நாங்கள் மறுக்கவில்லை, அது முன்னோடி நிலையில் உள்ளது என்கிறார்.

காடுகளில் வாழும் விலங்குகளைக் கூட சிங்கம், புலி, மான் என்று பிரித்து கணக்கெடுக்கும்போது மனிதர்கள் என்ன பாவம் செய்தார்கள். அவர்களை ஏன்? சாதிவாரியாக கணக்கெடுக்க யோசிக்கி றார்கள். 1931 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தியாவில் சாதிவாரியாகக் கணக் கெடுப்பு நடத்தப்படவில்லை.

இந்தியாவில் சாதிகளே இல்லையா?. நான் ஒரு யாதவன். என்னைப்போன்று பலர் சாதியைச் சொல்கிறார்கள். சாதி எப் போது ஒழிந்தது?. எங்கே சாதி இல்லை?.

தற்போது, பெற்ரோல், டீசல் போன்ற அத்தியாவசியப் பொருட்களும் விலை உயர்ந்துள்ளது. ஆனால், விலைவாசி உயர் வுக்கு அரசு பொறுப்பேற்க மறுக்கிறது. அத்தியாவசியப் பொருட்கள் விலை உயர் வால் சாதாரண விவசாய மக்கள் பாதிக்கப் படுவார்கள்.

2 ஆவது முறையாகப் பதவியேற்ற ஐக் கிய முற்போக்குக் கூட்டணி அரசில் சரி யாக ஒருங்கிணைப்பு இல்லை. யாரும் பிரச் சினையில் தீவிரமாகக் கவனம் செலுத்துவ தில்லை. தற்போதைய அரசு 5 ஆண்டு காலம் நீடிக்காது. விரைவில் கவிழ்ந்து விடும்.

- இப்படி லாலு பிரசாத் கூறினார்.

# தமிழகத்தில் உயர்கல்வி இட ஒதுக்கீட்டில் ஈழ அகதி மாணவர்களுக்கு ஓரவஞ்சனை

## அக்கினிப்புயல் சீமான் வேதனை

சென்னை,ஜூன்3

இந்தியாவில் திபெத்திய அகதிகளுக்கு அனைத்து வசதிகளையும் செய்து, அரச சலுகையுடன் கல்வி கற்கத் தனி இட ஒதுக்கீடு அளிக்கும்போது எம் தொப்புள் கொடி உறவுகளான ஈழத்தமிழர்களுக்கு மட்டும் என்ன இந்த ஓரவஞ்சனை?

- இவ்வாறு நாம் தமிழர் இயக்க ஒருங்கி ணைப்பாளர் சீமான் கேள்வியெழுப்பியுள் ளார்.

இதுதொடர்பாக சீமான் வெளியிட் டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டி ருப்பவை வருமாறு -

அவ்வறிக்கையில், வீடிழந்து - நாடி ழந்து தொப்புள் கொடி உறவு என்று நம்மை நாடி வரும் நம் சகோதரர்களுக்கு இங்கு ஆட்சியில் இருப்பவர்கள் செய்யும் கொடு மைகள் கொஞ்ச நஞ்சம் இல்லை.

நாட்டை இழந்தாலும் தம் கல்வியை இழக்கக் கூடாது என்று நம் தொப்புள் கொடி ஈழ உறவுகள், படித்து முன்னேற வேண்டும் என்று மேலெழுந்து வந்தால் அதிலும் பேரடி தருகிறார்கள்.

ஈழத்தமிழர்கள் பொறியியல் கல்வி பெறும் விடயத்தில் தமிழக அரசின் உயர் கல்வித்துறை பிறப்பித்துள்ள அரசாணை ஒவ்வொரு ஈழத்தமிழ் மாணவனின் வாழ் வையும் கேள்விக்குறியாக்கியுள்ளது.

தமிழக அரசின் உயர்கல்வித்துறை பிறப் பித்துள்ள ஆணைப்படி, ஓர் அகதி முகா மில் இருக்கும் ஓர் ஈழத்தமிழன் மதிப் பெண்கள் எவ்வளவு அதிகம் பெற்றிருந் தாலும், பொறியியல் கல்லூரியில் சேர்வ தற்கான அனைத்து இடங்களும் பிற மாண வர்களுக்கு நிரப்பப்பட்ட பின்னர் பொதுப் பிரிவின் கீழ் வெற்றிடங்கள் ஏதேனும் இருப்பின் அதில் மட்டுமே அவர்களைச் சேர்த்துக் கொள்ளலாம் என்று கூறுகின் றது.

அதிலும் இது பொறியியல் கல்லூரிக ளுக்கு மட்டும்தான். மருத்துவத்துக்கு இந்த வாய்ப்பும் இல்லை.

அப்படியே இருந்தாலும் தனியார் பொறியியல் கல்லூரிகள் அதை விற்றுக் காசாக்கத்தான் எண்ணுமே தவிர அதை ஓர் ஏழை ஈழத்தமிழ் அகதிக்கு வழங்காது.

ஆகவே, ஈழத்தமிழனுக்கு கல்வி என்றும் எட்டாக்கனியாகத்தான் இருக்கும். அதன் விளைவுதான் கிருஷ்ணகிரியில் உள்ள ஈழத்தமிழ் அகதி மாணவன் 1152 மதிப்பெண் எடுத்தும் மேற்படிப்புக்கு இடம் கிடைக்காமல் இன்று நிர்க்கதியாக நிற்கும் சூழ்நிலை நம் கண் முன்னே நிலவுகின்றது.

திபெத்திய அகதிகளுக்கு அனைத்து வசதிகளையும் செய்து,அரசு சலுகையுடன்



கல்வி கற்கத் தனி இட ஒதுக்கீடு அளிக் கும் போது எம் தொப் புள் கொடி உறவுக ளுக்கு மட்டும் என்ன இந்த ஓரவஞ்சனை?

அதுவும் தமிழர் களுக்கு கல்வி கற் கும் வாய்ப்புகளைத் தேடிப்போய் அளிக்க வேண்டிய தமிழக அரசே தடைக்கற்களை உருவாக்குவது வேதனையான ஒன்று. ஆகவே நம் தமிழ்ச் சொந்தங்கள் தமிழ்நாட்டில் பொறியியல் கல்வி பெறத்தடை யாக இருக்கும் உயர் கல்வித்துறை அரசா ணையை உடனடி யாக தமிழ்நாடு அரசு நீக்க வேண்டும். உயர்கல்வியில் 2003 ஆம் ஆண்டு வரை இருந்த இட ஒதுக்கீட்டு முறை தொடர தமிழக அரசு வழிவகை செய்ய வேண்டும்.

புகழ்பாட செம்மொழி மாநாடு நடத்து வதை விட இதுபோன்ற ஆக்கபூர்வமான பணிகளே தமிழினத்தை தலைநிமிரச் செய்யும் என்பதை தமிழக அரசு உணர வேண்டும்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மனியிடம் பலிக்குமா மரடோனாவின் வியூகங்கள்?



தென்னாபிரிக்காவில் இன்று இரவு 7.30 (இலங்கை நேரம்) மணியளவில் பெரும் பரபரப்பு - உச்சக்கட்ட சந்தோசம் - அளவில்லாத சோகம் ஒன்று நிகழக் காத்திருக்கிறது.

அது, உலகக் கிண்ணத் தொடரின் இன்றைய காலிறு தியாட்டத்தில்தான். இதில், முன்னாள் சம்பியன்களான ஆர்ஜென்ரீனா - ஜேர்மனி அணிகள் மோத வுள்ளன.

முன்னாள் சம்பியன்களான இந்த இரு அணிக ளுக்கு மிடையிலான இன்றைய ஆட்டம் உலகம் முழுவதுமுள்ள ரசிகர்க ளின் கவனத்தை ஈர்த்துள்ள அதேவேளை, கேப்ரவுண் இன்று நெரிசலுக் குள்ளாகும் என்பது உண்மை.

நடந்து வரும் உலகக் கிண்ணத் தொட ரில் இதுவரை ஆடிய ஆட்டங்கள் எதிலும் ஆர் ஜென்ரீனா தோற்கவில்லை. அபாரமாக விளையாடி வருகிறது.

மறுமுனையில் விளையாடவுள்ள ஜேர்மனி, தனது ஆரம்பச் சுற்றில் சேர்பி யாவிடம் அதிர்ச்சி கண்டது. எனினும், பின்னர் அது சுதாகரித்துக் கொண்டு, காலிறுதிக்குள் நுழைந்துள்ளது.

இந்நிலையில், சம்பியன் கிண்ணத் தைக் கைப்பற்றக் கூடிய அணிகள் என எதிர் பார்க் கப்படும் இவ்விரு அணிகளுக்குமிடையிலான ஆட்டம் இன்று இரவு 7.30 மணியளவில் நடை பெறவுள்ளது.

இரு அணிகளிலும் சிறந்த நட்சத்தி ரபப் பட்டாளங்கள் நிறைந்து காணப்படு வதால் இன்றைய ஆட்டம் உச்சக்கட்டப் போராட்டம் நிறைந்ததாகவே காணப் படும்.

அதுமட்டுமன்றி வெற்றிபெறும் அணி யின் ரசிகர்கள் உச்சக்கட்ட சந்தோசத்தில் குதூகலிக்க, தோல்வியுற்ற அணியின் ரசி கர்கள் அளவற்ற சோகத்தில் உலகம் முழு வதும் ஆழ்ந்திருப்பர்.

இந்தப் போட்டியில் ஏதாவது ஓர் அணி தோற்கத்தான் போகிறது. அந்த வகையில் ஒரு சம்பியன் அணி இத்தொடரிலிருந்து வெறியேறவும் நேரிடுகிறது.

அதேவேளை, தென்னாபிரிக்காவில் ராஜநடைபோட்டுக்கொண்டு திரியும் ஆர்ஜென்ரீனாவின் பயிற்சியாளரும், உதைபந்தாட்ட ஜாம்பவானுமான மரடோ னாவின் உதைபந்தாட்ட வியூகங்களுக்கு இந்தப் போட்டியில் ஜேர்மன் ஆப்படிக் குமா அல்லது அவரது உத்திகள் தொடர் வெற்றிகளுக்கு வழிவகுக்கின்றனவா என்பதும் இன்றைய இந்த ஆட்டத்தில் தெரிந்துவிடும்.

## பிறேசில் வெளியே நெதர்லாந்து உள்ளே

உலகக் கிண்ண உதைபந் தாட் டச் சுற்றுப்போட்டியில் நெதர்லாந் திடம் அடைந்த தோல்வியால் அரையிறுதிக்குத் தகுதி பெறாமல் வெளியேறியது பிறேசில் அணி.

தென்னாபிரிக்காவில் நடை பெற்று வரும் உலகக் கிண்ண உதை பந்தப் போட்டிகளில் நேற்று நடை பெற்ற காலிறுதி ஆட்டத்தில் பிறேசில் - நெதர்லாந்து அணிகள் மோதின.

இதில் நெதர்லாந்து அணியின் பிலிப்மெலோ, வெஸ்லி ஸ்னெட் ஜிகர் ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர். பிறேசில் சார்பில் ரொபின்கோ ஒரு கோலினை அடித் தார்.

இதனால் நெதர்லாந்து அணி 2: 1 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்று அரையிறுக்குள் நுழைய பிறேசில் அணி வெளி யேறியது.

## ஜப்பான் வீரர் நாகமுரா ஓய்வு

ஜப்பான் வீரர் சுன்சூகே நாகமுரா சர்வ தேச உதை பந்தாட்டத்திலிருந்து ஓய்வு பெறும் முடிவை அறிவித்துள்ளார்.

ஜப்பான் அணியின் நடுக்கள வீரரான சுன் சூகே நாக முரா, உலகக் கிண்ண உதை பந்தாட் டப் போட்டிக் கான ஜப்பான் அணியில் இடம் பெற்றிருந்தார். ஆனால், அவர் கள மிறக் கப் பட வில்லை.



உலகக் கிண் ணத் தொடரின் இரண்டாவது சுற் றில், பராகுவேயிடம் ஜப்பான் தோல்வி கண்டு வெளியேறியது. இதை யடுத்து நாக முராவும் சர்வதேச உதைபந் தாட்டத்திலி ருந்து ஓய்வுபெறும் முடிவை அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியவை வருமாறு:-

''இந்த உலகக் கிண்ணப் போட்டியில் ஜப்பானுக்காக சில ஆட்டங்களிலாவது ஆட வேண்டும் என்ற ஆசை நிறை வேறாமல் போய்விட்டது. உலகக் கிண் ணப் போட்டி யின்போது கதிரையில் இருந் தது என்னால் மறக்க முடியாதது. எனக்கும் ஜப்பான் அணிக் கும் இந்த உலகக் கிண்ணத் தொடர் துரதிஷ் டவசமாக அமைந்து விட்டது'' - என்றார்.

தற்போது 32 வயதான நாகமுரா, 2000ஆம் ஆண்டு சிங்கப்பூருக்கு எதிராக முதல் முறையாக சர்வதேச போட்டியில் களமிறங்கினார். 2002, 2006 மற்றும் 2010என 3 உலகக் கிண்ணப் போட்டிகளில் அவர் விளையாடியுள்ளார். ஜப்பானுக் காக 98 சர்வதேச போட்டிகளில் விளையாடி, 24 கோல்களை நாகமுரா அடித்துள்ளார்.

# கிளு கிளு உடையில் வந்து ரசிகர்களை கிறங்கடிக்கிறார் பராகுவேயின் லாரிசா

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளின் போது 'கிளுகிளு' உடை யில் வந்து ரசிகர்களைக் கிறங்கடிக்கிறார் லாரிசா ரிகில்ம். அவர், இம்முறை பரா குவே அணி கிண்ணத்தை வென்றால், ஆடையில்லாமல் ஓடத் தயார் என அதிர டியாக அறிவித்துள்ளார்.

பராகுவேயின் அபார ஆட்டத்தைப் பார்த்து உற்சாகத்தின் உச்சிக்கே சென் றுள்ளார், அந்த நாட்டின் முன்னணி மொடல் அழகியான லாரிசா. ஒவ்வொரு போட்டியின்போதும் மைதானத்துக்குச் சென்று வீரர்களுக்கு ஆதரவு அளிக்கிறார்.

தமது அணியின் வீரர்கள் கோல் அடிக்கும்போதெல்லாம் ஆரவாரம் செய்கிறார். இவரது கவர்ச்சி உடை 'கமரா' வின் கண்களில் அதிகம் பதிவாகிறது. உலகம் முழுவதும் ஊடகங்களில் இவரது படங்கள் வெளியாகின்றன.

24 வயதான லாரிசா, அதிரடி அறிவிப்பு ஒன்றையும் வெளியிட்டுள்ளார். அதாவது, பராகுவே அணி கிண்ணத்தை வென்றால், பிறந்த மேனியாக முக்கிய தெருக்களில் ஓடத் தயார் என்று கூறியுள்ளார். இதற்கு ஒரு நிபந்தனை விதித்துள்ள இவர் கூறி யவை வருமாறு:-

''பராகுவே அணியின் ஆட்டம் பிர மிக்க வைக்கிறது. இம்முறை கிண்ணத் தைக் கைப்பற்றினால் ஆடையில்லாமல் ஓடுவேன். இங்கே ஒரு சின்னத் திருத்தம். ஆடைக்குப் பதில் எனது உடல் முழுவதும் பராகுவே அணியின் வண் ணங்களை 'பெயின்ட்' மூலம் தீட்டிக் கொண்டு ஓடத் தயாராக உள்ளேன்.''- என்றார்.

இதனைக் கேள்விப்பட்ட சில குறும்புக்கார ரசிகர்கள், பராகுவே அணி கிண் ணத்தை வெல்ல வேண்டும் என இப் போதே பிரார்த்திக்கத் தொடங்கி விட் டார்களாம்.

இதேவேளை, உலகக் கிண்ணத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர், ஆர் ஜென்ரீனா அணியின் முன்னாள் தலைவரும், தற்போதைய பயிற்சியாள ருமான மாரடோனா, தமது அணி கிண் ணத்தை வென்றால், தலைநகர் பியூனஸ் ஏர்சின் முக்கிய பகுதிகளில் நிர்வாணமாக ஓடத் தயார் என அறிவித்தார்.

இந்த முறை ஆர்ஜென்ரீனா சிறப்பாகச் செயல்படுவதால், மாரடோனாவுக்கு நெருக்கடி ஏற்படுமோ என அஞ்சப்படு கிறது. இவரது வழியில் தற்போது லா ரிசாவும் புறப்பட்டிருப்பதால், உலகக் கிண்ணத் தொடரில் பரபரப்பு மட்டுமன்றி கிளுகிளுப்பும் அதிகரித்துள்ளது.

# மீண்டும் பெக்காம்!

இங்கிலாந்து அணிக்காக பெக்காம் மீண்டும் கள மிறங்கவுள்ளார். எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆரம் பமாகவுள்ள ஐரோப்பியக் கிண்ணத் தொடருக்கான தகுதிச் சுற்று ஆட்டங்களில் அவர் விளை யாட வுள்ளார்.

இங்கிலாந்து அணியின் முன்னாள் தலை வரான டேவிட் பெக்காம், தற்போது லொஸ் ஏஞ்சல்ஸ் கேலக்சி அணிக்காக விளையாடி வருகிறார்.

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட் டிக்கு முன்னதாக, அவர் ஏ.சி.மிலான் அணிக் காக 6 மாத காலம் விளையாடி வந்தார்.

கடந்த பருவகாலத்தில் சீரி 'ஏ' போட் டித் தொட ரின் போது, ஜெனோவா அணி யுடன் ஏ.சி.மிலான் மோதியது. இந்தப் போட்டியின் போது, பெக்காமுக்குக் கணுக்காலில் தசைநார் கிழிந்து 6 மாத காலம் ஓய்வெடுக்க வேண்டிய நிலைக் குத் தள்ளப்பட்டார். இதனால், உலகக் கிண்ணப் போட் டியில் இங்கி லாந்து அணிக் காக அவர் விளை யாட வில்லை. ஆனால், அணி யின் துணைப் பயிற்சியாளராக அவர் தென்னா பிரிக்கா சென்றி ருந்தார்.



இதற்கிடையே அவரது காயம் விரைவாகக் குணம டைந்து வருவதாகத் தகவல்கள் தெரி விக் கின்றன. இதையடுத்து 2012ஆம் ஆண்டு ஐரோப்பியக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிக்கான தகுதிச் சுற்று ஆட்டங்க ளில் அவர் இங்கிலாந்து அணிக்காக விளை யாடுவார் எனத் தெரிகிறது.

ஐரோப்பியக் கிண்ணத் தொடருக்கான தகுதிகாண் சுற்றுப் போட்டியில், எதிர் வரும் செப்டெம்பர் மாதம் 3ஆம் திகதி பல்கேரியாவுடனும் 7ஆம் திகதி சுவிட் ஸர்லாந்து அணியுடனும் இங்கிலாந்து மோதுகிறது.

இதேவேளை, பெக்காம் மீண்டும் இங் கிலாந்து அணியின் தலைவராக நிய மிக் கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

# ஜேர்மனி வெல்லும்?

ஓபர்ஹாசின், ஜூலை 03

நம்மவர்கள் கிளி ஜோதிடம் போல, ஐரோப்பிய நாடுகளில் 'ஒக்டோபஸ்' கணிப்பு மிகவும் பிரபல்யம்.

இன்று நடைபெறவுள்ள உலகக் கிண் ணக் காலிறுதியில் ஜேர்மனி அணி வெற்றிபெறும் என்று அதிரடியாகக் கணித் துள்ளது. இதனால், ஆர்ஜென்ரீனா அணி யினர் கதிகலங்கிப் போயுள்ளனர்.

ஜேர்மனி - ஆர்ஜென்ரீனா இரண்டு அணி களுமே ஐரோப்பிய அணிகள் என்ப தால் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. இதில் மாரடோ னாவின் பயிற்சியில் அர் ஜென்ரீனா சாதிக்கும் என உதைபந்தாட்ட நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதற்கு நேர்மாறாக 'ஒக்டோபஸ்' கணிப்பு அமைந் துள்ளது.

ஜேர்மனியின் ஓபர்ஹாசினில் கடல் வாழ் உயிரினங்களின் கண்காட்சியகம் உள்ளது. இங்கு இரண்டு வயதான 'ஒக் டோபஸ்', உதைபந்தாட்டப் போட்டிகளின் வெற்றியாளரைத் துல்லியமாகக் கணித்து வருகிறது.

போல் என்ற பெயரிலான இந்த 'ஒக்டோபஸ்' இம்முறை உலகக் கிண்ணத் தொடரில் ஜேர்மனி பங்கேற்ற போட்டி களின் வெற்றி தோல்விகளைச் சரியாகக் கணித்துள்ளது. அதாவது, 'லீக்' சுற்றில் ஜேர்மனி அணி, ஆஸ்திரேலியா மற்றும் கானாவை வீழ்த்தும் எனக் குறிப்பிட்டது. இதே போல செர்பியாவிடம் தோல்விய டையும் என்றும் சுட்டிக் காட்டியிருந் தது.

இதுதவிர, 'ரவுண்ட் அப்-16' போட் டியில் இங்கிலாந்தை வென்று, காலிறுதிக்கு முன்னேறும் என்றும் தெளிவாகச் சொன் னது.

இதையடுத்து காலிறுதியில் ஜேர்மனி அணி, ஆர்ஜென்ரீனாவை வீழத்துமா என்ற கேள்வி எழுந்தது. உடனே, 'ஒக்டோ பசிடம்' கேட்டனர். இதற்கு வழக்கம் போல் இரண்டு கண்ணாடிப் பெட்டிகள் வைக்கப்பட்டன. உள்ளே ஒரு சிப்பி வைக்கப்பட்டது. இம்முறை 'ஒக்டோபஸ்' மிக நீண்ட நேரம் யோசித்த பின்னர், ஜேர்மனிக் கொடி வரையப்பட்ட பெட்டி யிலிருந்த சிப்பியை எடுத்தது. இதன் மூலம் ஜேர்மனி அணிக்கே வெற்றி என் பதைக் கணித்தது.

இது குறித்து கண்காட்சி அதிகாரி ஒருவர் கூறுகையில்,

''2008இல் நடந்த 'யூரோ'க் கிண்ணத் தொடரில் ஜேர்மனி அணி யின் செயற் பாடுகள் குறித்து 'ஒக் டோபஸ்' கணிப்பு 80 சதவீதம் சரி யாக இருந்தது. இம் முறை சுமார் ஒரு மணி நேரம் யோசித்த பின்னர் தான் ஜேர்மன் அணியின் பெட்டியைத் தெரிவுசெய்தது'' - என்றார்.




# ஸ்ரைனுக்கு அபராதம்!

பார்படாஸ், ஜூலை 3

சுலைமான் பென்னை நோக்கித் துப் பிய டேல் ஸ்ரைனுக்கு, போட்டிக்கான சம் பளத்தின் முழுத் தொகையையும் அபராத மாக விதிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்கா-மேற்கிந்தியத் தீவு களுக்கிடையில் பார்படாஸில் நடந்த மூன்றாவது டெஸ்ட் போட்டியின்போது இரு அணி வீரர்களும் அடிக்கடி மோதிக் கொண்டனர்.

முதலில் மேற்கிந்தியத் தீவுகளின் வேகப்பந்துவீச்சாளரான கேமர் ரூச் மற்றும் ஜக்கலிஸ் ஆகியோருக்கிடையே வாக்கு வாதம் ஏற்பட்டது. உடனே, அப்போது கட மையிலிருந்த நடுவர்களான சைமன்டா பெல், ஸ்டீவ் டேவிஸ் ஆகியோர் தலை யிட்டு சமாதானம் செய்துவைத்தனர்.

இதேவேளை மேற்கிந்தியத் தீவுகளின் சுழற்பந்துவீச்சாளரான சுலைமான் பென், தென்னாபிரிக்க வேகப்பந்துவீச்சாளரான டேல் ஸ்ரைன் இருவரும் ஒருவரை முறைத் துக்கொண்டனர்.

பின்னர் 'பெவிலியன்' திரும்பும்போது, பென் இருந்த திசையை நோக்கி ஸ்ரைன் துப்பினார். இப்பிரச்சினை குறித்து ஐ.சி.சி யின் போட்டி நடுவரான ஜெப் குரோவ் விசாரணை நடத்தினார். இதில் ஸ்ரைன் தவறு செய்தமை உறுதிசெய்யப் பட, அப ராதம் விதிக்கப்பட்டது. சுலைமான் பென், தண்டனையிலிருந்து தப்பினார். இது குறித்து ஐ.சி.சி. வெளியிட்டுள்ள அறிக்கையில்:-

விளையாட்டு உணர்வுக்கு எதிராக நடந்துகொண்ட ஸ்ரைனுக்கு, போட்டிக் கான அவரின் சம்பளத்தின் முழுத்தொகை யையும் அபராதமாக விதிக்கப்படுகிறது. நடத்தை விதிமுறையை மீறிய கேமர் ரோச் சுக்கு 50 வீதம் அபராதம் விதிக்கப்படு கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் மீதான அமெ. ஏவுகணைத் தாக்குதலை ஆட்சேபித்து இம்ரான்கான் வழக்குத் தாக்குதல்!

இஸ்லாமாபாத்,ஜூலை3

பாகிஸ்தானிலுள்ள பழங்குடி இன மக்கள் வசிக்கும் பகுதியின் மீது அமெரிக்க இராணுவம் ஏவுகணைத் தாக்குதல் நடத்துவதை எதிர்த்து முன்னாள் கிரிக்கெட் அணித் தலைவரும், அரசியல் கட்சித் தலைவருமான இம்ரான்கான் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கிறார்.

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியிலுள்ள பழங்குடி இன மக்கள் வசிக்கும் பகுதியில் அல்-குவைதா அமைப்பினதும், தலிபான் இயக்கத்தினதும் தீவிரவாதிகள் தஞ்சம் புகுந்துள்ளனர். அவர்கள் அங்கிருந்து அண்டை நாடான ஆப்கானிஸ்தா னுக்குள் புகுந்து அடிக்கடி தாக்குதல் நடத்தி விட்டுத் தப்பி வந்து விடுகிறார்கள்.

அவர்கள் மீது பாகிஸ்தான் இராணுவம் எதிர்பார்த்த அளவுக்கு நடவடிக்கை எடுப்பதில்லை. இதனால் அமெரிக்க இராணுவம் பாகிஸ்தானுக்குள் நுழையாமல், ஆப்கானிஸ்தானில் இருந்தவாறே ஆளில்லாத விமானம் மூலம் பாகிஸ்தான் எல்லைக்குள் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தி வருகிறது.

இதில் தலிபான் இயக்கத்தின் பல்வேறுமட்டத் தலைவர்கள் உட்பட பலர் பலியாகியிருக்கிறார்கள். எனினும், பல சமயங்களில் அப்பாவிகளும் பலியாகியுள்ளனர். இதனால் இந்த ஏவுகணைத் தாக்குதல் பாகிஸ்தான் மக்களுக்கு கோபத்தையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

ஏவுகணைத் தாக்குதலை நிறுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் தற்போது இம்ரான்கான் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கிறார். இம்ரான் கான் பாகிஸ் தான் கிரிக்கெட் அணித்தலைவராக இருந்து அரசியல் தலைவராக மாறியவர். இவர் தெக்ரிக்-இ-இன்சாப் என்ற பெயரில் கட்சி நடத்தி வருகிறார்.

''அமெரிக்காவின் ஏவுகணைத் தாக்குதல் சட்டவிரோதமானது என நீதிமன்றம் அறிவிக்கவேண்டும். மனித உரிமை தொடர்பான ஐ.நா. பிரகடனத்தை இந்தத் தாக்குதல் மீறிவிட்டது. இது சர்வதேச சட்டத்துக்கு எதிரானது. எந்தச் சட்டத்தின் கீழ் இந்த ஏவுகணைத் தாக்குதலை பாகிஸ்தான் அரசு அனுமதிக்கிறது என்பதை நீதிமன்றுக்கு விளக்கவேண்டும்'' என அவர் தம் மனுவில் கோரியுள்ளார்.

''அப்பாவி பாகிஸ்தானியர்களைக் கொல்வதையும், அவர்களின் சொத்துகளை அழிப்பதையும் எதிர்த்து சர்வதேச அமைப்புகளிடம் பாகிஸ்தான் அரசு முறையிடுவதற்கு இந்த நீதிமன்றம் உத்தரவிட வேண்டும்'' என்றும் தமது மனுவில் இம்ரான் கான் குறிப்பிட்டுள்ளார்.

ஏவுகணைத் தாக்குதல் நடத்துவதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுதொடர்பாக அமெரிக்காவுடன் பாகிஸ்தான் ஒப்பந்தம் ஏதும் செய்திருந்தால் அதை இந்த நீதிமன்றத்தில் அது தாக்கல் செய்யவேண்டும்'' என்றும் அவர் அதில் கேட்டுள்ளார்.

இந்த வழக்கில் இராணுவச் செயலாளர், வெளிநாட்டுத் திணைக்களச் செயலாளர், உள்துறைச் செயலாளர், அமைச்சரவைச் செயலாளர் ஆகியோர் எதிர்தரப்பினராகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# 10 இலட்சம் பேருக்கு பிரிட்டனில் நீரிழிவு

லண்டன்,ஜூலை3

பிரிட்டனில் சுமார் 10 இலட்சம் பேர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என ஆய்வில் தெரியவந்துள்ளது.

இவர்களில் பெரும்பாலோருக்கு தாங்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதே தெரியவில்லை என்பதும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்த 10 இலட்சம் பேரில் அதிகப்படியானோர் முதல்வகை, இரண்டாம் வகை நீரிழிவு நோயால்தான் பாதிக்கப்பட்டுள்ளனர். பிரிட்டனில் நீரிழிவு நோயால் பாதிப்போரின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

இந்நிலை தொடர்ந்தால் 2030இல் பிரிட்டனில் மொத்தம் 50 இலட்சம் பேர் நீரிழிவு நோயாளிகளாக இருப்பர். சரியில்லா உணவு முறையும், சுகாதாரமற்ற வாழ்க்கை முறையும் தான் நீரிழிவு நோய்க்கு முக்கிய காரணமாக உள்ளது. சரியில்லாத உணவு முறையால் உடல் அளவுக்கு அதிகமாக பருத்து நீரிழிவு நோய்க்கு வித்திடுகிறது.

இந்த விடயம் குறித்து பிரிட்டிஷ் மக்களிடம் போதிய விழிப்புணர்வு இல்லை. நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டோருக்கு மாரடைப்பு உள்ளிட்ட இதய நோய்கள், சிறுநீரகம் செயலிழப்பு, கண்பார்வை பறிபோதல் ஆகிய பாதிப்புகள் ஏற்படவும் வாய்ப்புள்ளது. ஆனால் இதுகுறித்தும் பெரும்பாலான பிரிட்டிஷ் மக்களிடம் போதிய விழிப்புணர்வு இல்லை என்பதும் ஆய்வில் தெரியவந்துள்ளது.



கனடா, ஒட்டாவா நகருக்கு வந்திருந்த எலிசபெத் மகாராணியாரை கனடா ஜனாதிபதி ஸ்டீபன் ஹார்பர், ரிடியு மாளிகையில் வரவேற்கிறார்.

உலக அரங்கில்

# ரஷ்ய உளவாளிகள் கைதால் இரு நாடுகளின் உறவு பாதிக்காது

## வெள்ளை மாளிகை அதிகாரி தெரிவிப்பு

வாஷிங்டன்,ஜூலை3

''ரஷ்ய உளவு நிறுவனத்திற்காக வேவு பார்த்த 10 பேர் கைது செய்யப்பட்டதால், அமெரிக்கா - ரஷ்யா உறவில் எந்த விதமான பாதிப்பும் ஏற்படாது'' என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

ரஷ்ய உளவு நிறுவனத்திற்காக, அமெரிக்காவில் வேவு பார்த்த 10 பேரை, பெடரல் புல னாய்வு நிறுவனத்தினர் கடந்த திங்களன்று கைதுசெய்தனர். இதனால், அமெரிக்கா - ரஷ்யா உறவில் பாதிப்புகள் ஏற்படலாம் என செய்திகள் வெளியாகின.

இது பற்றி நிருபர்களுக்குப் பேட்டியளித்த வெள்ளை மாளிகை பத்திரிகை பிரிவுச் செயலர் ரொபர்ட் கிப்ஸ் குறிப்பிடு கையில், "ஜனாதிபதி ஒபாமா நிர்வாகத்தில், அமெரிக்கா - ரஷ்யா உறவில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது'' என்றார்.

''ரஷ்ய உளவு நிறுவனத்திற்காக வேவு பார்த்தவர்கள், அமெரிக்காவின் பெடரல் புலனாய்வு நிறுவனத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதனால், இரு நாடுகளின் உறவில் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது. சட்ட அமுலாக்கப் பிரிவினர் தங்களின் கடமையைச் செய்துள்ளனர்'' என்றும் அவர் விவரித்தார்.

''ரஷ்ய உளவு நிறுவனத்திற்காக வேவு பார்த்தவர்கள் பற்றிய விவரம், ஜனாதிபதி ஒபாமாவுக்கு முன்னரே தெரியும். இருந்தாலும், கடந்த வாரத்தில் ரஷ்ய ஜனாதிபதி மெட்வடேவை, வெள்ளை மாளிகையில் சந்தித்தபோது, அவரிடம் இது பற்றி எதையும் ஜனாதிபதி ஒபாமா விவாதிக்கவில்லை'' என்றும் ரொபர்ட் கிப்ஸ் கூறினார்.

# முழு உடல் பரிசோதனை கருவியால் புற்றுநோய்

## அமெரிக்க விஞ்ஞானி எச்சரிக்கை

லண்டன்,ஜூலை3

விமானநிலையங்களில் முழு உடல் பரிசோதனை ஸ்கானர்களைப் பயன்படுத்தினால் பயணிகளுக்குப் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்புகள் அதிகரிக்கும் என்று அமெரிக்க விஞ்ஞானி தெரிவித்துள்ளார்.

கொலம்பியா பல்கலைக்கழகத்தின் கதிரியக்கவியல் ஆராய்ச்சி மையத் தலைவர் டேவிட் பிரென்னர், 'டெய்லி மெயில்' இதழுக்கு தாம் அளித்துள்ள பேட்டியொன்றில் இதுகுறித்து விளக்கியுள்ளார்.

''விமானநிலையங்களில் பயன்படுத்தப்படவிருக்கும் முழு உடல் ஸ்கானிங் கருவிகளிலிருந்து வெளியேறும் எக்ஸ்-ரே கதிர்கள் உடலுக்குத் தீமை விளைவிக்கக் கூடியவை. சாதாரணக் கருவிகளை விட இந்த வகை ஸ்கானர்கள் 20 மடங்கு கதிரியக்கத்தை வெளிப்படுத்தக் கூடியவை'' என அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

''குறிப்பாக குழந்தைகள் இந்தக் கதிரியக்கத்தால் அதிகம் பாதிக்கப்படுவர். ஸ்கானர்களிலிருந்து வெளிப்படும் கதிரியக்கம் காரணமாக தோல் புற்றுநோய் ஏற்பட அதிகம் வாய்ப்புள்ளது. எனவே, இது போன்ற முழு உடல் பரிசோதனை ஸ்கானர்களைப் பயன் படுத்துவதற்கு முன்னர் அதனால் ஏற்படும் விளைவுகளை ஆராய்ந்து, அதற்கேற்ப கருவியை வடிவமைப்பது நல்லது'' என்றும் டெய்லி மெயிலில் டேவிட் தெரிவித்துள்ளார்.

தீவிரவாத அச்சுறுத்தல் காரணமாக விமானநிலைய பாதுகாப்பு ஏற்பாடுகளில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த, உலக நாடுகள் முயற்சி செய்துவரும் வேளையில் பிரென்னரின் இந்தக் கருத்து முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

# ஜேர்மனியில் புதிய ஜனாதிபதி தெரிவு

பேர்ளின்,ஜூலை3

ஜேர்மன் ஜனாதிபதித் தேர்தலின் மூன்றாவது சுற்றில், புதிய ஜனாதிபதியாக உல்ப் தெரிவுசெய்யப்பட்டார். ஜேர்மனின் மிக இளவயது ஜனாதிபதி இவர்தான். இவருக்கு வயது 51.

ஜேர்மனியின் ஜனாதிபதியாக ஹார்ஸ்ட் கோஹ்லர் 2004ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் கடந்த மே மாதம் 31ஆம் திகதி தமது பதவியைத் திடீரென்று ராஜிநாமாச் செய்தார். இதைத் தொடர்ந்து புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்காகத் தேர்தல் நடந்தது.

இதில் கட்சிக்குள் தன் போட்டியாளராகக் கருதப்படும் கிறிஸ்டியன் உல்ப் என்பவரைப் பிரதமர் மார்க்கெல் நிறுத்தினார். இவர் 3ஆவது சுற்று நடந்த வாக்குப் பதிவில் வெற்றி பெற்றார்.

தேர்தலில் முழு பெரும்பான்மை பெற ஒருவர் 623 வாக்குகள் பெறவேண்டும். முதல் சுற்று வாக்குப்பதிவில் உல்புக்கு 2 டசின் வாக்குகள் குறைவாகக் கிடைத்தன. 2ஆவது சுற்றிலும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. 3ஆவது சுற்றில் 625 வாக்குகளை ஈட்டி வெற்றிபெற்றார்.

# ஊழல்கள் நிறைந்த 13 நாடுகளின் பட்டியல் வாஷிங்டனில் வெளியீடு

லண்டன்,ஜூலை3

உலகில் ஊழல் அதிகமாகப் பரவியுள்ள 13 நாடுகளின் பட்டியல் வெளியாகியுள்ளது. அரசு நிர்வாகமும் இந்த நாடுகளில் படுமோசமாக உள்ளது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'இந்தோ - டச் திட்ட மேலாண்மை சொசைட்டி' என்ற அமைப்பு, உலகின் பல்வேறு நாடுகளிலும், ஊழல் குறித்த ஆய்வை மேற்கொண்டது. இந்த ஆய்வின் அடிப்படையில், வாஷிங்டனை மையமாகக்கொண்டு செயற்படும் மேம்பாட்டுக்கான பயிற்சி மையம் என்ற அமைப்பு இந்த அறிக்கையைத் தயாரித்துள்ளது.

இந்த அறிக்கை, சமீபத்தில் லண்டனில் வெளியிடப்பட்டது. கௌதமாலா, பராகுவே, கானா, கென்யா, பெரு, ஆர்ஜென்ரீனா, ரஷ்யா, ருமேனியா, அல் பேனியா, மல்டோவா, போலந்து, இந்தோனேஷியா, இந்தியா ஆகிய நாடுகள் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. இந்த நாடுகளில் அரசின் நிர்வாகச் செயற்பாடும் மோசமாக உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

''இந்தியாவில் செயற்படும் அரசின் சுகாதார மையங்களில் 24 சதவீத பணியிடங்கள் வெற்றிடமாக உள்ளன. பொதுவான நோய்களுக்குத் தேவையான மருந்துகள் இங்கு கிடைப்பதில்லை. டாக்டர்கள் தங்கள் பணி நேரத்தில் இருப்பதில்லை. போலி டாக்டர்களின் எண்ணிக்கையும் அதிக மாக உள்ளது. இந்த 13 நாடுகளைச் சேர்ந்த மக்களில் பெரும்பாலானோர், உள்ளூர் பொலிஸாருக்கு இலஞ்சம் கொடுப்பவர் [illegible] ஆய்வில் தெ[illegible]

# ஜக்ஸன் மகனுக்கும் தோல் வெளுப்பு நோய்

லண்டன்,ஜூலை3

மறைந்த பொப் இசைப் பாடகர் மைக்கல் ஜக்ஸனின் மகனும் தோல் வெளுப்பு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். கடந்த ஆண்டு காலமான பொப் இசைப் பாடகர் மைக்கல் ஜக்ஸனுக்கு தோல் நோய் இருந்தது. முகமும், உடலும் வெளுத்த நிலையில் ஜக்ஸன் காணப்பட்டார்.

கறுப்பினத்தைச் சேர்ந்த ஜக்ஸன், 'பிளீச் சிங்' மூலம் தன் உடலை சிவப்பு நிறமாக்கிக் கொள்கிறார் எனக் கூறப்பட்டது. ஆனால், அவரை 'விலிடிகோ' என்ற தோல் நோய் தொற்றியிருந்தது. இதனால் ஒரு காலகட்டத்தில் கறுப்புத் தோல் நிறம் மாற ஆரம்பித்தது.

இதற்காக அவர் சிகிச்சை பெற்று வந்தார். தற்போது, இவரது மூத்த மகன் பிரின்ஸ் மைக்கலுக்கும் இந்த நோய் ஏற்பட்டுள்ளது. மைக்கல் ஜக்ஸனுடன் 1996ஆம் ஆண்டு முதல் 1999ஆம் ஆண்டுவரை வாழ்ந்த டெபி ரோ என்ற பெண்ணுக்குப் பிறந்த மகன் தான் பிரின்ஸ் மைக்கல்.

தற்போது 13 வயதாகும் பிரின்ஸுக்கு கைகளில் தோல் வெளுக்க ஆரம்பித்துள்ளது. மைக்கல் ஜக்ஸன் இறந்த பின், அவரைப் பற்றி பல வதந்திகள் கிளம்பின. அவர் ஆண்மை இல்லாதவர்; அவருடைய குழந்தைகள் யாருக்கோ பிறந்தவை எனக் கூறப்பட்டது.

[illegible] பிரின்ஸுக்கு ஏற்பட்டுள்ள தோல் நோய் பாரம்பரியமானது என்பதால், பிரின்ஸ், ஜக்ஸனுக்குப் பிறந்த மகன்தான் என்பது உறுதியாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதியின் பதவிக் காலம் இரு தடவைக்கு மேல் நீடிக்கும்

# அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆளும் கட்சிக்குள் அதிருப்தி என்ன செய்வதென தெரியாமல் ஜனாதிபதி மஹிந்த திகில்!

கொழும்பு,ஜூலை3

ஜனாதிபதியின் பதவிக் காலத்தை இரு தடவைகளுக்கு மேல் நீடிப்பது தொடர்பான அரசமைப்பு மாற்றத்துக்கு ஆளும் கட்சிக்குள் வலுவடைந்துள்ள எதிர்ப்புக் காரணமாக அந்த மாற்றத்தை செய்வதா? இல்லையா? என்ற நிலை மஹிந்தவுக்கு ஏற்பட்டுள்ளது.

கொழும்பு சிங்களப் பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

அந்தப் பத்திரிகையில் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு:-

ஜனாதிபதி ஒருவரின் பதவிக்காலம் இரு தடவைகளுக்கு மட்டுமே என வரையப்பட்டுள்ள விதியை நீக்கி வாழ்நாள் ஜனாதிபதியாகச் செயற்படும் நோக்கில் மேற்கொள்ளப்படவுள்ள அரசமைப்புத் திருத்தத்தைக் கைவிடுதா இல்லையா என்பது தொடர்பான பாரதூரமான சிக்கலுக்குள் ஜனாதிபதி சிக்கிக்கொண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏதோ விதத்தில் இந்த அரசமைப்புத் திருத்தம் முன்வைக்கப்படுமானால் நிச்சயமாக அது தோல்வியையே தழுவிக் கொள்ளும் என்ற சமிக்ஞை ஏற்கனவே தென்பட்டுள்ளதால்தான் ஜனாதிபதி திகிலடைந்துள்ளதாக அறிய முடிகிறது.

இந்த அரசமைப்புத் திருத்தம் முன்வைக்கப்படுமானால் அது எதிராகப் போர்க் கொடி தூக்கி எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கி வரும் இடதுசாரிக் கட்சிகள் ஏற்கனவே தெரிவித்திருக்கின்றன. அதேசமயம் சுதந்திரக் கட்சியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் எவரும் சாதகமான சிறு சமிக்ஞைகளைக் கூடக் காட்டாது மௌனம் காப்பது ஜனாதிபதியின் இத்திகிலுக்குக் காரணமாகியிருப்பதாகவும் தெரியவருகிறது.

இந்த நிலைப்பாட்டை அடுத்து அரசமைப்புத் திருத்தத்தை முன்வைப்பதா இல்லையா என்பது தொடர்பாகத் தமக்கு மிக நெருக்கமானவர்களிடம் ஆலோசனை பெற்று வருவதாகவும் அறிய முடிந்தது.

சிலவேளை, இந்த அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டுவருவதன் மூலம் அரசுக்குள் மிகச் சிறு பிளவொன்று கூட ஏற்பட்டாலும் அது அரசின் இருப்புக்கே பெரும் பாதிப்பாக அமைந்து உலை வைத்துவிட கூடுமென அவர்களுள் பெரும்பாலானோர் ஜனாதிபதிக்குத் எடுத்துக் கூறியுள்ளதாகவும் தெரிய வருகிறது என்று அந்தப் பத்திரிகை கூறுகிறது.

இதேவேளை ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து எல்லாவல மேதானந்த தேரர் நீக்கப்பட்டமையும் ஜனாதிபதிக்குப் பெரும் சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறது. வாழ் நாள் முழுவதிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே நிறை வேற்று அதிகார ஜனாதிபதியாகச் செயற் படுவதற்கு நாட்டின் அனைத்து மக்களும் ஏகோபித்த ஒத்துழைப்பை வழங்க வேண் டுமெனகோரிக்கை விடுத்தவர் இந்த மேதானந்த தேரரரே ஆவார். அவர் மூல மாக ஜாதிக ஹெல உறுமய கட்சியையும் வளைத்துப் போட்டு தமது எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளும் ஜனாதிபதியின் எண்ணமும் தவிடு பொடியாகிவிட்டது என்றும் அதே பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. (ஒ-22)

# தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை முன்வைத்தாலே சமாதானத்தை எட்டமுடியும்

## நாடாளுமன்றத்தில் அரியநேத்திரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை,3

மீள்குடியேற்றம் இடம்பெறும்போது வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து புத்தளத்தில் தங்கியுள்ள முஸ்லிம் மக்களும் மீள்குடியமர்த்தப்படவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. ப. அரியநேந்திரன் நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெயர்ந்த வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு -

உடனடியாக முன்னெடுப்பதற்கு அரசியல் தீர்வு உடனடி நூடில்ஸ் அல்ல என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். ஆனால், நாம் அந்த நூடில்ஸுக்காக பல வருடங்களாக ஏங்கிக்கிடக்கின்றோம்.

வடக்கு, கிழக்கு மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வை முன்வைத்தால் மட்டுமே உண்மையான சமாதானத்தைக் கொண்டு வர முடியும்.

உண்மையிலேயே சமாதானம் உள்ளது என்றால் காணாமல் போனவர்கள் திரும்பி வரவேண்டும். அப்படி இல்லாவிட்டால் அவர்களுக்கு நடந்தது என்னவென்று கண்டுபிடித்து அவர்களின் உறவினர்களிடம் தெரிவிக்கவேண்டும்.

ஆனால், இதற்கு பதிலாக வடக்கு - கிழக்கில் சிங்கள குடியேற்றங்களும் இராணுவ முகாம்களும் நிறுவப்படுகின்றன.

மட்டக்களப்பு வாகரையில் மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான ஆயிரத்து 500 ஏக்கர் நிலத்தில் படையினர் முகாம் அமைத்துள்ளனர். அந்தக் காணியை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்துக்கு மீண்டும் பெற்றுக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மட்டக்களப்பில் வீதிச் சோதனைச் சாவடிகள் இன்னும் அகற்றப்படவில்லை. கொக்கட்டிச்சோலை வீதியை மறித்து சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

அரச கட்டடங்களிலும் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. பட்டிப்பளை அரசின் பயிற்சி நிலையத்தில் பொலிஸ் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதுதவிர ஆலயங்களிலும் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. தாந்தமலை முருகன் கோவிலின் அருகில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சபையில் இது தொடர்பாக எத்தனை தடவைகள் பேசினாலும் தீர்வு கிடைப்பதில்லை. இந்த வரவு - செலவுத் திட்டத்தில் கூட வடக்கு - கிழக்கு மக்களுக்கு எதுவித தீர்வுமில்லை.

யுத்தத்தில் கலந்துகொண்ட படையினரின் நலன்களுக்காக பல திட்டங்கள் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளன. ஆனால், யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நலன்களுக்காக எதுவித திட்டங்களும் இதில் இல்லை.

கடந்த காலம், எதிர்காலம் மற்றும் நிகழ்காலம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டே வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். அப்படி எதுவும் இதில் பின்பற்றப்படவில்லை.

அகதிகள் முகாம்களில் பட்ட கஷ்டங்களை விட மீள்குடியமர்த்தப்பட்ட பின்பு அவர்கள் படுகின்ற கஷ்டங்களே அதிகம். அவர்கள் முகாமில் கூடுகள் போன்ற வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மீள்குடியேற்றம் இடம்பெறும்போது வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து புத்தளத்தில் தங்கியுள்ள முஸ்லிம் அகதிகளும் மீள்குடியமர்த்தப்படாமல் இழுத்தடிப்பதன் மூலம் அவர்களை வைத்து அரசு அரசியல் நடத்துகின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது. - இப்படி அரியநேந்திரன் தெரிவித்தார். (சி)

# தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தை விலை பேச முற்படுவோருக்கு எதிராக நீதிமன்றம் செல்ல வேண்டும்

## சிரேஷ்ட உப தலைவர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை3

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் கட்சியாக தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுவிட்டது. அதற்கு முன்னர், கூட்டமைப்பைப் பதிவு செய்வதற்கான ஒழுங்குகள் பூர்த்தியாகிவிட்ட நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட உள்ளதாகத் தகவல் அறிந்து அதிர்ச்சி அடைந்துள்ளதாகவும்-

தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவரும் 1956 ஆம் ஆண்டு தொடக்கம் அந்தக் கட்சியின் இலட்சியத்தில் இருந்து விலகாது உழைத்து வருபவருமான பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் -

தானும் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள கட்சித் தொண்டர்களும் இத்தகைய அதிர்ச்சியில் உறைந்திருந்ததை அவர்கள் தம்முடன் மேற்கொண்ட தொடர்புகள் மூலம் அறிந்துகொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் சி.க.சிற்றம்பலத்தின் (29.06.10 ஆம் திகதிய) அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவையாவது:-

இலங்கைத் தமிழரசுக்கட்சியை 1949 ஆம் ஆண்டில் தந்தை செல்வநாயகம் அவர்கள் ஆரம்பித்தபோது இதனை வெறும் கட்சியாக மட்டும் இனங்காணாது தமிழ் மக்களுக்கு விமோசனம் அளிக்கும் ஒரு இயக்கமாகவே இனங்கண்டார். இத்தகைய இயக்கம் தமிழ்மொழி பேசும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைக்கும் ஒரு சக்தியாக உருவெடுக்க வேண்டுமென்பதே அவரது கனாவாகும். இதனால்தான் தமிழ்த் தேசியம், தாயகம், சுயநிர்ணய உரிமை ஆகிய கோட்பாடுகளின் சின்னமாக 'வீடு' அமைந்தது. தந்தை செல்வநாயகம், தலைவர் அமிர்தலிங்கம் போன்ற தலைவர்களின் பாதங்கள் வடக்கு, கிழக்கின் பட்டிதொட்டி எங்கும் படியத் தமிழ்த் தேசியம் வலுவான சக்தியாக உருவெடுத்தது. தலைவர்களினது தியாகத்தாலும் தொண்டர்களது அர்ப்பணிப்பாலும், அப்பளுக்கற்ற தியாகத்தாலும், வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் இதயங்களில் வீட்டுச் சின்னமே தமக்கு விமோசனமளிப்பது என்ற எண்ணக்கரு உருவாகி ஆலவிருட்சமாக வளர்ச்சி பெற்றது. தமிழரசுக்கட்சி மேற்கொண்ட போராட்டங்களும் செய்து கொண்ட ஒப்பந்தங்களும் ஏனைய தமிழ்க் கட்சிகளை விட இதனை முதன்மை நிலைக்கு இட்டுச் சென்றன.

இருந்தும் நமக்குள் ஏட்டிக்குப்போட்டி போடும் அரசியலைத் தவிர்க்கும் நோக்கில் இக்கட்சி தமிழ்க்காங்கிரசுடன் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியாக உதய சூரியன் சின்னத்தில் இயங்கினாலும் தமிழரசுக் கட்சியின் முதன்மையும், தனித்துவமும் இக்கூட்டமைப்பில் பேணப்பட்டது. எனினும் சித்தாந்த ரீதியிலன்றி வெறும் ஒற்றுமைக்கான கூட்டமைப்பு என்ற கோஷத்தின் அடிப்படையில் ஏற்பட்ட இவ்விணைப் பின் விபரீத விளைவுகளை அண்மைக 'காலச் சம பவங்கள்' மட்டுமன்றி நடந்து முடிந்த தேர்தலும் துலாம்பரமாக எடுத்துக் காட்டியுள்ளன.

தமிழரசுக்கட்சியின் வீடுதான் தமிழர் தாயகத்தை இணைக்கும் மிக நீண்ட வரலாற்றுப் பாரம்பரியமுடைய சின்னம் என்பதாலும், ஏனைய தமிழ்க்கட்சிகளைப் போலன்றி வடக்கு, கிழக்கு மாகாணங்கள் முழுவதிலும் வியாபித்துள்ள கட்சி என்பதாலும் 2004 இல் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவான போது இதிலேதான் இக்கூட்டமைப்பினர் தேர்தலில் போட்டி போட வேண்டும்மென்று விடுதலைப் புலிகளும் விரும்பினர். இதனை ஏனைய கட்சிகளும் ஏற்றன. அன்று இக்கூட்டமைப்பு உருவான போது நல்லிணக்க அடிப்படையில் தான் ஒவ்வொருகட்சியும் செயற்பட்டன. எனினும் கடந்தகாலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடின்மையும், கடந்த தேர்தலில் நிற்போரை தெரிவுசெய்வதில் ஏற்பட்ட இழுபறிகளும், இதனால் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களும் ஒருகால் உள்வீட்டுப் பிள்ளைகளாயிருந்து பின்னர் விலகிச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் விதண்டாவாதங்களும், இத்தேர்தலில் போட்டி போட்டோர் பற்றித் தமிழரசுக் கட்சியின் தொண்டர்கள் மத்தியில் ஏற்பட்ட விமர்சனங்களும் இதன் விளைவாக அவர்கள் மத்தியில் கால் கொண்ட அக்கறையின்மையுமே வடபகுதியில் தமிழரசுக்கட்சியைக் களத்தில் பின்னடையச்செய்தன.

இப்பின்னணியில் அதுவும் கடந்தகால அனுபவங்கள் மத்தியில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பதிவு செய்தல் காலத்தின் தேவைதானா என்பது பற்றி மிக ஆழ மாகச சிந்திக்க வேண்டியதொன்றாக உள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைக் கட்டாயம் ஒரு கட்சியாகப் பதிவு செய்தல் வேண்டும். என்பதில் தலைவர்கள் முரண்பிடித்து ஒரு தலைப்பட்சமாகத் தீர்மானிக்கமுடியாது. மிக நீண்ட ஜனநாயகப் பாரம்பரியத்தை உடைய இக்கட்சியில் இதற்கான வழிமுறைகள் பல உள. மத்தியகுழு, பொதுச்சபை ஆகியனவற்றுள் இது பற்றி விவாதிக்கப்படல் வேண்டும். இவையே கட்சியின் கொள்கை, எதிர்காலத்திட்டங்கள் ஆகியவற்றை வகுக்கும் கருவிகளாகும். மகாநாடு முடிந்து ஆறு மாதங்களாகியும் இவற்றைக் கூட்டி கட்சித் தொண்டர்களுடன் கருத்துக்களைப் பரிமாறத் தலைமைப்பீடம் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளாத சூழலில் மத்திய குழுவைக் கூட்டும்படி 02.06.2010 இல் தலைவர், செயலாளர் ஆகியோருக்கு கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் என்ற ரீதியில் ஒரு கடிதத்தினை அனுப்பி இருந்தோம். கடிதம் கிடைத்தது என்று கூடப்பதிவில்லை.

### தலைமைப் பீடத்தின் எதேச்சதிகாரம

பொதுவாகக் கட்சித் தொண்டர்கள் மத்தியிலும் தலைமைப்பீடம் தங்களைக் கலந்தாலோசிக்காது தன்னிச்சையாகச் செயற்படுகிறது என்ற கருத்து நிலவுகின்றது. தலைமைப்பீடம் ஏதேச்சையாகச் செயற்பட்டதை அண்மைக்கால நிகழ்வுகளும் எடுத்துக்காட்டியுள்ளன. எவ்வாறிருப்பினும் மிக நீண்ட ஜனநாயகப் பின்னணியுடைய இக்கட்சியில் இத்தகைய போக்கினை அனுமதிக்கமுடியாது.

இனியும் காலந்தாழ்த்தாது உடனே கட்சியின் மத்திய குழுவையும் பொதுக் குழுவையும் கூட்டல் வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்படும் நடவடிக்கை பற்றி அலசி ஆராயப்படவேண்டும். இவ்வாறு பதிவு செய்யப்படும் போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சின்னம் யாது என்பதில் தெளிவு வேண்டும். எக்காரணங்கொண்டும் வீட்டுச்சின்னத்தை பரிமாற்றம் செய்ய முடியாது. விலை பேசவும் முடியாது. காரணம். இன்று இவ்வீட்டுச் சின்னம் தமிழரசுக் கட்சியின் தியாகிகளின் நினைவாலயமாகவும் மிளிர்கின்றது.

தலைவர்களதும் தொண்டர்களதும் கண்ணீராலும் செந்நீராலும் வளர்க்கப்பட்ட இத் தமிழரசுக் கட்சி என்ற ஆலமரத்தைப் "புது முகங்கள்" வெட்டித் தறிக்கத் தமிழரசுக் கட்சியின் தொண்டர்கள் இடங்கொடுககக்கூடாது. அவ்வாறு இடங்கொடுத்தால் இப்புது முகங்களே தாம் தாம் "நவயுக தியாகிகள்" எனத் தம்பட்டம் அடித்துக் கொண்டு நமது தலைவர்கள் செய்த தியாகத்தையும் எம்கட்சியின் தியாக வரலாற்றையும் குழிதோட்டிப் புதைத்து விடுவார்கள். இவ்வாறு நடைபெற்றால் தந்தை செல்வநாயகம், கோப்பாய்க் கோமான் வன்னியசிங்கம், இரும்பு மனிதன் நாகநாதன், திருமலை இராசவரோதயம், பட்டிருப்பு இராசமாணிக்கம் தலைவர் அமிர்தலிங்கம் போன்றோரையும் அவர்களின் பங்களிப்பு களையும் எதிர்காலச்சந்ததியினர் அறியாவண்ணம் இவ் நவ உலகத்தியாகிகள் புறந்தள்ளி விடுவார்கள்.

இன்றெல்லாம் கட்சிகளைப் புனரமைக்கும் பணி ஈழத்தில் நடைபெறுகின்றது. இத்தகைய பணியிலே தான் இலங்கைத் தமிழரசுக்கட்சியும் எனியும் காலந்தாழ்த்தாது இறங்கவேண்டும். எவராவது தமிழ் ரசுக் கட்சியின் வீட்டுச்சின்னத்தையோ அன்றி இதன் கொடியையோ சுயநலத்திற்காக விலைபேச முற்பட்டால் நீதிமன்றம் சென்றாவது இதனைத் தடுத்து நிறுத்துதல் ஒவ்வொரு தமிழரசுக்கட்சியின் தொண்டனின் தலையாய கடமை என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். - என்று உள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு நாணயங்களைக் கடத்த உதவிய விமானப்படை சார்ஜன்ட் ஒருவர் நேற்றுக் கைது!

கொழும்பு, ஜூலை 03

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து சிங்கப்பூர் செல்லவிருந்த பயணி ஒருவருக்கு, வெளிநாட்டு நாணயத் தாள்களை எடுத்துச்செல்ல உதவிய விமானப் படை சார்ஜன்ட் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டு நாணயத் தாள்கள் அடங்கிய பையை வைத்திருந்த சந்தேக நபரை, விமான நிலைய மற்றும் சிவில் விமான சேவைகள் நிறுவனத்தின் பாதுகாப்புப் பிரிவினர் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் கைது செய்தனர் எனத் தெரியவருகிறது.

சந்தேக நபரான விமானப்படை சார்ஜன்ட், வெளிநாட்டு நாணயத் தாள்கள் அடங்கிய பையை விமான நிலையக் கழிவறை அருகில் சிங்கப்பூர் செல்லவிருந்த பயணியிடம் கொடுத்தபோதே அவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரும், சிங்கப்பூர் செல்லவிருந்தவரும் வெளிநாட்டு நாணயங்களுடன் சுங்கத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என விமான நிலையப் பாதுகாப்புப் பிரிவு தெரிவித்தது.

கைதுசெய்யப்பட்ட சார்ஜன்ட் தொடர்பாக, நீண்ட நாள்களாகச் சந்தேகம் நிலவியதால், விமானப் படையினரும் விமான நிலையப் பாதுகாப்புப் பிரிவினரும் அவரைக் கண்காணித்து வந்தனர் என விமானப்படைப் பேச்சாளர் குரூப் கப்டன் ஜனக்க நாணயக்கார கூறினார்.

விமானப்படை சார்ஜனுக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்படுமென அவர் மேலும் கூறினார். (அ-சி)

## மனித உரிமை ஆர்வலர்களுக்கு இந்தியாவில் கௌரவிப்பு

கொழும்பு,ஜூலை3

தமிழர்கள் 7 பேர் உட்பட 17 மனித உரிமை ஆர்வலர்களுக்கு இந்தியாவிலுள்ள இந்திரா காந்தி திறந்த பல்கலைக்கழகம், பெங்களூர் பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து இந்திய புனர்வாழ்வுச் சபை பட்டங்களை வழங்கி கௌரவித்துள்ளது.

அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, முன்னாள் பிரதி அமைச்சர் வி.புத்திரசிகாமணி ஆகியோரும் பட்டங்கள் பெற்றனர்.

8 பேருக்கு பேராசிரியர் விருதும், 5 பேருக்கு கலாநிதி விருதும், 4 பேருக்கு விஸ்ப பந்து விருதும் அவர்களின் சமூக, சமாதான சேவைகளைப் பாராட்டி வழங்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் ஜெய்ப்பூரிலுள்ள ராஜபுதன செரட்டன் ஹோட்டலில் இந்த விருது வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரதராஜப்பெருமாள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தப் பேச்சு தொடர்பாக தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் செயலாளர் சிவாஜிலிங்கம் 'உதயனு'க்குத் தெரிவித்தவை வருமாறு:-

இந்தப் பேச்சில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய விடுதலை முன்னணி ஆகிய கட்சிகள் பங்குகொள்ளவில்லை.

இந்தக் கட்சிகளின் கூட்டமைப்புக்குத் தமிழ்க் கட்சிகளின் ஒன்றியம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. ஆனால், இந்த ஒன்றியத்தில் உள்ள கட்சிகள் ஒன்றாகச் செயற்பட்டாலும் எந்தவொரு தேர்தலிலும் ஒன்றிணைந்து செயற்படா.

அத்துடன், தமிழ்க் கட்சிகளின் ஒன்றியத்துக்கான கதவுகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காகத் திறந்துவிடப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மீள்குடியேற்றம், இராணுவக் குடியிருப்பு, இராணுவ மயமாக்கல், உயர் பாதுகாப்பு வலயம், இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள காணிகள் தொடர்பாக எவ்வாறான அணுகுமுறையைக் கடைப்பிடிப்பது என்பன தொடர்பாக ஆராய ஒவ்வொரு கட்சியிலிருந்தும் ஒவ்வொரு பிரதிநிதி அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுக் கூட்டம் நாளை காலை 10 மணிமுதல் ஒரு மணிவரை நடைபெறவுள்ளது.

அத்துடன், எதிர்வரும் 7ஆம் திகதி தமிழ்க் கட்சிகளின் கூட்டம் இடம்பெறும்.

- இப்படி சிவாஜிலிங்கம் தெரிவித்தார். (ஒ-சி)

## ஆஸியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்கொலை செய்துகொள்ள முயற்சித்துள்ளார். சுமார் ஒரு மணித்தியாலத்தின் பின்னர் மயக்கமான நிலையில் காணப்பட்ட இவரை அங்கு கடமையில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தனர். இதனால் அவர் உயிர்பிழைத்தார்.

கிறிஸ்மஸ் தீவில் உள்ள தடுப்பு முகாமில் இதுபோன்ற தற்கொலை முயற்சிகள் இடம்பெற்றுள்ளன. ஏற்கனவே இங்கு நால்வர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைத் தமிழ் அகதிகள் தொடர்பாக ஆஸ்திரேலி யப் பிரதமர் ஜூலி யர் கில்லர்ட் இந்த வாரம் தீர்மானம் எடுக்க உள்ள நிலை யில் இத்தற்கொலை முயற்சிகள் அங்கு மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

## பிரச்சினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உலகத்துக்கு வழிகாட்ட முடிந்தது தொடர்பாக இலங்கை இன்று மகிழ்ச்சியடைகின்றது. இலங்கையில் சமாதானத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த உக்ரேன் வழங்கிய உதவிகளுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். - என்றார் ஜனாதிபதி. (அ-சி)

## ஜனாதிபதியும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நபர் பிரேரணையை ஐ.தே.கவின் எம்.பி ரவி கருணாநாயக்க ஏற்கனவே நாடாளுமன்றில் விவாதத்துக்காகச் சமர்ப்பித்திருந்தார்.

இந்தப் பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள முடியாது என்று அரசதரப்பினர் அன்றைய தினம் கூறினர். ஆனால், இதை விவாதத்துக்கு எடுக்கவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் ஒட்டுமொத்தமாகக் கூறினர். ஆனால், இது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து ஒரு முடிவை அறிவிக்கும்வரை இதை விவாதத்துக்கு எடுக்காமல் இடைநிறுத்தி வைப்பதாக சபாநாயகர் அன்றைய தினம் கூறினார்.

இந்தப் பிரேரணையை ஆராய்ந்து பார்த்த சபாநாயகர் நேற்று இது தொடர்பான அவரது தீர்ப்பை வெளியிட்டார்.

இந்த அறிவிப்பைக் கேட்டு ரவி கருணாநாயக்க எம்.பி., எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் மேசைகளில் தட்டி மகிழ்ச்சியை வெளியிட்டனர். (அ-சி)



## மரண அறிவித்தல்

### திருமதி நேசம்மா அருளப்பு



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் நவாலி C.PM லேனை வதிவிடமாகவும் கொண்ட நேசம்மா அருளப்பு நேற்று (02.07.2010) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தியா அருளப்புவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஞானமுத்து- விக்ரோறியா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சந்தியா- கத்தலின் தம் பதிகளின் அன்பு மருமகளும் மேரி றெஜினா, கென்றி இருதயராசா, புளோறன்ஸ் ஜெபமணி, லயனல் புஸ்பராசா ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற அருமைநாதன் (அப்புத்துரை) மற்றும் இந்தி ராணி, காலஞ்சென்ற அமிர்தநாயகம் மற்றும் மீனா ஆகியோரின் அன்பு மாமியும் அன்ரன் றெஜினோல்ட், அன்ரன் றுசெயின், அன்ரன் டெனால்ட், பிறின்சி, ஆன்சிராணி, றொசாந்தன், றொகான், காலஞ்சென்ற கேமா றொசாணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (03.07.2010) சனிக்கிழமை பி.ப. 4 மணிக்கு நவாலி கத்தோலிக்க சேமக்காலையில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

C.PM வீதி,
நவாலி.

தகவல்,
அ.கென்றி இருதயராஜா (மகன்).


# புனர்வாழ்வு என்ற பெயரில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

### அமைச்சரின் அனுமதியுடன் கால்நடை கடத்தல்

வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்குப் பதிலாக எமது மக்களிடம் எஞ்சி இருக்கின்ற கால்நடைகளைக்கூட அபகரித்துச் செல்கின்றனர். அண்மையில் வவுனியாவிலும், மன்னாரிலும் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைக் கூட்டத்திலும் நான் இதனைத் தெரிவித்திருந்தேன். கால்நடைகளை அபகரித்துச்சென்ற ஒரு வாகனத்தை நெடுங்கேணியில் வைத்து பொலிஸார் வழிமறித்தனர். கடத்திச் சென்றவர்கள் மீள்குடியேற்ற அமைச்சருடன் தொடர்பு கொண்டு அவரின் அனுமதியுடன் தமது செயலைத் தொடர்ந்தனர். இதுபோன்ற இன்னும் ஏராளமான சம்பவங்கள் நடைபெறுவதாகத் தகவல்கள் வருகின்றன.

சொந்த மக்களின்மீது மூர்க்கத்தனமான போரைத் தொடுத்து, லட்சக்கணக்கில் அவர்களை வலுக்கட்டாயமாக இடம்பெயர வைத்து, அந்த இடப்பெயர்வு நேரத்திலும் ஏராளமான உயிர்களைப் பலியெடுத்து, முட்கம்பி வேலிகளுக்கு மத்தியில் அவர்களை ஓராண்டுக்கும் மேலாகத் தடுத்து வைத்து, இப்பொழுது மீள்குடியேற்றம் என்ற பெயரில் வனாந்தரத்தில் விட்டுவிட்டு அவர்களிடம் நீங்களும் இலங்கையர்கள்தான் என்று வீரவசனம் பேசி அவர்களைக் காட்டி வெளிநாடுகளின் உதவியைப் பெறத்துடிக்கும் இந்த அரசு அவர்களில் 25 ஆயிரம் பேருக்கு 750 கோடி ரூபாவை மட்டும் ஒதுக்கியுள்ளது. இத்தொகை எதற்குப் பயன்படப்போகின்றது? எஞ்சியுள்ளவர்களின் கதி என்ன?

### இதுவா புனர்வாழ்வு?

வெலிக்கந்தை, கந்தக்காடு பகுதியில் முன்னாள் போராளிகள் என்று இனங்காணப்பட்டவர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பது என்ற பெயரில் அவர்களைக் காடுகள் அழிக்கும் தொழிலில் பாதுகாப்புத்துறையினர் ஈடுபடுத்துகின்றனர். இவர்களிடமிருந்து கடினமான உழைப்பைக் கசக்கிப் பிழிந்து வாங்குகின்றனர். இது என்ன புனர்வாழ்வு என்பதை சம்பந்தப்பட்டவர்கள் இச்சபைக்குத் தெரிவிக்க வேண்டும்.

அவர்களுக்குச் சுகாதாரமான குடிதண்ணீர், சத்தான உணவு, சுகாதார வசதி என்பவை மறுக்கப்படுகின்றன. அங்குள்ள ஆற்றுநீர் ஒருவித மஞ்சள்நிறத்துடன் உள்ளது. முன்னர் அந்த நீரைக் காய்ச்சிக் கொடுத்தனர். இப்பொழுது அப்படியே குடிக்கச் சொல்கின்றனர். முன்பு தங்களுடைய உணவைத் தாங்களே சமைத்துக்கொண்டனர். இப்பொழுது பாதுகாப்புப் படையினர் சமைத்துக்கொடுக்கின்றனர். அதில் எது இருந்தாலும் அப்படியே உண்ணவேண்டும் என்று கட்டளையிடுகின்றனர்.

இங்குள்ளவர்களுக்கு தலையிடி, காய்ச்சல் என்றால்கூட அவர்களுக்கு ஓய்வு அளிக்கப்பட்டு மருத்துவம் செய்வதில்லை. இயலாதபட்சத்தில் படுக்கையில் கிடக்கும்போது மட்டுமே அவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். ஓராண்டுக்குள் அனைவரும் விடுவிக்கப்படுவர் என்று அறிவிக்கப்பட்ட போதிலும் இன்றுவரை அவ்வாறு நடைபெறவில்லை.

### வன்னியில் பிடிபட்டவர்கள் கிரிமினல்கள் அல்லர்

வன்னியில் பிடிபட்டவர்கள் ஒன்றும் கிரிமினல் குற்றவாளிகள் அல்லர். இந்த நாட்டில் மாறிமாறி வந்த அரசுகள் தமிழினத்தின் மீது ஏற்படுத்திய துவேசம்தான் இந்நிலையைத் தோற்றுவித்தது. எனவே அதற்கு இன்றைய அரசும் பொறுப்பேற்று அவர்கள் அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கி அவர்களை விடுதலை செய்ய வேண்டும்.

முக்கிய புலி உறுப்பினர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஆனால், அவர்களுக்கு ஆதரவு வழங்கினர் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளவர்கள் எத்தகைய வழக்கும் இன்றி, விசாரணையும் இன்றி பல ஆண்டுகளாக இந்நாட்டின் சிறைகளில் சிறைவாசம் அனுபவிக்கின்றனர். இவர்கள் அனைவருமே விடுவிக்கப்படவேண்டும்.

### இலட்சக்கணக்கான வீடுகள் சிதைத்து அழிப்பு

லட்சக்கணக்கான வீடுகள் அடையாளம் தெரியாமல் சிதைக்கப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட வடக்கு, கிழக்கில் வாழும் அனைத்து மக்களுமே மன உளைச்சலுடன் தமது வாழ்க்கையைத் தொடர்கின்றனர்.

வன்னிப் பிரதேசத்தில் பொதுமக்களின் காணிகளைப் பாதுகாப்புத்துறையினர் தங்களது தேவைக்காக எடுத்துக்கொள்ளப் போகின்றனர் என்று ஜனாதிபதி உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள், சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகிய அனைவரிடமும் மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறிப்பாக, முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட திருமுறிகண்டி, இந்துபுரம், கிளிநொச்சி மாவட்டத்தின் ஒரு பகுதியான சாந்தபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தற்போது செட்டிகுளம் முகாமிலும், முறிகண்டி, கிளிநொச்சி பாடசாலைகளிலும் தங்கியுள்ளனர்.

இவர்கள் தங்களது சொந்த இடங்களுக்குப் போகமுடியாதுள்ளதையிட்டு மிகுந்த மனவேதனையுடன் உள்ளனர். இவர்களுக்குத் தங்களது சொந்த இடத்துக்குச் செல்வதற்கான உரிமை மறுக்கப்பட்டுள்ளது. எமது மக்களுக்குத் தங்களது சொந்த இடத்தில் குடியமர்வதற்கு அனுமதி அளிக்கப்படவேண்டும். இதுகுறித்து ஜனாதிபதியுடன் நடந்த சந்திப்பிலும், முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்திலும் நாங்கள் பேசியும் இதுவரை எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.

வவுனியா சேமமடு பகுதியில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுவிட்டதாக அரச அதிபர் அறிவித்துள்ள போதிலும், இன்றுவரை மக்கள் அங்கு மீள்குடியேற்றப்படவில்லை என்பதுடன், தங்களது பகுதியைப் பார்வையிடக்கூட அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் மீள்குடியேற்றப்படும் போதே அவர்களது காணிகளைத் துப்புரவாக்கிக் கொடுக்கும் பணியும் முடிக்கப்பட்டிருக்கவேண்டும். அந்தப் பகுதியில் விரைவாக மீள்குடியேற்றம் செய்தால்தான் பெரும்போக விவசாயத்தை அந்த மக்கள் மேற்கொள்ள முடியும்.

### நட்டஈடு வழங்கவேண்டும்

இறுதிக்கட்ட யுத்தத்தில் கொல்லப்பட்ட அனைத்துத் தமிழ்மக்களுக்கும் நட்டஈடு வழங்கப்படவேண்டும். யுத்தத்தில் உடல் உறுப்புகளை இழந்த அனைவருக்கும் நட்டஈடு வழங்கப்படுவதுடன், அவர்களது வாழ்வாதாரத்துக்கான உத்தரவாதத்தையும் வழங்கவேண்டும். இன்னும் யாருடன் யுத்தம் புரிவதற்காகப் பாதுகாப்புத்துறைக்கு 20 ஆயிரத்து 200 கோடி நிதி ஒதுக்கீடு?

வன்னியில் போர் நடந்த பகுதிகளில் இன்னும் வீதிகள் சரியாகப் புனரமைக்கப்படவில்லை. மக்கள் குடியேற்றப்பட்ட கிராமங்களின் உள்வீதிகள் சரியாக சீர் செய்யப்படவில்லை. வன்னி பிரதேசத்தின் அனைத்துக் கிராமங்களையும் போக்குவரத்தின் ஊடாக இணைப்பதற்குத் தேவையான பஸ் சேவைகளை மக்களின் நலன்கருதி உடனடியாகவும், இடைவிடாதும் மேற்கொள்ளப்படவேண்டும்.

இதற்குத் தேவையான பஸ்களை ஒதுக்கவேண்டும். மீள்குடியேறிய தனது சொந்தக் கிராமத்திலிருந்து அருகிலுள்ள நகரப் பகுதிகளுக்குச் செல்வதற்கு அந்த மக்களுக்கு ஒரே ஒரு பஸ் மட்டுமே இயக்கப்படுகின்றது. இந்த பஸ்ஸில் அவர்கள் காலையில் சென்றால் மாலையில் மட்டுமே வீடு திரும்ப முடியும். இதற்கிடையில் அந்த மக்களுக்கு ஏதேனும் வருத்தம், துன்பம் ஏற்பட்டாலோ அல்லது வேறு எதுவும் அவசியப் பணிகள் ஏற்பட்டாலோ அவர்கள் ஏதும் செய்யமுடியாத நிலையிலேயே உள்ளனர்.

மொத்தத்தில் இந்த இடைக்கால வரவு -செலவுத் திட்டமானது ஒரு கண்ணில் சுண்ணாம்பையும், ஒரு கண்ணில் வெண்ணெயையும் கொண்டதாகவே அமைந்துள்ளது. பாதிக்கப்பட்ட - சீரழிந்த தமிழ் மக்களின் கைகளில் திருவோட்டையும், செழிப்புடன் இருக்கும் இந்நாட்டின் உயர் பதவிகளில் இருப்பவர்களின் தொகுதிகளுக்கு மட்டும் அபிவிருத்தியையும் கொடுக்கக்கூடியதாகவே தயாரிக்கப்பட்டுள்ளது.

- இப்படி அவர் கூறினார். (ஒ-சி)

## ஐ.நாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஆண்டு மே மாதம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த பான் கீ - மூனும் இலங்கை அரசும் விடுத்திருந்த கூட்டறிக்கையில் மனித உரிமைகள் விடயம் முக்கியமாகக் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)


A/L 2012 தமிழ்

திரு.சிவா

சனி, ஞாயிறு 2 Pm

தனிப்பாட அனுமதி உண்டு

யூனிவேர்சல்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org